இலவச வெளியீடு: GERMANY , ENGLAND பங்குனி.March. 2017
Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy
மணி 67
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

# பெண் என்னும் பேராச்சரியம்!







T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Page.9

கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740
Page.04

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
Page.28




தொகுப்பு: ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்

**வுப்பெற்றால் நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 12.05.2017 | Hünefeld Str 63B |
| **தேர்த்திருவிழா** | 20.05.2017 | 42285. Wuppertal. |
| தீர்த்ததிருவிழா | 21.05.2017 | 0202 479 6017 |

**கையில் புறோன் கந்தசாமி கோயில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 20.05.2017 | Siemens Str 11 |
| **தேர்த்திருவிழா** | 28.05.2017 | 74177 Bad Friedrichshall |
| தீர்த்தத் திருவிழா | 29.05.2017 | 071 31 205 93 43 |

**சுட்காட் விநாயகர் ஆலயம்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 03.06. 2017 | Lehmfeld Str 18. |
| **தேர்த்திருவிழா** | 11.06.2017 | 70374 Stuttgart. |
| தீர்த்தத்திருவிழா | 12.06. 2017 | 07191 960 793 |

**ஹம் காமாட்சிஅம்பாள் ஆலயம்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 12.06.2017 | Siegenbeck Str 04 - 05 |
| **தேர்த்திருவிழா** | 25.06.2017 | 59071 Hamm - Untrop |
| தீர்த்தத்திருவிழா | 26.06.2017 | 02388 302223. |

**டோட்மூண்ட் சிவன்கோவில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 24.06.2017 | Kiefer Str 24 |
| **தேர்த்திருவிழா** | 02.07.2017 | 44225 Dortmund |
| தீர்த்தத்திருவிழா | 03.07.2017 | 0231 72 51 51 65 |

**நாகபுசணி அம்பாள் கோவில் பிறாங்போட்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 25.06.2017 | Adalbert Str 61 |
| **தேர்த்திருவிழா** | 08.07.2017 | 60486 Frankfurt/M |
| தீர்த்தத்திருவிழா | 09.07.2017 | 069 979 45 618 |

**எசன் முருகன்கோவில்**

| | | |
|---|---|---|
| திருவிழா ஆரம்பம் | 01.07.2017 | Kloster Str 49 a, |
| **தேர்த்திருவிழா** | 09.07.2017 | 45139 Essan |
| தீர்த்தத்திருவிழா | 10.07.2017 | 0201 80 67 433. |

**கொமர்ஸ்பாக் குறிஞ்சிக் குமரன் முருகன்கோவில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 01.07.2017 | Industrie Str 7 |
| **தேர்த்திருவிழா** | 09.07.2017 | 51643 Gummersbach |
| தீர்த்தத்திருவிழா | 10.07.2017 | 02261 501 5964 |

**கிறிபீல்ட் நாகபுசணி அம்பாள் கோவில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 01.07.2017 | Girmesgath 85, |
| **தேர்த்திருவிழா** | 09:07.2017 | 47803 Krefeld. |
| தீர்த்தத்திருவிழா | 10.07.2017 | 02151 565 00 45 |

**ஹம் திருநல்லூர் ஆறுமுகவேல்அழகன் ஆலயம்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 15.07.2017 | Room Str 2a |
| **தேர்த்திருவிழா** | 23.07.2017 | 59065 Hamm |
| தீர்த்தத்திருவிழா | 24.07.2017 | 02381 26092. |

**சுவெற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்**

| | | |
|---|---|---|
| கோடியேற்றம் | 22.07.2017 | Robert koch Str 5a |
| **தேர்த்திருவிழா** | 30.07.2017 | 58239 Schwerte. |
| தீர்த்தத்திருவிழா | 31.07.2017 | 02304 167 21 |

**கிஸ்கெம் ரெக் கனக துர்க்கா அம்பாள் ஆலயம் சுட்காட்**

| | | |
|---|---|---|
| அலங்கார உற்சவம் | 22.07.2017 | Alleen Str 18-20 |
| தேர்த்திருவிழா | 30.07.2017 | 73230 Kirchheim.U./Teck |
| தீர்த்தத்திருவிழா | 31.07.2017 | 07021 807 43 99 |

**ஹம் சித்திவிநாயகர் ஆலயம்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 29.07.2017 | Ferdinand Poggel Str 25 |
| **தேர்த்திருவிழா** | 06.08.2017 | 59065 Hamm. |
| தீர்த்தத்திருவிழா | 07.08.2017 | 02381 162 686 |

**கனோபர் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 21.07.2017 | Carl Buderus Str 3a |
| **தேர்த்திருவிழா** | 29.07.2017 | 30455 Hannover |
| தீர்த்தத்திருவிழா | 30.07.2017 | 0511 47 11 49 |

**முல்கயிம் முத்துக்குமாரன் கோவில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 11.08.2017 | Neurather Weg 11 |
| **தேர்த்திருவிழா** | 20.08.2017 | 51063 Köln. 0221 340 44 84. |

**பீலபீல்ட் கல்யாண முருகன் கோவில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 12.08.2017 | Begaweg 11 |
| **தேர்த்திருவிழா** | 20.08.2017 | 33649 Bielefde |
| தீர்த்தத்திருவிழா | 21.08.2017 | 0176 414 156 41 |

**கல்புறோன் கந்தசாமிகோவில்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 21.07.2017 | Siemens Str 11. |
| அலங்காரத் தேர் | 29.07.2017 | 74177 Bad Friedrichshall. |
| | | 07136 2706 244 |

**பக்நாங்- ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயம்**

| | | |
|---|---|---|
| திருவிழா ஆரம்பம் | 07.07.2017 | Sulzbacher Str.56 |
| | 16.07.2017 | 71522 Backnang |
| பூங்காவனம் | 17.07.2017 | |









ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள்






நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு

50.000 - 122.000 யூரோ அரசாங்கம் வழங்கும் குறைந்த வட்டிப் (0,5%) பணத்தைப் பெற்றிடவும், மற்றும் வீடு கட்டுவதற்கோ அல்லது வாங்குவதற்கோ தேவையான சகல வங்கிரீதியான, சட்டரீதியான (Notar) உதவிகளையும் மிகக் குறுகிய காலத்தில் செய்து தருகின்றோம்!

வீட்டுக்கடன்
1,0%
வட்டிவீதத்திலிருந்து

தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/10876361
0152/53961138
Th. Gobinath



திருக்கணித ஜோதிடம்


ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க
ஓசை 246



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம் )

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

பங்குனி 08 பெண்கள் தினத்தை
சிறப்பிக்கும் கௌரவ ஆசிரியர்கள்

திவ்வியா சுஜேன் (இலங்கை)
றஜினா தருமராஜா (யேர்மனி)
சிவஜெனனி அரவிந்தன் (இங்கிலாந்து)

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962
Vettimaniy Ltd
Company No: 8876276

# பங்குனி மாத வெற்றிமணி பத்திரிகையின் கௌரவ ஆசிரியர்களாக பெண்கள் கௌரவிப்பு!







**திவ்வியா சுஜேன்** (இலங்கை) **றஜினா தருமராஜா** (யேர்மனி) **சிவஜெனனி அரவிந்தன்** (இங்கிலாந்து)

பங்குனி மாத வெற்றிமணி பெண்கள் தினம் (பங்குனி 08) ஆக ஒலிக்கிறது. இம்மாத வெற்றிமணியில் எண்பது வீதம் பெண்களே கட்டுரைகள் எழுதியுள்ளனர்.
இன்று வெற்றிமணியில் வரும் ஆக்கங்கள் இளைய தலைமுறையினரின் படைப்பக்களே அதிகம். அவர்களது விவேகம், தேடல்கள் யாவும் எம்மை வியப்பில் ஆழ்த்த வல்லன. அவற்றைவிட ஆச்சரியமானது அவர்களது தாய்மொழி அறிவு.

தாயகத்தில் இருந்து கலைப்பணியாற்றும் கலாசூரி திவ்யா சுஜேன், யேர்மனியில் வசிக்கும் சிறந்த தமிழ்மொழி பற்றாளரும் பரநாட்டிய வித்தகியும் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளருமான றஜினா தருமராஜா, மற்றும் அறிவியல் கட்டுரைகளை எழுதுபவர், சமூகசிந்தனையார். இங்கிலாந்தில் வசிக்கும் சிவஜெனனி அரவிந்தன், இவர்கள் மூவரையும் பெண்கள் தினம் கொண்டாடும் இவ்வேளை அவர்களைக் கௌரிவிக்கும் விதமாக இம்மாத வெற்றிமணியின் கௌரவ ஆசிரியர்காளாக நியமித்துக் கௌரவிக்கின்றது.
இவர்களது ஆக்கங்கள் பலரது பாராட்டையும் பெற்றவை. புலம்பெயர்ந்த நாட்டில் தாம் பெற்ற அறிவை தமிழ் மொழியில் வெளிப்படுத்தும் இவர்களை வெற்றிமணி பாராட்டி மகிழ்கின்றது.

# ஓங்கி அடித்தால் ஒன்பது தொன் சிங்கம் என்று தன்னைச் சொன்னது புரியுது!

சபதம் போட்டு தாதா முகத்தை சசிகலா காட்டியபோது நடுநடுங்கிப் போனார்கள்!

சென்னை: ஜெயலலிதா நினைவிடத்தில் சசிகலா சபதம் போட்டு தாம் பெண் தாதா என்பதை வெளிப்படுத்திய போது அருகே இருந்தவர்களும் அதனை தொலைக் காட்சியில் பாரத்தவர்களும் வெலவெலத்துப் போனார்கள்.

பெண் தாதா சசிகலாவோ முதல்வர் பதவி கிடைக்காத விரக்தியில் வெறித்தனமாக ஒரு பெண் தாதாவைப் போல செயல்படுகிறார் என தமிழக காங். கமிட்டி தலைவர் ஈவி கே.எஸ்.இளங்கோவன் கூறியிருந்தார். அதை ஜெயலலிதாவின் நினைவிடத்தில் வெளிப்படுத்தினார் சசிகலா.

சென்றமாதம் பெங்களூரு சிறைக்குப் போவதற்கு முன்னர் ஜெயலலிதா நினைவிடத்துக்கு போய் 3 முறை சமாதியில் ஓங்கி அடித்து சத்தியம் செய்து தாதாவை போலவே ஆவேசமாக சபதமெடுத்துக் கொண்டார். தமிழ் படங்களில் வரும் இடைவேளைக்கு முன்னைய காட்சியை அது நினைவு படுத்தியது. அது போதாது என்று சிறை செல்வதற்கு ஒரு வரத்திற்கு முன், தான் ஒரு சிங்கம் என்று பேசியும் இருகிறார். ஆனால் சிங்கம் (2) இரண்டா சிங்கம் (3)மூன்றா? அல்லது அடுத்து வரவிருக்கும் சிங்கம் 4 எது என்பது தெரியவில்லை.




அதனால்தான் என்னவோ சிங்கம் படத்தில் வந்த - ஓங்கியடித்தால் ஒன்பது தொன்- என்பது போல் இருந்தது அவர் அடித்து பண்ணிய சத்தியத்தின் வேகம். அப்போது யாரையோ அழிப்பேன் என்றெல்லாம் முனகினார். அது யார் யார் என்பது அவருக்கே வெளிச்சம்.

அவர் அடித்து சத்தியம் எடுத்த விதம் யாரையோ அடிப்பது போலவே இருந்தது. நாற்காலிக்கனவுகள் பலிக்காத கோபம். அதனைக் காட்டவே அந்த வேகம். சின்னம்மா மீது எவருக்கும் கோபம் இல்லை. கோபம் எல்லாம் அம்மா ஜெயலலிதா மீதே. இத்தனை நாளாக எப்படி சசிகலாவை தன்னுடன் வைத்திருந்தார் என்பதே அக்கோபம் ஆகும். தவறுகள் யார்தான் விடவில்லை. மறைக்கத் தெரிந்தவர்கள் மன்னர்கள், தெரியாதவர்கள் அடிமைகள் என்றாகி விட்டதோ!


Hamm நகரில்....
YOGAN
IMPORT&EXPORT
அழகிய பட்டுச் சேலைகள் Party சாறிகள் மற்றும்
மங்கையர் மனங்கவரும் பஞ்சாபிகள்
அனைத்திற்கும் நாடுங்கள்
உங்கள் இலத்திற்கு வேண்டிய சமையல்
உபகரணங்கள் அனைத்தும் மலிவாகக் கிடைக்கும்.
02381 / 9735620 - 0163 23 17 927
Hamm Hbf,ல் இருந்து 500 மீற்றர் அருகில்.
Hugo-Küching-Str .6 - 59067 Hamm








# பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான்

கௌசி






பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான்

"பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான்
புவிபேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மாந்தர்
மாதர் அறிவைக் கொடுத்தார்கள் "

ஞானம் என்னும் பொருள் வைக்கப்பட்டுள்ள இடம் பெண் என்பதை மகாகவிபாரதி உலகுக்கு வெளிப்படுத்திச் சென்றுள்ளார். எனவே தான், மனிதனை வாழவைக்கும் இந்தப் பூமியைப் பூமாதேவி என்றும் ஆகாயத்தை ஆகாயவாணி என்றும் கடலைக் கடலன்னை என்றும் நதிகளைக் கங்கை என்றும் காவேரியென்றும் எங்கெங்கும் இயற்கை சக்திகளில் பெண்வடிவம் காண்கின்றோம். கல்வி, செல்வம், வீரம் இம் மூன்றும் பெறக் கலைமகள், அலைமகள், மலைமகள், என முச்சக்திகளான பெண்தெய்வங்களை வழிபட வேண்டியது அவசியமாகின்றது.
ஒரு பெண் வாழும் வீடு சிறப்பாய் அமைந்தாலேயே நாடும் சிறப்புறும் வீடுகள் நிறைந்ததுதான் நாடு. எனவே, இல்லறத்தை ஒரு பெண் நல்லறமாக்காதுவிடில் உலகு உவகை கொள்வது எங்கே? உயர்ச்சி யடைவது எங்கே? உலகத்தை வளர்த்து வாழவைக்கும் புத்தகங்களாகவும் கலைகளாகவும் கல்விக் கழகங்களாகவும் பெண்கள் விளங்குகின்றனர்" எனப் பெண்கள் பற்றிச் ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார். எனவே உலகமே அவள் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்பது வெள்ளிடைமலை.

இவ்வாறு உலகத்திற்குப் பெருமை சேர்க்கும் பெண்ணைப் பொதுவாகவே கவிஞர்கள், கொடிக்கு உவமைப்படுத்துவார்கள். கொடி மென்மையானது. பூத்துக்குலுங்கும் கொடியானது, ஒரு பற்றுக்கோடு கொண்டே படரும். அந்தக்கொடியான கொழுகொம்பின்றி படராதுவிடுமேயானால், நீண்டு வளராது. புதராகப் படர்ந்து காணப்படும். கொழுகொம்பிலே படரும்போது நிறைந்த பூக்களைத் தந்து கொழுகொம்பையே அழகாக்கும் தன்மையைக் கொண்டிருக்கும். கொடி கொழுகொம்பிற்கு அழகைத் தருதல் போல பெண்ணானவள் தன் கணவனைக் களிப்புறச் செய்கின்றாள். பூக்களைத் தந்து கொடி மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருதல் போல பிள்ளைகளைப் பெற்று சமூகத்திற்குச் சிறந்த பணியாற்றுகின்றாள். கணவன் என்னும் கொழுகொம்பைப் படர்ந்து வாழுகின்றாள். இளமையில் பெற்றோரில் தங்கித் திருமணத்தின் பின் கணவனில் தங்கி முதுமையில் பிள்ளைகளில் தங்கி வாழும் பண்பு பின்தங்கியவளாகவே அவளை ஆக்கிவிடுகின்றது. பெண்ணின் கருணை, பொறுமை, சகிப்புத்தன்மை, மென்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இவையனைத்தும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் ஆண்வர்க்கம், அவளை அடிமைப்படுத்துவது காலாகாலமாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

ஆனால், இன்று இந்நிலைகளை உடைத்தெறிந்து பெண்வர்க்கம் துணிந்து முன்னேற்றம் கண்டுள்ளது. ரேடியத்தை உலகுக்களித்த மேரிகியூரி அம்மையார், விஞ்ஞான உலகில் முத்திரை பதித்தவர். முறையான கல்வி வசதியில்லாத நிலையிலேயே 18ம் நூற்றாண்டு கரோலின் கர்ஷேல் என்னும் விண்வெளி வீராங்கனை 3 புதிய நட்சத்திரக்கூட்டம், 8 வால்நட்சத்திரம் மற்றும் பல கிரகங்களைக் கண்டு பிடித்துள்ளார்.

ஆயினும் ஐரோப்பிய மண்ணில் கூட அடக்குமுறை தலைவிரித்தாடியது. 16 ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான பெண்கள் சூனியக்காரிகள் என்று உயிருடன் தீ வைத்துக் கொழுத் தப்பட்டனர். அவர்கள் செய்த சூன்யம் என்னவென்றால், ஆண்மருத்துவர்கள் இருக்கும் போதே நோயுற்றவர்களைத் திறமையான முறையில் சிகிச்சை யளித்து குணமாக்கியமையே ஆகும். இவ்வாறு பெண்மையின் இயல்பான ஞானத்தில் பொறாமை கொண்ட ஆண்வர்க்கம், பெண் இனத்தின் அடக்குமுறையை வளர்த்து
கொண்டிருந்த போது 1910ம் ஆண்டு டென்மார்க்கிலுள்ள கொப்பன்காகன் (Koppenhagen) என்னும் இடத்தில் கிளாராசெற்கின் (Clarazetkin) என்பவர் ஒரே தொழில்புரியும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமான வருமானம் கிடைத்தல் வேண்டும், கர்ப்பம் அடைந்த பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படல் வேண்டும், பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படல் வேண்டும், என கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்தார். இவர் தூக்கிய போர்க்கொடியே மகளிர்தினத்திற்கு அடிகோலியது. 1917ல் இரஷ்யாவிலுள்ள Sanktpetersburg என்னும் இடத்தில் ஆரம்பத்த பெண் ஆடைத்தொழிலாளிகளின் வேலைநிறுத்தத்தை நினைவுகூறுமுகமாக 1921 பங்குனி 8ல் சர்வதேச மகளிர்தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. தற்பொழுது வருடாவருடம் உலகலாவிய ரீதியில் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.
உலகத்தை உய்வடையச் செய்யும் பெண்கள் தமது பொறுப்பை உணர்ந்து கடமை தவறாது கண்ணியமாக வாழ்க்கையை நல்லமுறையில் நடத்தினால், உலகு உவகை கொள்ளும் என்பது திண்ணம்.

16 வது ஆண்டு நிறைவான சேவை
Kaneen Electronics
புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு
தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை பொருத்த சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள்
புதிய சட்டத்திற்கமைய வியாபார ஸ்தாபனங்களுக்கு
சட்டபூர் Barcode Kasse பொருத்துவதற்கும், சகல Smart TV, Alarm, Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet, கருவிகளை பொருத்துவதற்கும், பழுதுபார்த்தல்க்கும் சகல மங்கள நிகழ்வுகளையும் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கும் Lyca IP-TV Box lபெற்றுக்கொள்வதற்கும்.Deepam TV உங்கள் விளம்பரங்களை செய்வதற்கும் மரண அறிவித்தல்கள் தொடர்புகளுக்கும் நாடுங்கள்
Schevenhoferweg-24
42111 Wuppertal
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de

Adava Brida
1 Etage Brück str 20-26
44135 Dortmund
02343258759 / 015204124756 / 017672787821
*Bridal Make-up
*Hochzeit make-up
*Puberty make-up
*Christian make-up
*Facial
*Wimpernverlängerung
*Waxing
*Blumenkette
NANTHA FOTO



ESTM Jewellery Dortmund
எங்கள் சேவை
• திருமண ஆபரணங்கள்
• ஓடர் நகைகள்
• திருத்த வேலைகள்
தாலிக்குப் பொன்னுருக்குதல்
• காது மூக்குக்குத்துதல்
E.S.T
Our Service
• Wedding Jewellery
• Jewellery Order
Quick Repair of Jewellery
• Wedding Rituals
• Ear and Nose piercing
பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்
ESTM Jewellery | Rheinische Str. 73a | 44137 Dortmund | Tel.: 0231 / 1899023 | Mobil: 01633642642





சென்ற ஆண்டு நமது வாடிக்கையாளர்கள் அளித்த மாபெரும் அதரவிற்கு நன்றி
Bochum
முற்பதிவுக்கு முந்துங்கள்
Lucky Fly Reisebüro
2017 கோடை கால விடுமுறைக்கான முற்பதிவுக்கு முந்துங்கள்!
இந்தியா செல்வதற்கான 1 மாத,2.மாத,3.மாத விசாக்கள் பெற்றுத்தரப்படும்
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Allee Str.38-40a
44793 Bochum
www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de
எசன் மாநகரில் புதிய கிளை நிறுவனம்.
Altendorfer Str:266
45143 Essen
Germany
Tel: 0201 8009 3749
Mob:No: 0179 1484 892
Sommer Angebot
Frankfurt-Colombo
Ab 599€-630€
+Bhan -ticket
+40 Kg von Frankfurt
முந்துங்கள்!!!
குறுகிய காலத்திற்கு மட்டுமே இச்சலுகை
Lucky Fly Reisebüro
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749
Mob:No: 0179 1484 892
கொழும்பு விமான நிலையத்தில் இருந்து உங்கள் இடத்திற்கு அழைத்துச்செல்ல பிரத்தியேக பிரயாண ஒழுங்கள் (Car,Van, Bus ) செய்து தரப்படும்.
Graphic Design Vettimaniy Ltd
Lucky Fly Reisebüro
Summer Holidays 2017
air port pickups
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
துரித பணமாற்றுச் சேவை!!!
MoneyGram.
WESTERN UNION WU
moving money for better

# இரகசியம் ஆனால் உண்மை!!!

Lena Jus
Bj Zentrum

நீடித்த சந்தோஷத்தில்
நிறவுதரும் வாழ்க்கை
என்றும் நிலைத்திருக்கும்

ஒரு Cup கோப்பியில் உங்களின் மகிழ்ச்சி

மகிழ்வின் உச்சம் அது

**Lena Café**



பருகுங்கள் பலன் பெருகும்



யேர்மனி உட்பட
ஐரோப்பா முழுவதும்
முகவர்கள் தேவை

இது ஒரு கோப்பி மட்டுமே,பக்கவிளைவுகள் எதுவுமில்லை.
இல்லறத்தில் இணைந்துள்ள ஆண்கள் அனைவரும்
எந்த வயதிலும் இந்தக் கோப்பியைப் பருகலாம்.

சர்க்கரை நோயால் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டவர்களும் மீண்டும் பலம்பெறலாம்.

தொடர்புகளுக்கு:

**Burkhard Jung** தமிழில் உரையாடலாம்.**0151 2793 7382**

**வெற்றிமணியில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 0163 199 2333**

புதிய விளம்பரங்களுக்கு மாதம் தோறும் 14ம் திகதிக்கு முன் தொரடர்பு கொள்ளவும்

TKS BEST FOODS



உங்களின் அன்றாட
தேவைகளுக்கும், உங்களின்
வேண்டுகோளுக்குமிணங்க
தரம் என்ற தாரக மந்திரத்துடன்
நியாயமான விலைகளுடன்
பலசரக்கு பொருட்கள்,
மரக்கறி வகைகள்
மீன் வகைகள்
அனைத்தும் எம்மிடம்!

**Dortmund நகரில்**



+49 231 950 468 81 | +49 231 950 468 82
info@tks-bestfoods.de | www.tks-bestfoods.de
tksbestfoods | Rheinische Str. 79, 44137 Dortmund

# TKS BEST FOODS

Asia Afro & Europäische Lebenamittel Einzelhandel

Tel: 0231 950 46 881 Fax:0231 950 46 882

Dr.நிரோஷனின்

அதிசய உலகம்







# நமது கண்களால் நிகழ்காலத்தைத் தானா பார்க்கின்றோம்?

நாம் நிகழ்காலத்தில் வாழ்கின்றோம் என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை. இப்படி நிகழ்காலத்தில் வாழும் நாம் நமது கண்களாலும் நிகழ் காலத்தைத்தானா பார்க்கின்றோம்? என்ன வழக்கம் போல் உங்கள் எல்லோரையும் குழப்ப ஆரம்பித்துவிட்டேனா? இல்லை நண்பர்களே, நான் கேட்கும் கேள்விக்கு ஒரு அர்த்தம் இருக்கிறது. நிகழ்காலத்தில் வாழும் நாம் நமது கண்களாலும் நிகழ்காலத்தைத்தானா பார்க்கின்றோம்? இதை என்னிடம் கேட்டால், நான் இல்லை என்று தான் கூறுவேன். நிகழ்காலத்தில் வாழும் நாம் நமது கண்களால் எப்போதுமே இறந்தகாலத்தை மட்டும் தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம்! அட, அது எப்படி முடியும் என்று நீங்கள் கேட்டால், தொடர்ந்து படியுங்கள்...





நமது கண்களால் ஒரு பொருளைப் பார்ப்பது என்றால் என்ன? உதாரணத்திற்குச் சூரியனில் இருந்து அனுப்பப்பட்ட ஒளி, பூமியில் நமது சுற்றுப்புறத்தில் உள்ள எதாவது ஒரு பொருளில் பட்டுத் தெறித்து நமது கண்களை அடையும்போது, அந்தப் பொருள் நமக்குத் தெரிகின்றது என்கிறோம். ஆனால் இதில் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், ஒளி ஒரு பொருளில் பட்டுத் தெறித்து நமது கண்களை அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரம் எடுக்கும்.

ஒளி ஒரு நொடியில் ஏறத்தாழ 300,000 km தூரம் செல்கிறது. ஆகவே, இந்த ஒளி ஒரே ஒரு நொடியில் மட்டுமே பூமியிலிருந்து சந்திரனுக்குச் சென்றுவிடும். அதேபோல் ஒளி ஒரே ஒரு நொடியில் நமது புவியை 7 தடவைகளுக்கு மேல் சுற்றிவிடும். ஏன், தற்போது புவியில் காணப்படும் அதிவேக ஏவூர்தி (Rocket) கூட ஒரு நொடியில் 15 km மட்டும் தான் செல்கிறது. உண்மையைச் சொல்லப்போனால் ஐன்ஸ்டைனின் சார்பியல் கோட்பாட்டின் (Theory of Relativity) அடிப்படையில் ஒளியின் வேகம் தான் இந்தப் பிரபஞ்சத்தின் வேக எல்லையாகும். எனவே, ஒளியின் வேகத்தை நம்மால் கற்பனை கூடப் பண்ண முடியாது.

இப்படி கற்பனையே பண்ணமுடியாத இந்த ஒளியின் வேகம், பூமியில் இருக்கும் வரை தான் பிரம்மாண்டமாக இருக்கிறது. விண்வெளியிலோ இந்த வேகம் மிகவும் சிறிதாகிவிடும். உதாரணத்திற்குச் சூரியனை எடுத்துக்கொள்வோம். பூமியில் இருந்து சூரியன் 149,600,000 km தூரத்தில் இருக்கிறது. ஆகவே, சூரியனில் இருந்து புறப்படும் ஒளி நமது பூமியை வந்தடைய ஏறத்தாழ 8 நிமிடங்கள் எடுக்கின்றது. என்ன 8 நிமிடங்களா?

## இந்த நொடியில் சூரியன் அழிந்தாலும் நமக்கு அடுத்த நிமிடமே தெரியாது!

அப்படி என்றால் நாம் மேலே பார்க்கும் அந்தச் சூரியன் உண்மையில் 8 நிமிடங்களுக்கு முன்பு ,இருந்த சூரியன் தானா? ஆமாம், நாம் எப்போதுமே 8 நிமிடங்களுக்கு முன்பு இருந்த சூரியனைத்தான் மேலே பார்க்கின்றோம். ஏன், இதோ இந்த நொடியில் கூட அந்தச் சூரியன் அழிந்துவிட்டால் நமக்கு 8 நிமிடங்களுக்குப்பின்பு தான் சூரியன் இல்லாமல் போனதே தெரியவரும்.

எனவே, மேலே குறித்தது போல் ஒளியின் வேகம் காரணத்தால் ஒளி ஒரு பொருளில் பட்டுத் தெறித்து நமது கண்களை அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரம் எடுக்கும். இப்போது புரிகிறதா ஏன் நாம் எப்போதுமே இறந்தகாலத்தை மட்டுமே நமது கண்களால் பார்க்கின்றோம் என்று? இல்லையா? சரி பரவாயில்லை, இந்த விஷயத்தை இப்படிப் பார்ப்போம்.

உங்களுக்கு முன்னால் உங்கள் நண்பன் ஒருவன் 1 மீட்டர் தூரத்தில் நிற்கிறார் என்று எடுத்துக்கொள்வோம். அவரை நாம் நமது கண்களால் பார்க்கவேண்டும் என்றால், ஒளி அவரில் பட்டுத்தெறித்து நமது கண்களை வந்தடையவேண்டும். குறிப்பாக ஒளி அவரில் பட்டுத்தெறித்து சரியாக 1 மீட்டர் தூரம் சென்று நமது கண்களை அடைந்தால் மட்டும் தான் நமக்கு அவரைத் தெரியும். அப்படியென்றால் ஒரு நொடியில் 300,000 km (அல்லது 300,000,000 மீட்டர்) தூரம் செல்லும் ஒளி, 1 மீட்டர் செல்வதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? ஒளி ஒரு மீட்டர் செல்வதற்கு கிட்டத்தட்ட 0.000000003 நொடி எடுக்கும். சரி சரி, 0,000000003 நொடி என்றால் நம்மால் உணரக்கூட முடியாத ஒரு குறுகிய நேரம் தான், இருந்தாலும் அதுவும் ஒரு நேரம் தானே?

எனவே, 1 மீட்டர் தூரத்தில் நிற்கும் உங்கள் நண்பனின் உருவத்தை 0,000000003 நொடிக்குப் பின்பு தான் உங்களது கண்களுடன் காண்கிறீர்கள். அதாவது, அந்த நண்பனின் உருவம் நிகழ்காலத்தில் இருந்தாலும், நீங்கள் உங்கள் கண்களால் பார்க்கும் அந்த உருவம் இறந்தகாலத்தில், குறிப்பாக 0,000000003 நொடிக்கு முன்பு இருந்த உருவமாகத் தான் இருக்கிறது.

நண்பர்களே, எந்த ஒரு பொருளை எடுத்துக்கொண்டாலும், அது எவ்வளவு தூரத்தில் இருந்தாலும், அந்தப் பொருளில் பட்டுத்தெறித்து வரும் ஒளி நமது கண்களை வந்தடைய, ஒளியின் வேகத்தின் காரணத்தால், ஒரு குறிப்பிட்ட நேரம் எடுக்கும். எனவே நான் ஆரம்பத்தில் கூறியது போல், நிகழ்காலத்தில் நாம் வாழ்ந்தாலும் நமது கண்களால் எப்போதுமே இறந்தகாலத்தை மட்டும் தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம்! இது மறுக்கமுடியாத ஒரு அறிவியல் உண்மை ஆகும்.



# அகவை (15)




நெதர்லாந்தது, றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலைக்கு
அகவை (15) பதினைந்து – 27-01-2017



அன்னைத் தமிழின் கன்னல் சுவையை
சின்னக் குழந்தைகள் அள்ளிப் பருகிட
முன்னைச் செய்த தவமோ ? எமக்கு
முத்தாய்க் கிடைத்த றோர்மொண்ட் தமிழ்ப் பள்ளியே ?
நின்னைத் தொழுகின்றோம். நித்தம் வாழ்த்திடுவோம்.
நிலத்தை இழந்தாலும் புலத்தில் தமிழ் வளர்க்கின்றாய் !
அகவை பதினைந்தில், அழகாய்ச் சிரிக்கின்றாய் !
உவகை மிகக் கொண்டோம்.
உளம் நிறைந்து வாழ்த்துகின்றோம் !
அன்னைத் தமிழே !
நீ ஆலவிருட்ச்சமாய் அந்நிய நாடெல்லாம் விழுதூன்றி,
தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் ஒலிக்கச் செய்வாய் !
தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம்
**றோர்மொண்ட் – நெதர்லாந்து**



### தன் கணவனை இனிக் கடித்துக் குதறப்போகிறாளா?

## வினோதமான முறையில்
## பீட்சாவை மணந்த 18 வயது பெண்



தனது அம்மம்மாவின் திருமண ஆடைளை எடுத்து தான் அணிந்து கொண்டாள். நான் பிட்ஷாவை மணப்பதற்கு முதலில் பெடியங்களே என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். தனது திருமண உடை அழுக்காகிவிடும் என்ற கவலை அம்மம்மாவிற்கு மற்றும் படி பேத்தி பற்றி கலையில்லை.

விரும்பியதை அடைவதுதானே மகிழ்ச்சியான வாழ்க்கை. பிற்ஷா பிடித்தது கட்டிக்கொண்டேன். முத்தம் கொடுத்தேன் ஏன் கடித்துக் குதறியும் விட்டேன். இப்படி எல்லாம் ஒரு ஆண்மகனைக் கட்டினால் பண்ணலாமா? அதிகம் யோசிக்க வேண்டாம்.

பீட்சா மீது கொண்ட அளவில்லா பிரியத்தினால், 18 வயது பெண் தனது வாழ்க்கையின் துணையாக பீட்சாவை மணந்த சம்பவம் இங்கிலாந்தில் இடம்பெற்றுள்ளது. இங்கிலாந்தை சேர்ந்த 18 வயதான கிறிஸ்டினா வாக்னர் எனும் பெண், பீட்சா மீது கொண்ட அளவில்லா பிரியம் காரணமாக பீட்சாக்களை திருமணம் செய்து கொண்டார்.

கிறிஸ்டினா அதிகமாக பீட்சா உண்டதால், பீட்சா மீது காதல் ஏற்பட்டுள்ளது. எனவே பீட்சாவையே திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளார். மேலும் தனது பாட்டியின் திருமண உடையை அணிந்து பீட்சாவை மணந்துள்ளார்.

### எந்த முத்தம் இயல்பானது சுவையானது




பீட்சாவை தான் திருமணம் செய்து கொண்டதாகவும், அதை தன் கணவராக ஏற்றுக் கொண்டதாகவும், கிறிஸ்டினா தனது பேஸ்புக் பதிவின் மூலம் தகவல் பகிர்ந்துள்ளார். இதை ஒரு விசித்திர நிகழ்வாக அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தன் கணவனை இனிக் கடித்துக் குதறப்போகிறாளா?








# ஓயும்வரை ஓட்டம் .....

## கனகசபேசன் அகிலன்

இதுவரை காலமும் இதை நான் எவருக்கும் கூறவில்லை, சில வருடங்களுக்கு முன் என்னை ஒருவன் துப்பாக்கியால் சுட்டு விட்டு ஓடிவிட்டான், நிலத்தில் விழுந்துவிட்டேன், இரத்தப்பெருக்கு, என்னை சுற்றி ஆம்புலன்சும் , டாக்டர்களும், சனக்கூட்டமும்! ஒரு டாக்டர் என் உறவினருடன் கதைப்பது சிறிதாக கேட்டது " உயிரை காப்பாத்த முடியாது, இவர் இன்னும் முப்பது நிமிடங்கள் மட்டில் தான் உயிரோடிருப்பார், அவருக்கு விருப்பமானதை செயுங்கள்" என்று. என்னடா இது, என் வாழ்க்கை இப்படியா முடியப்போகிறது? எனக்குள் பல கேள்விகள், இந்த குறுகிய நேரத்தில் என் குடும்பத்தை பார்ப்பதா? உலகெங்கும் அவதிப்படும், நான் பார்த்தும் பாராமலும் வாழ்ந்துகொடிருக்கும், எமது உறவுகளை பார்ப்பதா? இல்லை இந்தச் சிறிது நேரத்தையும் எனக்கு விருப்பமான ஏதாவதொன்றில் செலவழித்து விட்டு சுயநலவாதியாகவே இறந்து விடுவதா? என்று மனம் பதைபதைத்துக் கொண்டிருந்தது, திடீரென "அப்பா,அப்பா" என்று ஒரு குரல், திடுக்கிட்டு விழித்தெழுந்தேன். என்னை இறப்பில் இருந்து விடுவித்து நித்திரையால் எழுப்பியது எனது மகன். ஆமாம் இது ஒரு கனவுதான், உண்மையாக எனக்கு வந்த கனவு. எனக்காக உங்கள் இதயம் விரைவாக துடித்திருந்தால் மன்னிக்கவும். அட, தப்பீட்டான்யா என்று மனம் புழுங்குபவர்களுக்கும் சேர்த்துத்தான்! என் உயிர் இன்னமும் என் உடலில், ஏதோ ஒரு மூலையில், ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது.

என்னை எழுப்பிய என் மகன், அதிர்ச்சியால் உறைந்து போன என்னை பார்த்து பேசத் தொடங்கினான் "அப்பா, அப்பா, ஏனப்பா நித்திரையிலை கத்தினனீங்கள்? அதை கேட்கத்தான் உங்களை எழுப்பினனான், ஆனால் உங்களுக்கு இன்னுமொன்று சொல்ல வேண்டும். " எனது இருதயம் இப்பவும் அதி வேகமாகவே அடித்து கொண்டிருந்தது, காரணத்தை அவனுக்கு கூறி அவனையும் பயப்பட வைக்க வேண்டாமேயென நினைத்து, அவனிடம் கேட்டேன் "என்ன சொல்லப்போறிங்கள் தம்பி?சொல்லுங்கோ" என்று. அவன் தொடர்ந்தான் "அப்பா, நீங்கள் இன்னும் பத்து வருசத்திலை சாகப் போறீங்கள் என்று உங்களுக்கு தெரியுமோ?" என்று. எனது இருதயம் இன்னும் வேகமாக அடிக்க தொடங்கியது. "சரி, கனவில் முப்பது நிமிடங்கள் தான் தந்தார்கள், இவனாவது பத்து வருடங்கள் தந்திருக்கிறானே " என்று மனதில் நினைத்து அவனை இழுத்து என்னுடன் அணைத்தபடி, இனி என்ன செய்யலாம் என யோசித்தேன். எனது அப்பாவும் சரியாக அந்த வயதிலேயே, இளமையில் இறந்தது என்மனதில் வந்து போனது. "குழந்தையும், தெய்வமும் ஒன்று" என்று சொல்லுவார்கள், கடவுள் தான் இவன் மூலமாக எனக்கு ஏதோ செய்தி சொல்ல நினைக்கிறாரோ என நினைத்து அவனிடம் பேச்சை தொடர்ந்தேன். " தம்பி, ஏனணை அப்படி சொன்னனி ? அப்பா இறந்துபோனால் உங்களுக்கு கவலை இல்லையே?" என்று கேட்டேன். அதற்கு அவன் பதில் "இல்லையப்பா, நான் கணக்கு போட்டு பார்த்தனான், மைக்கேல் ஜக்சனும் (Michael Jackson) அந்த வயதில் தான் இறந்தவர், அப்படி பார்க்கேக்கை உங்களுக்கு இன்னும் பத்து வருஷம் தான் இருக்கு" என்று கூறி முடித்தான். உலகப்புகழ் பெற்ற மைகேல் ஜக்சனே இறந்து போனான் இவர் உயிரோடே இருந்து என்ன செய்யப்போறார் என்று நினைத்தானோ என்னவோ!

அதுக்கு மேல் நான் அவனை எதுவும் கேட்கவில்லை, "இனிமேல் கணக்கு பார்க்கிறதென்றால் எதாவது கல்லு மண்ணை வைச்சு பாருங்கோ, அப்பாவின் உயிரோடை விளையாடக்கூடாது " என்று சொல்லி அனுப்பிவிட்டேன். கனவில் நடந்த இறப்பில் இருந்து நான் இன்னமும் முழுதாக மீளவில்லை, திரும்பவும் திரும்பவும் அந்தச்சம்பவங்களை இரைமீட்டேன், அன்று நான் அதற்கு பிறகு உறங்கவில்லை, இது உண்மையிலையே எனக்கு நடந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? நான் இந்த முடிவுக்கு தயாரா? என் குடும்பமும், உறவினர்களும், நண்பர்களும் தயாரா?என்று எனக்குள் பல கேள்விகள்.

## மாணவிகள் குத்தாட்டம்"
## இது பெரும் குற்றமா!



எனக்கு உண்மையில் இன்னும் இந்த உலகில் எவ்வளவு காலம் இருக்கிறது , அந்த நேரத்தை யாரோடு, எப்படி , எப்படியான விடயங்களில் செலவழிக்க வேண்டும், எனக்கு ஏதாவது நடந்தால் என்னை சுற்றி இருப்பவர்களை எப்படி தயார் செய்வது என்று சில நிமிடங்கள் மனதில் போராட்டம்.
உண்மையில், மனிதனின் இயற்கையான சுபாவத்தை பார்த்தோமேயானால், அவனது மனது இயல்பாக இன்பத்தையே நாடுகிறது. அந்த இன்பத்தை நிரந்தரமாக தக்க வைக்கவே அவன் படாதபாடுபட்டு, ஓயாமல் உழைக் கிறான். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பொறுப்புகள் என சில விடயங்கள் அவனின் ஆனந்தத்தை அளவுக்கு மீறாமல், ஒரு கட்டுக்குள் நிறுத்தி வைத்துள்ளது. இவை எல்லாவற்றையும் எடுத்து விட்டால் அவனொரு சுதந்திரமான சந்தோசத்தையே தேடிப்பறந்துகொண்டிருக்கும் ஆனந்தப் பறவை! உலகத்தின் நலமான இயக்கத்திற்கு பல கட்டுப்பாடுகள் அவசியம் ஆனால் நாங்கள் அதிகமான கட்டுப்பாடுகளுக்குள்ளும், கடமை களுக்குள்ளும், பொறுப்புகளுக்குள்ளும் புதைந்து வாழ்க்கையை முழுமை யாக அனுபவிக்காமலே இறந்து விடுகிறோமோ? என்று ஒரு சிறு கேள்விக்குறி.

அண்மையில் பல இணையத்தளங்களில் வந்த ஒரு செய்தியை பார்த்திருப்பீர்கள், "யாழ்ப்பாண பிரபல பாடசாலையொன்றின் பழைய மாணவிகள் குத்தாட்டம்" என்று அந்த செய்தி இருந்தது. இப்படியான விடயங்கள் எல்லாம் ஒரு பெரிய விடயமாக வெளிவரும் நிலை இப்போது வந்து விட்டது. தங்கள் குடும்பத்துடன் சென்று ஒரு மாலை பொழுதை சந்தோசமாக கழிக்க நினைத்தது தான் இவர்கள் விட்ட பிழை! ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கையில் அவர்களுக்கு கிடைத்த சிறிய சந்தோசத்தை கூட எமது சமூகத்தில் சிலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது ஒரு உதாரணம் மாத்திரமே, இது போல் மற்றவரின் சந்தோசத்தில் மண் அள்ளிப்போடுவதே சிலரது தொழிலாக இருக்கிறது. மற்றவர்களை பாதிக்காத வகையில் சந்தோசமாக இருப்பவர்களை அப்படியே சந்தோசமாக இருக்க விட்டுவிடுவோமே! ஆட்டம் தொடரட்டும், எம் கால்களில் தெம்பும், உடலில் உயிரும் உள்ளவரை.........இல்லையெனில் இவ்வுலக வாழ்க்கை முடிந்தபின் தான் அவர்கள் பேயாட்டம் ஆடவேண்டியிருக்கும்!

தொடர்ச்சி 08 ம் பக்கம்





# கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்

6

சேவியர்

## நான் தாயாராகத் தயார்

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்றார் பாரதி. அன்னையராய்ப் பிறப்பதற்கு அதை விடப் பெரிய மாதவம் செய்திட வேண்டும். அதுவும் இறைவனின் அன்னையாய்ப் பிறப்பதென்றால் எத்தனை பெரிய மாதவம் செய்ய வேண்டுமோ?

அன்னை மரியாள், இயேசுவின் அன்னை. இயேசு பூமியில் மனிதனாக வந்த போது கருவில் சுமந்து, உருவில் வளர்த்து, உலகிற்கு அளித்த உன்னத அன்னை ! ஒரு ஆன்மீகத் தாய் என்பதைத் தாண்டி, அன்னை மரியாளின் வாழ்க்கை பெண்களுக்கு ஊக்கமூட்டும் ஒரு வாழ்க்கையாக இருந்தது. இந்த மங்கையர் தினத்தின் அன்னையைப் பற்றிய சில சிந்தனைகளைப் பார்ப்போம் துணிச்சலின் மொத்த உருவமாக அன்னை இருந்தார். திருமணத்திற்கு முன்பே தூய ஆவியினால் இயேசுவைக் கருத்தாங்க வேண்டும் என்பது இறைவனின் அழைப்பு. அதை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா ? மிகப்பெரிய குழப்பம். ஏற்றுக்கொள்ள மிகப்பெரிய துணிச்சல் வேண்டும். உலகத்தினர் ஏளனமாய்ப் பேசுவார்கள். "கல்யாணத்துக்கு முன்பே கர்ப்பமாம், இது கடவுளின் செயலாம்" என கேலிப் பேச்சுகள் ஒலிக்கும். என்கேஜ்மென்ட் வேற முடிஞ்சிருக்கு, கல்யாணம் நின்று போகலாம். என்ன செய்வது, "சாரி.. வேற ஒரு பொண்ணை பாருங்களேன்" என தூதரை அனுப்பலாமா ? "சே.. ஆறு மாசத்துக்கு முன்னாடி வந்திருக்கலாமே.. எனக்கு அப்போ என்கேஜ்மென்ட் ஆகல" என சொல்லலாமா ?

குழப்பத்தின் முடிவில், வென்றது அன்னை மரியாளின் ஆன்மீக மனம். துணிச்சலின் மனம் வென்றது. "நான் தாயாராகத் தயார்" என்றார்.



கருத்தாங்கிய ஒரே கன்னியாய் அவர் மாறினார். உலகத்தின் பேச்சுகள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம், நாம் செய்கின்ற செயல் நேர்மையானதா ? தவறு இல்லாததா ? ஆன்மீக ஆழம் சார்ந்ததா ? அப்படியெனில் தயக்கமே வேண்டாம். துணிச்சல் கொள்ளுங்கள் என்கிறது அன்னை மரியாளின் வாழ்க்கை. அன்னை கடின உழைப்பாளியாய் இருந்தார். தச்சுத் தொழிலைச் செய்யும் கணவருக்குப் பணிவிடை செய்தார். தாய்மை நிலையில் இருக்கும் போதே, பல மைல் தொலைவு நடந்து தனது உறவினரைச் சந்தித்தார். அவரும் தாய்மை நிலையில் இருந்தார்.

எனவே அங்கேயே மூன்று மாத காலங்கள் தங்கி அவருக்குத் தேவையான உதவிகள் செய்தார். அன்னை, இளகிய மனமும், கடின உழைப்பும், உறவுகளை உதறாத தன்மையும் கொண்டிருந்தார் என்பதற்கு இது ஒரு மிகப்பெரிய சான்று !

மரியாள் புரட்சிப் பெண்ணாய் இருந்தார். அவர் ஒரு புரட்சிப் பாடலையும் பாடினார். இறைவனைப் புகழும் பாடலில் கூட, ""உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்" என புரட்சிச் சிந்தனைகளைப் பாடியவர் அன்னை மரியாள். மங்கையரின் சிந்தனைகளில் புரட்சிகர சிந்தனைகள் இருக்க வேண்டும் என்பதை மரியாளின் வாழ்க்கை ஊக்குவிக்கிறது.

இறுதிவரை இயேசுவோடு இருந்தவர் அன்னை மரியாள். சிறுவனாக இருந்த போது "அறிவிலும், உடல் வளர்ச்சியிலும்" இயேசுவை வளர்த்தியவர். இயேசுவின் புதுமை வாழ்வை தொடங்கி வைத்தவர். பின் இயேசுவின் பணி தீவிரமடைந்தபோது மகனை தூரத்திலிருந்து பார்த்து வாழ்ந்தவர். மகன் அடித்துக் கொல்லப்பட்ட போது அருகில் இருந்து கலங்கியவர் என அன்னை மரியாள் மகனோடு பின்னிப் பிணைந்து ஒரு பாசத் தாயாக பரிமளிக்கிறார். ஒரு தாய்க்கும், மகனுக்கும் இடையேயான அற்புத பந்தத்தின் பிரமிப்புப் பயணமாக அன்னையின் வாழ்க்கை இருந்தது. மங்கையர் தினம் கொண்டாடும் இந்த மாதத்தில், அன்னை மரியாளின் இத்தகைய உயரிய குணாதிசயங்களை சிந்திப்போம். நமது வாழ்வை வளமாக்குவோம்

---

**ஓயும்வரை ஓட்டம்** ••••• 07ம் பக்கத் தொடர்ச்சி

பேயாட்டம் என்னும் பொது தான் ஞாபகம் வருகிறது, சில மாதங்களுக்கு முன் ஒரு செய்தி படித்தேன், ஒரு தகப்பன் அகாலமரணம் அடைந்து விட்டார், அன்று அவர் இறுதிச்சடங்கு, அவர் வீட்டிலோ பெரிய அடிதடி, அவர் மரணத்தை எண்ணி கலங்க வேண்டிய பிள்ளைகள் சொத்துப்பிரச்னையால் கைகலத்துக்கொண்டிருந்தார்கள், உயில் (Will) எழுதாமல் உயிரை விட்டது தான் அவர் செய்த பெரிய பிழை. பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பார்கள், இங்கு அவரது பிணம் வாயை திறந்திருந்தால் அது, உயிரிருந்தும் பேய்களாய் ஆடிக்கொண்டிருந்த தன் பிள்ளைகளை பார்த்து ஓவென்று ஒப்பாரி வைத்து அழுதிருக்கும். உயிருடன் இருக்கும் எல்லோருக்கும் இது ஒரு நல்ல பாடம், " உயிர் இருக்கும் பொழுதே உயிலை எழுதி விடுங்கள்", உங்கள் அன்பான, நீங்கள் உயிராக நேசித்த பிள்ளைகள் உங்களுக்கு பின்னும் உயிருடன் இருக்க வேண்டும் அல்லவா?

அன்றொருநாள் ஓரளவு வயதுக்கு வந்த முதியவருடன் பேசிக் கொண்டிருந்தேன், அவரிடம் "ஐயா, எப்படி வாழ்க்கை போகிறது?" என்று கேட்டேன். அவர் கூறினார் "தம்பி, எனக்கு தெரிந்த காலம் முழுக்க எனது குடும்பத்துக்காக முழுக்க முழுக்க அயராது உழைத்தேன், இன்றும் உழைத்துக்கொண்டிருகின்றேன், எனக்கும் வேறு நாடுகளுக்கு போக வேண்டும் பலதையும் பத்தையும் பார்க்க வேண்டும், ரசிக்க வேண்டும் என்று ஆசை, வேலையில் இருந்து ஓய்வு பெற்றபின் இவற்றை செய்ய வேண்டும் என்பது எனது பல நாள் திட்டம் ஆனால் இப்போது எனது உடலோ மிகவும் தளர்ந்து விட்டது, இப்போது நான் இருக்கும் நிலையில் என்னை நான் பார்த்துக்கொள்ள தெம்பிருந்தாலே அது பெரிய விடயம்" என்று கூறி முடித்தார். "ஐயா உங்களுக்கு ஓய்வு கொடுக்கும் தருணத்தை நிர்ணயிக்க வேண்டியவர் நீங்கள், உங்கள் குடும்பமோ அல்லது நீங்கள் வேலை பார்க்கும் இடமோ அல்லது உங்கள் முதலாளியோ அல்ல" என்று கூற தோன்றினாலும் அது அவர் இப்போது இருக்கும் நிலையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது என்பதால், எதையும் சொல்லாமல் விட்டுவிட்டேன். வாழ்க்கையின் அவசர ஓட்டத்தில் பல விடயங்களை நாங்கள் தள்ளிப்போட்டு விடுகிறோம் பின்பு அதை நினைத்து வேதனைப்படுகிறோம், எவ்வளவுதான் குடும்பத்தின் மீது அன்பும், கடமையும், பொறுப்புகளும் இருந்தாலும், உங்கள் சந்தோசத்துக்கென்று ஒவ்வொரு நாளும் சற்று நேரத்தை ஒதுக்கி வைத்துக்கொள்ளுங்கள், காலம் கடந்தபின் சூரிய நமஸ்காரத்தில் பயனில்லை அல்லவா? உழைப்பு எவ்வளவு முக்கியமோ அதுபோலவே ஓய்வுக்காகவும் உங்கள் சந்தோசத்துக்காகவும் நேரத்தை ஒதுக்குவது அவசியம். நீங்கள் ஒரு தனி மனிதன் என்பதை மறந்து விடாதீர்கள், இறந்தபின் ஏதும் இல்லை! அசுர வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கை சக்கரத்தில் இருந்து சற்று வெளியே வந்து, நீங்கள் இவ்வளவு காலமும் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கையை, வேகமாக ஓடும் அந்த சக்கரத்துக்கு வெளியே நின்று, வேறு ஒரு கண்ணோட்டத்தில் பாருங்கள், பரிசீலியுங்கள். இந்த வாழ்க்கை உங்களுக்கு திணிக்கப்பட்ட வாழ்க்கையா அல்லது நீங்களாக விரும்பி எடுத்துக்கொண்ட வாழ்க்கையா என்று சிறிது சிந்தியுங்கள், சரியானதாக தெரிந்தால் தொடருங்கள், இல்லை பாதையை மாற்றிக்கொள்ளுங்கள், நீங்கள் தேர்தெடுக்கும் புதிய பாதை இன்றுவரை நீங்கள் நினைத்திருக்காத மிகவும் இன்பத்தை தரக்கூடிய பாதையாக இருக்கலாம் அல்லவா? இருப்பது ஒரு வாழ்க்கை, ஒருயிர்! இதை அடிக்கடி மனதில் ஞாபகபடுத்திக்கொள்வோம். தூக்கத்தில் பாதி ஏக்கத்தில் பாதி என்று வாழ்க்கையை வீணடிக்காது, இன்பத்தை நோக்கி வாழ்க்கையை தொடருவோம்.......எல்லாம் இன்ப மயம்..........................

"You aren't your work, your accomplishments, your possessions, your home, your family... your anything. You're a creation of your Source, dressed in a physical human body intended to experience and enjoy life on Earth. Slow down and enjoy life. It's not only the scenery you miss by going too fast - you also miss the sense of where you are going and why."


Wilhelm Str.09
33602 Bielefeld



Lakshmi Jewellery &Silks

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை!

பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள் இன்னும் பஞ்சாபிகள்
அனைத்தும் மிக மிக மலிவு விலையில் கிடைக்கும்
அழகிய டிசைன்களில் தரமான தங்க நகைகளுக்கு
எம்மை நாடுங்கள்

தொலைபேசி: Ruban 0179 72 35 729

Tel:0521 4283 510





Body language




# உடல்மொழி

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

முகத்தில் முகம் பார்க்கலாம், விழியில் உணர்வறியலாம், வால் அசைவில் மனதுணரலாம். பல வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம். பாடசாலை. சிறு பிள்ளைகள் வகுப்பறையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர் ஏதோ கேள்வி கேட்கிறார். எழுந்து நின்ற மாணவன் அவரது முகத்தைப் பார்த்தபடி திக்கித் திணறி விடை அளிக்கிறான். ஆசிரியர் எதுவும் சொல்லவில்லை. மாணவனுக்கு தன்னை அறியாது மூத்திரம் கழிந்து விட்டது.

இத்தனைக்கும் ஆசிரியர் ஏசவில்லை. பிரம்பை எடுக்கவில்லை. கை உயர்த்தக் கூட இல்லை. ஆனால் அவனுக்கு சிறுநீர் தன்னையறியாது பிரிந்து விட்டது. அவ்வளவு பயப்பீதி.
பயப்படுத்தியது எது? அவரது முகம் கடுகடுப்பாகியிருக்கலாம், கண்களில் கோபம் தெறித்திருக்கலாம். அந்தச் சிறுவயதிலேயே அவனுக்கு ஆசியரின் உடல் மொழி புரிந்திருக்கிறது.




சிவாஜி கணேசனை சிம்மக் குரலோன் என்பார்கள். கருணாநிதின் நீண்ட அடுக்கு வசனங்களை அட்சரம் தவறாமல், அழகு தமிழில் பேசுவதில் சிவாஜிக்கு இணை கிடையாது. ஆனால் அவரது ரசிகர்களை மிகவும் கவர்ந்தது அதுவல்ல. அவரது முகபாவ வெளிபாட்டு முறைகள்தான். அது அவருக்கு கிட்டிய பெரும் கொடை யாகும். இதுவும் உடல் மொழிதான்.

உடல் மொழியை ஆங்கிலத்தில் Body language என்பார்கள். Non Verbal communication என்று சொல்வதும் உண்டு. கலைச் சொல்லில் Kinesis என்பார்கள். எங்கள் மனதில் உறைந்திருக்கும் உணர்வுகளை எம்மையறியாது அவ்வாறே பெரும்பாலும் வெளிப்படுத்துகிறோம். கோபத்தை, தாபத்தை, பணிவை, அன்பை, ஆதரவை, வெறுப்பை இவற்றையெல்லாம் பெரும்பாலும் எமது முகத்தாலும் ஏனைய அங்க அசைவுகளின் மூலம்தானே வெளிப்படுத்துகிறோம்.
இவற்றில் பெரும்பாலானவை எம்மை அறியாமலே எம்மை மீறி பட்டவர்த்தனமாகி விடுகிறன. பல தருணங்களில் வாயைத் திறந்தால் எம் உணர்வை வெளிப்படுத்திவிடுவோம் என்ற பயத்தில் நாவடக்கிய போதும் முகம் காட்டிக் கொடுத்துவிடும்.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என முன்னோர்கள் அற்புதமாக உளவியல் பேசினார்கள். அகத்தின் அழகை மாத்திரமல்ல அதன் அழுக்கையும் முகம் வெளிப்படுத்திவிடுகிறது.
“தாபம் பொறுக்க முடியாது இருக்கிறது. புணர்வோம் வருகிறாயா?” என்று யாராவது கேட்டிருப்பார்களா.கண்அசைவு அதன் சிமிட்டல், அல்லது அது வெளிப்படுத்தும் வேட்கை உணர்வு ஒன்றே போதும் அவளை அல்லது

## பெண்களின் தாப உணர்வு

அவனை படுக்கைக்கு வரச்செய்வதற்கு. வெறுமனே இசைவது மட்டுமல்லாமல் மற்றவரிடம் தாப உணர்வைக் கிளர்தெழச் செய்யும் வல்லமையும் அதில் உள்ளது.
ஒரு ஆய்வைப் பெண்களில் செய்தார்கள். அவர்களின் தாப உணர்வைக் கண்டறிவதற்காக. ஆனால் கேள்விகள் கேட்டு இந்த ஆய்வைச் செய்யவில்லை. அவர்கள் பேசுவதை வைத்துக் கண்டறியவில்லை.

கண்களை வைத்துச் செய்தார்கள். அதுவும் முழுமையான கண்களை வைத்து அல்ல. கண் மணியின் விட்டத்தை வைத்து. அது விரியும் அளவை வைத்து மட்டும் செய்யப்பட்டது. நோர்வேயில் உள்ள University of Troms ,ல் Laeng B, Falkenberg L ஆகியோரால் செய்யப்பட்டது ஆனால் அந்த ஆய்வு உடல்மொழி பற்றியது அல்ல. ஹோர்மோன் சுழற்சி மாற்றங்களுக்கு ஏற்ப பாலியல் விருப்பங்கள் எவ்வாறு மாற்றம் அடைகிறது என்பதைக் கண்டறிவதற்கானது. அது பற்றி பின்னர் பேசுவோம்.

### மிருகங்களில் உடல்மொழி

ஆனால் இந்த உடல் மொழிகள் மனிதர்களுக்கு மாத்திரமானவையா அல்லது மிருகங்களிலும் உள்ளனவா. மிருகங்களுக்கு மொழி இருக்கிறதோ இல்லையோ நாம் அறியோம். ஆனால் அவை சத்தம் எழுப்புகின்றன. அதனை அவற்றின் சகாக்கள் புரிந்து கொள்கின்றன. காகங்கள் கரைந்து தம் கூட்டத்தை அழைக்கிறது. குயில் தாபத்துடன் இசைக்கிறது, பூனையின் மியாவ் எங்களுக்கு புரிவதில்லை. ஆனால் அதன் சோடிகளுக்கு புரியும். நாய்கள் குலைக்கின்றன.

ஆனால் குலைக்காமல் கத்தாமல், இரையாமலும் இருந்தபோதும் அவை தங்கள் சகபாடிகளின் உடல் மொழிகளைப் புரிந்து எதிர்வினையாற்றுகினறன என்பதை ஒரு ஆய்வில் கண்டறிந்திருக்கிறார்கள்.
மனிதர்களில் கண்களில் ஆய்வு செய்தார்கள். இப்பொழுது நாய்களின் வாலில் ஆய்வு. வால் என்றால் அதன் நீளம் அகலம், பற்றியது அல்ல. அவை அசையும் விதம் பற்றியது. நாய்கள் வால் அசைப்பதை நாம் எல்லோருமே கண்டிருக்கிறோம். எசமானைக் கண்டால் மகிழ்ச்சியில் வாலாட்டுவது தெரியும். எங்களுக்குத் தெரிந்தது அவ்வளவு மட்டுமே. ஆனால் ஒரு நாயானது மற்ற நாயின் வால் ஆட்டும் விதத்தை வைத்து அதனது உணர்வுகளை மட்டுக்கட்டுகின்றன என்கிறார்கள் இத்தாலியைச் சார்ந்த ஆய்வாளர்கள்.

ஒரு நாயானது தனது வாலை இடது பக்கமாக அசைக்கும்போது அதைப் பார்த்திருக்கும் ஏனைய நாய்களின் மனங்கள் பதற்றமடைகின்றனவாகும். நாய்கள் பதற்றமடைவதை அவற்றின் இருதயத் துடிப்பு வேகமாவதைக் கொண்டு கண்டறிந்தார்கள். ஆனால் வலது பக்கமாக ஆட்டினால் ஏனைய நாய்கள் பதற்றமடையவில்லையாம்.

தொடர்ச்சி 10ம் பக்கம்...

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
A.tu.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen



T.T.S.Brothers GmbH&Co.KG
உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184
Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846
Graphic design Vettimaniy Ltd

09 ம் பக்கத் தொடர்ச்சி...

### பெண்களின் தாப உணர்வு



வலது பக்கமாகவோ இடது பக்கமாகவோ தமது வாலை ஆட்டவேண்டும் என அவை திட்டமிட்டுச் செய்வதில்லை. அது இயல்பாக நடக்கிறது. தன்னிச்சையின்றி நடைபெறுவதாகும்.

இயற்கையின் கொடை எனலாம். அல்லது கூர்ப்பில் எட்டப்பட்டது எனவும் கொள்ளலாம்.

இதை முன்பு செய்த மற்றொரு ஆய்வு எடுத்துக் காட்டியிருந்தது. தனது எசமானைக் கண்டது போன்ற மகிழ்ச்சியான நிகழ்வு நடைபெறும்போது அதன் மூளையின் இடது பக்கத்தில் செயற்பாடு அதிகரித்ததாம். அந்த நேரத்தில் வால் வலது பக்கமாக ஆடினவாம். மாறாக மற்றொரு நாய் அக்கிரோசமாக இதைக் கடிக்க நெருங்கும்போது இதன் மூளையின் வலது பக்கத்தில் செயற்பாடு அதிகரித்து, வால் இடதுபுறமாக ஆடுமாம். ஆனால் நாய்கள் தங்கள் வால்களை ஒரு பக்கமாக மட்டும் ஆட்டுவதை நாம் கண்டதில்லை. இதற்குக் காரணம் அது வேகமாக ஆட்டுகிறது. அதனால் அது எமக்குப் புரிவதில்லை. வீடியோவில் எடுத்து சிலோ மோசனில் பார்க்கும்போது இது தெரிந்தது என்கிறார்கள்.

இப்பொழுது செய்த ஆய்வின் போது வாலை ஆட்டும் வேறு நாய்களின் வீடியோக்களை ஆய்வுக்கு உட்பட்ட நாய்களுக்குக் காட்டினார்கள். வீடியோ பட நாய்கள் எந்தப்பக்கமாக வாலை ஆட்டுகின்றன என்பதைப் பொறுத்து இந்த நாய்களின் இருதயத் துடிப்பில் மாற்றம் ஏற்பட்டது.

சில நாய்கள் பெரிதளவு எதிர்வினை காட்டாதபோது மீண்டும் மீண்டும் வீடியோ போட்டுக் காட்டிய போது அவை எதிர்வினை காட்டின. எதிர்வினையை அவற்றின் நாடித் துடிப்பின் மூலமாகக் கண்டறிந்ததற்கு மேலாக வேறு அறிகுறிகள் மூலமும் கண்டறிய முடிந்தது.

வாலை இடது பக்கமாக அசைப்பதைப் பார்த்த நாய்ககளில் மனஅழுத்தமும் எச்சரிக்கை உணர்வும் ஏற்பட்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. நாய்கள் டென்சானாகும் என்ன செய்கின்றன என்பதை நீங்களும் நானும் அறிவோம். அவற்றைத்தான் அவர்களும் அவதானித்தார்கள். அவற்றின் காதுகள் நிமிர்ந்தெழுந்தன, மூச்சிரைத்தன, தாக்குதலுக்கு தயாராவது போல உடலைச் சுருக்கின. கண்கள் விரிந்தன.

### கண்மணி விரிதலும் பாலியல் உணர்வும்



இந்தக கண்கள் விரிவடையும் தன்மையானது ஏனைய விலங்குகளில் இருப்பது போவே மனிதர்களிடமும் காணப்படுகிறது. இது தாங்களாகச் செய்வது அல்ல. தன்னை அறியாமல் நடக்கும் செயலாகும். 1975 ல் செய்யப்பட்ட ஒரு ஆய்வு சுவார்ஸமானது.

தங்களுக்கு சோடியாக வரப்போகின்றவரது புகைப்படத்தைப் பெண்கள் கண்டதும் அவர்களது கண்மணி விரிந்ததாகக் கண்டார்கள். அது பயத்தினால் ஏற்பட்ட விரிவு அல்ல. ஆனந்தக் கிளர்ச்சியால் ஏற்பட்டதாகும். இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது என்பீர்கள்.

பாலியல் ஆர்வம் பெண்களுக்கு எக்காலத்தில் இயல்பாகவே எழுகிறது என்பதை இந்த ஆய்வு கோடி காட்டுகிறது.

ஆரம்பத்தில் பெண்களின் கண்களைப் பற்றிய ஆய்வின் மீதிக் கதைதான் இனி வருகிறது.

பெண்களின் கண்களை அவர்களது மாதவிடாய் சுற்றின் பல்வேறு கட்டங்களில் பரிசோதித்திருந்தார்கள். மாதவிடாயில் இரத்தப் பெருக்கு இருக்கும்போது (menstrual phase), சூலகத்திலிருந்து முட்டை வெளியேறி கருவாவதற்கு உடலானது தயாராயிருக்கும் 'கருவள காலத்தில்' (ovulatory phase), அதற்கு பின்னான ஓய்வு (luteal phase), காலத்திலாகும்.அவரது பாலியல் துணைவரின் படங்களைக் காட்டிய போது சூலகத்திலிருந்து முட்டை வெளியேறும் கருவள காலத்தில் அவர்களது பாலியல் உணர்வு தூண்டப்பட்டது. கண்மணி விரிவதைக் கொண்டு அதனைக் கண்டறிந்தார்கள்.

மனைவியின் மாதவிடாய் வட்டத்தை சரியாகக் கணித்து வைத்திருங்கள். அந்நேரத்தில் (கருவள காலம்) சுலபமாகக் கைகூடும். ஆனால் கருத்தடை மாத்திரை உண்ட பெண்களில் இந்த மாற்றம் தென்படவில்லை. இதற்குக் காரணம் அவர்களில் ஹோர்மோன் மாற்றங்களால் கருவள காலம் என்பது அடக்கப்பட்டு விடும் என்பதாலாகும்.

இதன் அர்த்தம் கருத்தடை மாத்திரை உண்ணும் பெண்களுக்கு பாலியல் ஆர்வம் குறைந்துவிடும் என்றல்ல. கருத் தங்கிவிடும் பிரச்சனை இல்லை என்ற உணர்வு அவர்களில் ஆர்வத்தைத் தூண்டிவிடும் எனவும் சொல்கிறார்கள்.

### நாளாந்த வாழ்வில் உடல் மொழி

உடல் மொழியை இன்று பல கற்கை நெறிகளில் ஒரு பாடமாக எடுக்கிறார்கள். முக்கியமாக தொழில் முறையில் மேலாண்மை நிலையில் இருப்பவர்களுக்கு அவசியமாகிறது. மருத்துவத் துறையில் உடல் மொழி என்ற சொல்லைப் பயன்படுத்தாமலே மருத்துவர்கள் அவற்றைத் தங்கள் நோயாளிகளில் அறிகுறிகளாகத் தேடுகிறார்கள்.

ஆனால் தினசரி வாழ்வில் இதன் முக்கியத்துவம் அபரிதமானது. முகபாவங்கள் மட்டுமின்றி ஒருவர் எவ்வாறு உட்கார்ந்திருக்கிறார், அவரது கைகள் ஓய்ந்திருக்கிறதா பரபரக்கிறதா, கண்களில் ஒளிர்வது எது போன்றவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்களின் மன உணர்வு களை உடல் மொழி மூலம் புரிந்து கொண்டவர்களால் எல்லோரையும் அணைத்து நல்லுறவைப் பேண முடியும். மாறாக அதை அசட்டை செய்பவர்கள் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகவே நேரும்.

மற்றவர்களது உடல் மொழிகள் எமக்கு என்ன சொல்கிறது என்பதற்கு அப்பால் நாம் எமது உடல்மொழியால் மற்றவர்களுக்கு என்ன செய்தியை கடத்தியிருக்கிறோம் என்பதும் முக்கியமானதாகும்.

அது சரி நாயின் வாலாட்டல் உடல் மொழியைப் புரிந்து கொள்வதால் என்ன நன்மை? யாரவது ஒருவரின் வீட்டிற்கு போகிறீர்கள் என வைத்துக் கொள்வோம். தூரத்தில் ஒரு நாய் நிற்கிறது. அதன் வாலைப் பாருங்கள். அது வலது புறமாக வாலாட்டினால் பிரச்சனை இல்லை. உங்கள் வருகை அதற்கு அச்சுறுத்தாலாக இல்லை. பேசாமல் இருந்துவிடும்.

மாறாக இடது புறமாக வாலாட்டினால் மருத்துவ மனைக்குச் சென்று ஊசி போடுவதற்கு தயாராகுங்கள். நன்றி: ஹாய் நலமா


உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம்,யோமன்,பிரஞ்,துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!







ஷனல்யாவின்
# அழகே அழகு!

# கருநிற வளையம் அழகிய கண்களின் எதிரி?!

என்றாவது ஒரு நாள் காலையில் எழுந்து பல் துலக்கும் நேரத்தில் கண்ணாடியைப் பார்த்து ஆச்சரியமடைந்ததுண்டா?அதற்குக் காரணம் என்னவென்றால், கண்ணாடியைப் பார்க்கும் போது உங்கள் முகத்தில் ஏதோ ஒரு மாற்றம் தெரிகின்றது. கூர்மையாகக் கவனித்தாலும், அது என்ன மாற்றம் என்பது உங்களுக்குப் புரியவில்லை. ஆனால் திடீரென்று உங்கள் கண்களைச் சுற்றி ஒரு வளையம் இருப்பதை அவதானிக்கின்றீர்கள். குறிப்பாகக் கருநிற வளையங்கள் உண்டாகியிருப்பதைக் கண்டு ஆச்சரியப் படுகின்றீர்கள். இவ்வளவு நாட்களும் இல்லாத இந்தக் கருப்புக் கறைகள், எங்கிருந்து வந்தன? என்ன தான் அதைத் தேய்த்துப் பார்த்தாலும், அது அழிவதாகத் தெரியவில்லை. எனவே, இந்தக் கருவளையங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் எவை? அவ்வேளையில் நமது உடலில் என்ன நடைபெறுகின்றது? அதை விட முக்கியமாக அவற்றை எப்படிப் போக்குவது என்பதைப் பார்ப்போமா?

பொதுவாக கருவளையங்கள் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. இருந்தும் நாம் இன்று ஒரு சில முக்கிய காரணங்களை மட்டுமே பார்ப்போம். தூக்கமின்மை, நீர் பற்றாக்குறை, இரும்புச்சத்து குறைபாடு, மரபியல் காரணம் மற்றும் ஒவ்வாமை கருவளையங்கள் தோன்றுவதற்கான காரணங்கள் ஆகும். சில வைட்டமின்கள் குறைவதால் கூட இந்தக் கருப்புக் கறைகள் உண்டாகுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. சரி, காரணங்களைப் பார்த்தது போதும், இனி கருவளையங்களுக்குப் பின்னால் இருக்கும் உயிரியல் விளக்கத்தைப் பார்ப்போம்.





உயிரியல் ரீதியாகக் கருநிற வளையங்களுக்கு மிக முக்கிய காரணமாக இருப்பது பிராணவாயு, அதாவது ஆக்சிஜன் குறைந்த இரத்தமே ஆகும். இந்த இரத்தம் பிராணவாயு அதிகமாகக் கொண்ட இரத்தத்தை விடக் கருமையாக இருக்கும். கண்களுக்குக் கீழே இருக்கும் தோல் மிகவும் மெல்லியதாக இருப்பதால் அதற்குக் கீழே அமைந்துள்ள இரத்த நாளங்கள் அந்தத் தோலூடாக வெளியே தெரிகின்றன. அது ஏனென்றால் கண்களை சுற்றிக் காணப்படும் தோலடிக் கொழுப்பிழையம் அதிகமாக இருப்பதில்லை. எனவே, அந்த இரத்த நாளங்களூடாக பிராணவாயு குறைந்த இரத்தம் ஓடும் போது, இதன் விளைவாக கண்களைச் சுற்றிக் கருநிறக் கறைகளை நாம் காண்கின்றோம்.

இதைத் தவிர்த்து கருநிற வளையங்கள் உருவாகுவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. இதைத் தான் உயர்நிறமூட்டல் அதாவது ஆங்கிலத்தில் Hyperpigmentation என்று அழைப்பார்கள்.

இந்த நிலை வருவதற்கு கருநிறமி (Melanin) எனும் பழுப்புக் கலந்த கருப்பு நிறமுடைய நிறமி தான் காரணமாகும். கருநிறமியின் குறைபாடுகளால் நமது தோலில் நிறம் அதிகரிப்பு அல்லது நிறம் குறைதல் நிகழலாம். உதாரணத்திற்கு கருநிறமியின் அளவு நமது தோலுக்குள் அதிகரித்தால், இதன் விளைவாக அதன் நிறம் மாற்றம் அடைகின்றது, குறிப்பாக கருமையாகின்றது. எனவே கண்களுக்கு அடியில் உயர்நிறமூட்டல் காணப்பட்டால், கருவளையங்கள் இருப்பது போலிருக்கும்.

கருநிற வளையங்கள் உருவாகுவதற்கான உயிரியல் காரணங்களைப் பார்த்தோம் சரி, ஆனால் இதை விட சுவாரஸ்யமான விஷயம் எதுவென்றால், இப்படி நமது கண்களைச் சுற்றி வந்த கருப்பு கறைகளை எப்படி நீக்குவது அல்லது குறைப்பது என்பது தானே? எனவே, அதை இப்போது பார்ப்போமா?





இந்த வரிசையில் மிக முக்கியமானது உங்கள் தூக்கத்தைக் கவனிப்பதே ஆகும். தூக்கமின்மை காரணத்தால் உங்கள் ,இரத்தத்தில் பிராணவாயுவின் அளவு குறைவாகவே காணப்படும். எனவே சராசரியாக 8 மணி நேரங்கள் வரைத் தூங்கினால் தான், உங்கள் இரத்தத்தில் போதுமான அளவிற்குப் பிராணவாயு இருப்பது மட்டுமில்லாமல், உங்கள் கருநிற வளையங்களும் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கிவிடும்.

இதைத் தொடர்ந்து ஒரு நாளுக்கு 1,5 லிட்டர் தொடக்கம் 2 லிட்டர் வரை தண்ணீர் குடிப்பது உங்கள் உடலுக்கு எல்லா வகையிலும் நன்மையைத் தரும். அந்த நன்மைகளில் உங்கள் கருநிற கறைகளை நீக்குவதும் ஒன்றாகும்.

கருநிற வளையங்கள் உருவாகுவதற்கு இன்னுமொரு காரணம் இரும்புச்சத்துக் குறைபாடு ஆகும். இந்தக் குறைபாடு உள்ளவர்கள் பொதுவாக இந்தச் சத்தை உணவின் மூலம் சேர்த்துக்கொள்ளலாம். இரும்புச்சத்து உதாரணத்திற்கு பருப்புவகைகளில், சோயா மற்றும் கீரை போன்ற இலைவகைகளில் பெரும்பாலும் காணப்படுகின்றது.

இதுவரை குறிப்பிட்ட விஷயங்களைத் தவிர்த்து கருநிற வளையங்களை நீக்குவதற்காக மேலும் ஒரு சில கைவைத்தியங்களும் உள்ளன. இந்த வரிசையில் உருளைக்கிழங்கில் இருந்து எடுக்கப்படும் சாறைக் கருவளை யங்கள் காணப்படும் பகுதிகளில் தடவி, 10 15 நிமிடங்கள் வரை பொறுத்தபின், அதை இளஞ்சூட்டுத் தண்ணீரில் கழுவியதும், உங்கள் தோல் புத்துணர்ச்சி பெறுகின்றது. இதை ஒவ்வொரு வாரமும் 2, 3 முறை தொடர்ந்து செய்துவந்தால், கருவளையங்கள் குறைவதற்கு வாய்ப்பு உண்டு.

அடுத்து வரும் கைவைத்தியத்தை நீங்கள் நிச்சயமாக அறிந்திருப்பீர்கள். அது என்னவென்றால் வெள்ளரியை எடுத்து, சுமார் ஒரு சென்டிமீட்டர் தடிமன் கொண்ட துண்டுகளாக வெட்டி, அதனை உங்கள் மூடிய கண்களுக்கு மேலே ஏறத்தாழ 20 நிமிடங்களுக்கு வைத்திருக்கவேண்டும். இதனால் உங்கள் கண்கள் மற்றும் கண்களைச் சுற்றியுள்ள தோல் புத்துணர்ச்சி பெற்று, உங்கள் கரு வளையங்களும் போய்விடும்.

நீங்கள் பொதுவாக தேநீர் விரும்பிக் குடிப்பவரா? அப்படியென்றால் இந்தக் கைவைத்தியமும் உங்களுக்கு நிச்சயமாகப் பிடித்திருக்கும். இதற்குத் தேயிலையை சுடு தண்ணீரில் ஊறவைத்தபின், அதை வெளியே எடுத்து, சற்று நேரம் கழித்து, மெல்லிய சூட்டில் இருக்கும் தேயிலையை உங்கள் கண்களுக்கு மேல் வைத்துவிடுங்கள். 10 நிமிடங்களுக்குப்பின் தேயிலையை நீக்கியதும் உங்கள் கண்களுக்கு மிகவும் இனிமையாக இருக்கும். இதைத் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் செய்துவந்தால் உங்கள் கருநிற வளையங்கள் போவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

தவறான வாழ்க்கைமுறைகளின் பின்விளைவுகளாக ஏற்படும் கருவளை யங்களைப் போக்குவதற்கான வழிமுறைகளைப் பார்த்தது மட்டுமில்லாமல், இந்தக் கருநிறக் கறைகளுக்குப் பின்னால் இருக்கும் உயிரியல் ரீதியான காரணங்களையும் அறிந்து கொண்டீர்கள். இதனால் நீங்கள் நன்மை பெறுவீர்கள் என்று நம்புகிறேன்.




# தமிழர் தகவல் உலகளாவிய தமிழர்களின் ஆவணப் பெட்டகம்

## கனடா தமிழர் தகவல் சஞ்சிகையின் 26வது ஆண்டு விருது விழா





கனடாவின் மூத்த தமிழ் இதழான தமிழர் தகவல் சஞ்சிகையின் 26வது ஆண்டு பூர்த்தி வைபவமும் அதனோடு இணைந்த 26வது ஆண்டு விருதுகள் வழங்கும் நிகழ்வும் கடந்த மாதம் (பெப்ரவரி) 19ம் திகதி கனடாவில் தமிழர் செறிந்து வாழும் ரொறன்ரோ நகர சபையின் அங்கத்தவர் சபாபீடத்தில் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

இவ்விழாவில்,இளவேனில் சுவடு' என்ற மகுடத்தில் 70வரையான துறைசார் பிரமுகர்களின் கட்டுரைகளைக் கொண்ட 192 பக்கத்திலான ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. அத்துடன் இவ்வாண்டும் எட்டுச் சாதனையாளர்கள் விருதுகளும் தங்கப் பதக்கங்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

கனடா தமிழ் மருத்துவ அமைப்பின் தலைவர் டாக்டர் அ. சண்முகவடிவேல் தலைமையில் முதலாவது அமர்வு இடம்பெற்றது. ஒலிபரப்பாளர் சக்தி பரமலிங்கம், நடனக்கலைஞர் ஐஸ்வரியா சந்துரு, ஆலய பிரதம குரு விஜயகுமார குருக்கள், மார்க்கம் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி ஆகியோர் இவ்வமர்வில் பங்குபற்றினர்.

இளவேனில் சுவடு ஆண்டு மலரை தமிழிலக்கியத் தோட்டத்தின் அமைப்பாளரான சர்வதேசப் புகழ் பெற்ற எழுத்தாளர் திரு அ.முத்துலிங்கம் வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார்.



கனடா தமிழர் தகவல் உலகளாவிய தமிழர்களின் ஆவணப் பெட்டகமாக இன்று மிளிர்கின்றது என்று தெரிவித்த இவர், உலகிலேயே தமிழில் தகவலுக்காக வெளிவரும் ஒரேயொரு அச்சு ஊடகம் இதுவே எனவும் குறிப்பிட்டார்.

விருது வழங்கும் வைபவத்தின் தொடக்க உரையை தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் நிகழ்த்தினார்.

பிரதம விருந்தினராக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் கிளென் மரேயும், சிறப்பு விருந்தினராக ரொறன்ரோ நகரசபையின் பிரதி மேயர் பாம் மக்கொனாலும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

### இவ்வருட விருதுகளைப் பெற்றவர்களின் விபரம்

விழாவில் இவ்வருட விருதுகளைப் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு: திருமதி கிருபாநிதி ரட்ணேஸ்வரன் (நடனக்கலை), திருமதி கல்யாணி சுதர்சன் (இசைக்கலை), திரு தங்கராஜா சிவபாலு (தமிழ் மொழி, இலக்கியப் பணி), திரு மயில்வாகனம் ஜெகநாதன் (வணிகத்துறை முன்னோடி), திரு வீரசிங்கம் சிறீகாந்தன் (வணிகத்துறை முன்னோடி), திரு மகேசன் அரவிந்தன் (முன்னணி வாத்தியக்குழு), செல்வி ஆரணி ஞானநாயகன் (முன்னோடி மாணவர்).



இவ்வருடத்துக்கான தமிழர் தகவலின் வாழ்நாள் சாதனையாளர் விருதை அமெரிக்காவின் அத்லாந்தா மாகாணத்தில் பணியாற்றி வருகின்ற பேராசிரியர் கலாநிதி அஜித் யோகநாதன் பெற்றுக் கொண்டார். ஈழத்தமிழரான இவர் இருதய நோயியல் பற்றிய ஆய்வில் சர்வதேச மட்டத்தில் பல சாதனைகளை நிகழ்த்தி பல விருதுகளையும் பட்டங்களையும் கடந்த நாற்பது ஆண்டுகளில் பெற்றுக் கொண்ட முன்னணிப் பேராசிரியர்.

விருது பெற்றவர்கள் சார்பில் இவர் நிகழ்த்திய உரை பலரது கண்களையும் பனிக்க வைத்தது.




# ஒரு ஊசி உங்கள் கொலஸ்ரோலை நிரந்தரமாகவே மாற்றிவிடும் !

சிவஜெனனி




நடக்கவென்றாலும் வேண்டும்! Cholesterol லை அதிகரிக்கக்கூடிய உணவுவகைகள் சில: magerine, கேக், full fat cheese,sausages, இப்படி இன்னும் பல இருக்கிறது!

Cholesterol அதிகமானால் வரும் முக்கியமான சில நோய்கள்: பக்கவாதம், இருதய நோய்கள் எனலாம். இப்படிப்பட்ட வியாதியிடம் இருந்து காப்பாற்றத் தான் இந்தப் புதியதோர் ஊசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. Harvard Stem Cell Institute and the University of Pennsylvania வினாலும் சேர்ந்து உருவாக்கப்பட்ட ஊசி தான் இந்த புதிய கண்டுபிடிப்பு! இது Cholesterol லை குறைக்க போவதில்லை! வேரோடு ஒழிக்க வருகிறது! தற்போது எலிகளில் பரிசோதனை செய்து வெற்றி எட்டியுள்ளது! இந்த ஊசி குறிப்பிட்ட gene சை சென்றடைந்து அதன் செயற்பாட்டை நிறுத்தி வைக்கும்! எந்த வித பக்கவிளைவும் இதனால் ஏற்படப்போவதில்லை!

**உங்களுக்கு Cholesterol ஆ? கவலை விடுங்கள்!**

இப்போவெல்லாம் எந்த வருத்தம் எப்போ எந்த வயதில் வரும் என்பதே கூறமுடியாது! அது பாட்டுக்கு இந்த வெளிநாட்டில் எப்படி மழை வருகிறதோ அதே போல் திடீர் திடீரென வருகிறது. வந்த பின் இனி என்னத்தை செய்வது என்று மருத்துவர்கள் தரும் மருந்துகளை ஒரு கேள்வியும் கேட்காமல் விழுங்கவேண்டியது! ஒரு வியாதிக்கு நாம் என்ன செய்யலாம், எப்படி குனப்படுத்தலாம் என ஆராய்வது அரிது! அது தான் ஆராய்ச்சியாளர்கள் இருக்கிறார்களே! என்று அவர்கள் கையில் விட்டுவிடுகிறோம். ஆவர்களும் ஆர்வத்தோடு புதுசு புதுசாக ஒன்றைக் கண்டுபிடித்து விடுவார்கள், அப்படிக் கண்டு பிடிக்கப் பட்டது தான் இந்த ஊசி!

இதைப் பற்றி ஆராய்வதற்கு முன் Cholestrol என்றால் என்னவென்று ஒரு சிறிய கண்ணோட்டம்!



Cholesterol மெழுகு போன்றது. இது கல்லீரலில் உற்பத்தியாகிறது அதே நேரம் நாம் உண்ணும் சில உணவுகளிலும் உள்ளது. ஒவ்வொரு செல்லும் எப்படி இயங்க வேண்டும் என்பதை நிர்னயிக்கும் பெரிய பொறுப்பு இதற்கு இருக்கிறது. விற்றமின் டி உற்பத்தியாவதற்கும் இது தேவை! Cholesterol லில் இரண்டு விதம் உண்டு. நல்ல Cholesterol HDL (high density lipoprotein) கெட்ட Cholesterol LDL (low density lipoprotein) என்று இருக்கிறன! எவர் எவர் அதிகம் Cholesterol லால் பாதிக்கப்படுகிறார்கள் என்று பார்க்கபோனால், தாய் தந்தையரிடம் இருந்து வந்திருக்கலாம் பரம்பரை வியாதியாக! அப்படியில்லை என்றால் எமது வாழ்க்கை முறை, உண்ணும் உணவு வகைகளாலும், புகைப்படித்தல், மது அருந்துதலாலும் நிச்சயமாக வரும் எனலாம்!

ஆனால் உணவு மட்டும் சரியாக இருந்தால் போதாது! அதிகமான எடை கூடுதலாலும், உடற்பயிற்சி இல்லாமையாலும் வரலாம். உணவால் மட்டும் சகல வியாதிகளையும் நாம் சரிப்படுத்தலாம் என்று எண்ணுவது மிகவும் தவறு! உடற் பயிற்சி மிகவும் அவசியம், குறைந்த பட்ஷம் சற்று நேரம்

இப்பரிசோதனை மனிதர்களில் செய்வதற்கு இன்னும் கால அவகாசம் தேவை! அப்பரிசோதனையும் வெற்றிகரமாக அமையும் என நம்பப்படுகிறது! அப்படி இருந்தால் கேட்கவே தேவையில்லை எமது ஆயுளும் ஆரோக்கியமும் நிச்சயம் கூடும்! இந்த மருந்து மட்டும் மனிதர்களிடையே வெற்றிகரமாக செயற்பட்டால் 40-60 வீதம் மாரடைப்புகள் குறையும்.



இருதய நோய்களும் பக்கவாதமும் தான் இப்பொது காவாசி மக்களை பாதிக்கின்றது! இதன் முக்கிய காரணங்களில் ஒன்று அதிக அளவில் 'கெட்ட LDL Cholesterol உடம்பில் இருப்பது தான். இதனால் மில்லியன் கணக்கானோர் தற்போது Statins எனும் மருந்து உபயோகின்றனர். Statins இவர்களது வாழ்நாட்களை அதிகப் படுத்தினாலும்- சில பக்கவிளைவுகள் இருக்கத்தான் செய்கின்றது. அதாவது- muscle (தசை) நோவுகள்.

சிலர் பிறக்கும் போதே குறிப்பிட்ட மரபணுவை (gene) mutations (மரபியல் மாற்றத்துடன்) பிறப்பார்கள். இதனால், இருதய நோய்கள் வருவது குறைவாக இருக்கும்.

இந்த ஊசிக்குள் இருக்கும் மருந்து என்ன செய்கிறது என்றால், gene னை சரிப்படுத்துகிறது (gene editing). இந்த gene எடிட்டிங்கில் கவனிக்க வேண்டிய முக்கியமானதொன்று, திட்டமிடப்படாத mutations நடை பெறலாம்.

ஆகக் கூடியது செல்களை புற்று நோய்குள்ளாக்கலாம்! ஆகையால் அதனை ஆராய்ச்சியாளர்கள் மிகவும் அவதானமாக கவனித்து பரிசோதித்து வருகிறார்கள்! பல சோதனைகள் நடாத்தப்படுகிறது! எலிகளை வைத்து செய்யப்படும் இச்சோதனைகள் மிகவும் நம்பிக்கையினை தருகிறது.





# வீணையை வைத்து கொண்டு விரலை தேடுகிறேன்

நெடுந்தீவு முகிலன்



கொஞ்ச நாளாகவேதான் அவளை
பிரிந்திருந்தாலும் - இப்பவே பார்த்தாக
வேண்டும் என்கிற தவிப்போடு இருக்கிறேன்.

அவளை சந்திக்க போகும் அந்த
அழகிய தருணத்தை - தற் சமயம்
வார்த்தைகளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை..

கடைசியாய் அவள் கொடுத்த
முத்தத்தை ஏனும் - எப்போது தான்
நான் திருப்பி கொடுக்க போகிறோனோ...

என்னை வழியனுப்பிய போது
கலங்கிய அவள் கண்களும் - இன்னமும்
ஈரத்தோடேதான் இருக்கிறதே..?

எனது தனிப்பட்ட காரணத்தினாலே அவளை
பிரிய நேர்ந்தாலும் - அவளது அன்புக்காவே
எனது தனிமை இப்போது அவதிப்படுகிறது.

கடக்கும் பொழுதுகள் எல்லாம் அவளது
நினைவுகளோடே நகர்ந்தாலும் - கண்ணீர்
துளியும் நானும் மிக நெருக்கமாகிவிட்டோம்.
அவளோடு ஒரு வார்த்தை கூட
பேச முடியாமலிருப்பதால் - யாரோடும்
எதுவும் பேசவும் விருப்பமில்லாமல் போய்விட்டது.

காத்திருப்பால் அவளுக்கும் எனக்குமான
நேசம் அதிகரித்தாலும் - மனது
இப்போதே அவளை எதிர்பார்க்கிறது.

**எந்த நிலைக்கு போனாலும் தாயின்
பிரியத்தை யாரிடத்திலும் – திரும்ப பெற
முடியாது என்பதை நன்றே உணர்கிறேன்.**

# கோளாறு



எனக்குள் ஓர் மிருகத்தை
வளர்த்துக் கொண்டு உன்
அருகில் மணிக்கணக்காய்
உட்க்காந்திருக்கிறேன்.

இடையிடையே மிருகம் உன்னை வருட நினைத்து
நெருங்குகையில் வேண்டாம் என அடக்கி வந்தேன்.



காற்றுக்கு உன் பாவாடை முழங்காலைத் தாண்டி விலகுகையில்...
மிருகம் விழிகளுக்கு விரைகிறது.

தவறுதலாய் நீ என்னை உரசுகையில்
மிருகம் உதடுகளுக்கு வருகிறது - இன்னும்
கொஞ்சம் நீ நெருங்குகையில்
மிருகம் விரல்களுக்கு நகர்கிறது.

உன் அசைவுகள் ஒவ்வொன்றுக்கும் மிருகம் தனியொரு உருவம்
எடுக்கையில் வேண்டாமென வேண்டாமென அடக்கி வந்தேன்.

உன் வயதுக் கோளாறோ என்னவோ... வேண்டுமென்றே
நீயாய் என் மிருகத்தை எழுப்பி விடுகிறாய்
நட்பென்றும் சொல்லிக்கொண்டு.....





# சிறுவர் துஷ்பிரயோகங்கள்

அனித்தா பூஷன்

சிறுவர்களின் உணர்வுகள் மென்மையானவையும், அற்புதமானவையும் ஆகும். சிறுவர்களின் விருப்பு, வெறுப்புகள்,சிந்தனைகள், கற்பனைகள் எல்லாமே மிகவும் நுணுக்கத்துடன் அணுகப்படவேண்டியவை. அவர்களின் ஆரோக்கியமான நிறைவான உடல் உள வளர்ச்சியில் பலவிதமான காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பெற்றோர், உறவினர், ஆசிரியர்கள், வைத்தியர்கள் என சமூகத்தின் பல தரப்பினரும் அச்சமூகத்துச் சிறுவர்களின் நிறைவான உடல், உள வளர்ச்சியில் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ பங்கெடுத்துக்கொள்கின்றனர். இதன் மூலம் சமூகக் கட்டமைப்பிலுள்ள அனைவருமே சிறுவர்களின் முன்னேற்றத்தில் பொறுப்பு மிக்கவர்களாக இருக்க வேண்டியவர்களாகின்றனர்.

இன்றைய ஊடகங்களை எடுத்து நோக்குவோமாயின் ஒவ்வொருநாளும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் சிறுவர் மீது மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகம் சம்பந்தமான செய்திகளே வெளியாகிக் கொண்டிருக்கின்றன.
முக்கியமாக வளர்முக நாடுகளில் வாழும் சிறுவர்களின் வாழ்வியல் உரிமைகள் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக எம்மண்ணில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தம் ஓர் காரணமாகின்றது. யுத்தத்தால் சிறுவர்களுக்கு ஏற்படும் தாக்கங்களாக எதிர்பாராத இடப்பெயர்வு, பெற்றோர் பாதுகாவலரின் இறப்பு, குடும்பப்பிரிவுகள், கண்முன்னே நடந்த மரணம், விமானக்குண்டுவீச்சு, எறிகணைவீச்சு, காயப்படல், கைதுசெய்யப்படல், உறவினர் காணாமற்போதல் என்பன சிறுவர்களை உளரீதியாகப் பாதிக்கின்றது. இவ்வாறான பாதிப்புக்கள் ஒரு பிள்ளையினது வாழ்வின் பல அம்சங்களிலும் வியாபித்து நிற்கின்றது. எடுத்துக்காட்டாக பெற்றோரை இழந்த பிள்ளை பராமரிப்பாளருடன் வாழ நேரிடும் போது அப்பராமரிப்பாளர் நோய்வாய்ப்படும்போது அல்லது இறக்கும்போது குடும்பங்களை பராமரிக்கும் பொறுப்பு பிள்ளைகள் மேல் சுமத்தப்படுவதால் அவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாதவர் களாகின்றனர். இதனால் அவர்கள் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுவது மட்டுமல்லாமல் பல சுரண்டல்களுக்கும் உள்ளாகின்றனர். சில குடும்பங்களில் தந்தை மதுபாவனைக்கு அடிமையாக இருப்பதனால் அக்குடும்பத்துப் பிள்ளைகள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதவாறு பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

## பாலியல் துஷ்பிரயோகம்

குறிப்பாக யுத்தத்தின் விளைவாக பெற்றோரைஇழந்த பிள்ளைகள் அதிகமாக உள்ளனர். இவர்களில் பலர் விசேடதேவைக்குட்பட்டவராகவும் உள்ளனர். இச்சிறார்கள் சிறுவர் இல்லங்களிலிலேயே பராமரிக்கப்படுகின்றனர். இதனைவிட யுத்தத்தால் ஆண்கள் பலரின் இறப்பு மற்றும் காணாமல் போனமையினால் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களே அதிகரித்துள்ளன. பெண்கள் குடும்ப வருமானத்திற்காக தொழிலுக்கு போகுமிடத்து இக்குடும்பத்து பிள்ளைகள் பல்வேறுபட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர்.
இன்று சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. அதாவது சிறுவர் ஊழியம், பாலியல் துஷ்பிரயோகம், உடலியல் துஷ்பிரயோகம், உளவியல் பாதிப்பு, உதாசீனப்படுத்தப்படல், தற்கொலை முயற்சி, காணாமல்போதல், மதுபோதைப்பொருள்களுக்கு அடிமையாதல் போன்ற பல்வேறு வகையான துஷ்பிரயோகங்களுக்கு சிறுவர்கள் ஆளாகக்கொண்டிருக்கின்றனர். இதில் மிகவும் முக்கியமாகக் கவனிக் கப்படவேண்டியது பாலியல் துஷ்பிரயோகமே. ஆண், பெண் பிள்ளைகள் இருபாலாருமே பாலியல் துஷ்பியோகத்திற்கு உட்படுவதற்கு வாய்ப்புண்டு. எனினும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லாத சிறுவர்கள், மந்த உளநிலை, ஊனமுற்றோர், வீட்டுவேலைக்காக அமர்த்தப்படும் சிறுவர்கள், தவறான உறவு முறையால் பிறந்த பிள்ளைகள், வறுமையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோ கத்திற்கு கூடுதலாக உட்படுகின்றனர்.

மற்றும் வீடுகளில் வேலைக்கு அமர்த்துவதற்காக தரகர்கள் மூலம் சிறுவர்கள் விற்கப்படுகின்றனர். இவ்வாறான ஆபத்தான நிலைமைகளுக்கு பெரும்பாலும் பெருந்தோட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற ஏழைத்தமிழ் குடும்பங்களின் பிள்ளைகளே முகம் கொடுத்து வருகின்றனர். சிறுவர் துஷ்பிரயோகம் சகல சமூக, பொருளாதார, இன மற்றும் சமய குழுக்களிலும் மேலோங்கிக் காணப்படுகின்றது. ஆனால் வரையறுக்கப்பட்ட பொருளாதார, சமூக வளங்களுடன் வாழ்க்கையில் வன்முறை உள்ளடங்கிய அதிகரித்த எண்ணிக் கையான நெருக்கடிகளைக் கொண்டுள்ள வறிய சமூக பொருளாதாரக் குழுக்களில் மிகவும் பொதுவானதாகக் காணப்படுகின்றது.

சிறுபராயம் என்பது மனித வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதொரு காலமாகும். ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் தனக்குரிய இடம் என்ன? தான் யார்? என்பதை தீர்மானிக்கும் பருவமாக சிறுபராயம் காணப்படுகின்றது. இத்தகைய முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த இப்பருவமானது எதிர்மறையாக இருக்குமாயின் எதிர்கால சமூகத்தின் ஆரோக்கியம் என்பது கேள்விக்குரியது ஆகிவிடும். சிறுவயதில் ஏற்படும் பயங்கர அனுபவங்களில் பல, சிலவேளைகளில் வாழ்நாளில் சீர் செய்ய முடியாததாக அமைந்து விடுவதும் உண்டு. இவ்வாறான மனக்காயங்கள் சமூகத்தில் பயங்கர விளைவுகளை ஏற்படுத்துவதை யாராலும் தடுக்க முடியாது. இவ்வாறு எமது பண்பாட்டுப் புலங்களில் அதிகரித்துக் காணப்படும் சிறுவர் துஷ்பிரயோகங்களும், வன்முறைகளும் தொடர்ந்து அதிகரித்துச் செல்லுமானால் “ஆரோக்கியமான சமுதாயம்” என்பது பகற்கனவாகிவிடும். எனவே இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.




காட்டேறி அம்மன்
ஜோதிட நிலையம்
பத்திரகாளி அம்மன் பூஜாரி
பண்டித் நாராயணன்
கேரளாவில் இருந்து வந்திருக்கின்றார்.
100% ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள்
எந்தப் பிரச்சினையானாலும் 3 நாட்களில் பரிகாரம்
மதுப்பழக்கத்தில் இருந்து விடுபடுவதற்கும் மூட்டுவலியிற்கும் மருந்து தயார்பண்ணிக்க கொடுக்கப்படும்
முகம் மற்றும் கைரேகை பார்த்து உங்கள் எதிர்காலம் கணித்து கூறுவார்.
வியாபாரங்கள் - எதிரிகள் - உடல்நிலை - வேலைவாய்ப்பு
குழந்தைபாக்கியம்- திருமணம் - பணம் - காதல் - விவாகரத்து
வழக்குகள்- கண்திருஷ்டி - குடும்ப ஒற்றுமை - படிப்பு
வாகனப் பொருத்தம் மற்றும் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்.
மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்.
பேசும் மொழிகள்: ஆங்கிலம், இந்தி மற்றும் தமிழ்
கிழமை 7 நாட்களும் 09:00 முதல் 20:00 வரை சந்திக்கலாம்

+49(0) 152 1350 4803
+49(0) 151 4584 9222
Rheinische Str.80
44137 Dortmund / Germany



26 ஆண்டு விழா!
Orientalische Textilien & Schmuck
எமது ஸ்தாபனத்தின் 26 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
மாபெரும் தொடர் மலிவு விற்பனை!
தரமான தேர்வில் தங்க நகைகளும் பட்டுச்சேலைகளும்
Tel: 0231 16 23 77
உரிமையாளர் எஸ்.ஜெகதீஸ்
Königswall-16 (Am HBF)
44137 Dortmund



யோகன்,யோகி:
02823/6838
Mobil:
152 138 22 350
Yogan Deko
சிவகாமி மணவறைச் சோடினை





# தன்னம்பிக்கைப் பெண்களுக்கு, தலைமை இருக்கைகள் !

“ஆணும் பெண்ணும் சமமெனும் வாதங்கள் எதற்கு ? பெண்கள் ஆண்களை விட உயர்ந்தவர்கள் அல்ல என்பதைப் பறைசாற்றவா ?” என பெண்கள் உற்சாகக் குரல் கொடுக்கும் காலம் இது. வாழ்வில் உயரவேண்டும் எனும் வேட்கை பெண்களை அலுவலகங்களுக்குள் நுழைய வைக்கிறது. அதே பெண்கள் தன்னம்பிக்கை உடையவர்களாகவும் இருந்து விட்டால் அலுவலகத்திலுள்ள உயரிய இருக்கைகளெல்லாம் அவர்களுக்காகக் காத்திருக்கும்.

தன்னம்பிக்கைக்கும் வாழ்க்கைச் சூழலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வீட்டில் மதிக்கப்படும் ஒருவர் அலுவலகத்திலும் தன்னம்பிக்கையுடன் செயல்படும் வாய்ப்பு அதிகம். வீட்டிலோ, நண்பர்களாலோ நிராகரிக்கப்படும் நபர் அலுவலக சூழலில் தன்னம்பிக்கை இல்லாமல் அவஸ்தைப் படவும் வாய்ப்பு அதிகம் என்கின்றன உளவியல் ஆய்வுகள்.

நமது வாழ்க்கைச் சூழல் பல்லாயிரம் ஆண்டுகளாக ஆண்களை மையப்படுத்தியே அமைந்து விட்டது. ஆண்களை விடப் பெண்களுக்குத் தன்னம்பிக்கையும், அதைத் தேடும் வேட்கையும் அதிகமாய்த் தேவைப்பட அது தான் காரணம்.

அலுவலக ஆண்கள் சக பெண் பணியாளரைக் கொஞ்சம் இளக்காரமாய்ப் பார்ப்பதும், பெண் உயரதிகாரிகளைக் கொஞ்சம் பொறாமையாய்ப் பார்ப்பதும் வெகு சகஜம். இந்த உளவியல் எதிர்ப்புகளுக்கு பலியாகாமல் இருக்க வேண்டியது பெண்களின் தேவை. தன்னுடைய பலங்களின் மேல் வைக்கும் நம்பிக்கையும், தனது பலவீனங்களை ஏற்றுக் கொள்ளும் திடமும் பெண்களை அலுவலகத்தில் திரும்பிப் பார்க்க வைக்கும்.

“பொம்பளைங்களுக்கு புரமோஷன் எல்லாம் எப்படிக் கிடைக்கும்ன்னு நமக்குத் தெரியாதா ? சிரிச்சுப் பேசி மயக்கி வாங்கிடுவாங்க...” என்று துவங்கி, பெண்களின் வளர்ச்சியை கீழ்த்தரமாய் விமர்சிக்கும் வாய்கள் அலுவலகத்தில் ஏராளம் உண்டு. அந்த விமர்சனங்களை வாங்கி பரிமாறிக் கொள்ளும் வராண்டாக்களுக்கும் பஞ்சமில்லை. இவையெல்லாம் பெண்களுடைய தன்னம்பிக்கையை உடைக்கும் விஷயங்கள். இதிலிருந்து தப்பி வருவதில் இருக்கிறது அலுவலகப் பெண்களின் முதல் வெற்றி. இத்தகைய விமர்சனங்கள் நீங்கள் வளர்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துபவை என்பதை உணர்ந்தாலே போதும்.

அலுவலகத்தில் ஆண் பெண் பேதமெல்லாம் கிடையாது என்று நீங்கள் முதலில் மனதில் எழுதிக்கொள்ள வேண்டும். அப்படியே ஒரு பாகுபாடு திரை மறைவில் இயங்கினால் கூட எந்த நிறுவனமும் அதை வெளிக்காட்டுவதில்லை. எனவே நிர்வாக விதிமுறைப்படி பெண்களுக்கு எதுவும் மறுக்கப்படப் போவதில்லை. அதையே துருப்புச் சீட்டாய்க் கொள்ளுங்கள். ஆணும் பெண்ணும் சமம் எனும் எண்ணமே தன்னம்பிக்கையை உயர்த்தும் நெம்பு கோல் தான். எல்லோரும் சமமெனில், அங்கே திறமைசாலிகளுக்கு மட்டும் தானே வரவேற்பு !

கேரல் ஆன் பார்ட்ஸ் என்பவர் கான்க்லோமெரேட் நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது பணி இடமாற்றம் கேட்டார். “பெண்களெல்லாம் இந்த வேலை செய்ய முடியாது. டிரான்ஸ்பர் கிடையாது” என்று சொல்லி விட்டார்கள். அவர் அசரவில்லை. அந்த நிறுவனத்தையே உதறினார் அவர். தன்னுடையை திறமையின் மேல் அசாத்தியத் துணிச்சலுடைய அவர் தான் இன்று புகழ் பெற்ற யாகூ நிறுவனத்தின் முதன்மைச் செயல் அதிகாரி (CEO).சின்ன வேலையோ, பெரிய வேலையோ உங்களுக்கு இடப்படும் பணியில் மிகச் சிறப்பாகப் பணியாற்றுங்கள். சின்னச் சின்ன வேலைகளை செவ்வனே செய்து முடிப்பவர்களுக்குத் தான் பெரிய பெரிய வாய்ப்புகள் காத்திருக்கும் எனும் அடிப்படையை மறக்காதீர்கள். புதிது புதிதாக படித்துக் கொண்டே இருங்கள். உங்களுடைய அசரடிக்கும் கல்வியினாலும், திறமையினாலும் அலுவலகத்தில் கவனிப்புக்கு உள்ளானீர்களெனில் நீங்கள் வென்று விட்டீர்கள் என்று அர்த்தம்.

“தயக்கமில்லாத மனம்” இன்னொரு தேவை. பெரும்பாலானவர்கள் அலுவலகத்தில் உயரதிகாரியிடமோ, சக பணியாளரிடமோ அலுவல் நிமித்தமான ஒரு சின்னக் கேள்வியைக் கேட்கக் கூடத் தயங்குவார்கள். “இது ரொம்ப சாதாரண கேள்வியோ ? இது கூட தெரியலையான்னு நெனச்சிடுவாங்களோ ?” போன்ற தயக்கம் தான் இதன் காரணம். உண்மையில் சாதாரண கேள்வி என்று ஒன்று கிடையவே கிடையாது. தயங் காமல் கேள்வி கேட்பவர்கள் தான் பதிலைப் பெற்றுக் கொள்கிறார்கள்.











16 ம் பக்க தொடர்ச்சி....

## தன்னம்பிக்கைப் பெண்களுக்கு,

"நீங்கள் அடிக்காத எந்த ஷாட்டும் கோலாக மாறுவதில்லை" என்பார் வேன் கிரெஸ்கி எனும் உலகப் புகழ் ஹாக்கி வீரர். முதல் சுவடு எடுத்து வைக்காத பயணங்கள் இல்லை. சிறகை விரிக்காமல் வானத்தில் பாதைகள் இல்லை. எனவே தோல்விகள் ஏற்படுமோ, பிறருக்கு முன்னால் ஒரு அவமானச் சின்னமாய் நிற்போமோ எனும் பயமே வேண்டாம். தோல்வியை ஏற்றுக் கொள்ளும் மனிதனை அவமானங்கள் சந்திப்பதில்லை.

தயங்குபவர்கள் அலுவலக சூழலில் முன்னேற முடியாது. அவர்களை மிதித்து, அவர்களுடைய முதுகில் ஏறி மற்றவர்கள் ஓடிக்கொண்டே இருப்பார்கள். அப்புறம் காலம் முழுதும், மிதிபட்டுக் கொண்டே கிடக்க வேண்டியது தான். எனவே தயக்கம் இல்லாத அணுகுமுறை அலுவலக வாழ்வில் ரொம்ப அவசியம்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். "இது என்னால் முடியும்" என்று சொல்வது மட்டுமல்ல தன்னம்பிக்கை, "இதை என்னால் செய்ய முடியாது.." என்று சொல்வதும் தன்னம்பிக்கையின் வடிவம் தான். குறிப்பாக அலுவலக சூழலில் உங்களால் முடியாத விஷயங்களை "முடியாது" என்று மறுத்தால் தான் நீங்கள் கம்பீரக் குதிரை ! இல்லையேல் பொதி சுமக்கும் கழுதை தான். எப்போதும் உங்கள் முதுகில் ஏதேனும் விழுந்து கொண்டே இருக்கும் !

"வேலை விஷயத்தில் நான் ரொம்ப திறமைசாலி" எனும் உயர்வான அபிப்பிராயம் இருக்க வேண்டியது அவசியம். நம்மை நாமே உயர்வாக நினைக்கவில்லையேல் பிறர் உயர்வாக நினைக்கப் போவதில்லை.

பெண்களின் தன்னம்பிக்கைக் குறைபாடுகளுக்கு பெற்றோரும் ஒரு வகையில் காரணம் என்கின்றனர் உளவியலார்கள். சின்ன வயதிலிருந்தே அவர்களை சிறப்புக் கவனம் எடுத்து தன்னம்பிக்கை ஊட்டி வளர்த்தால் அவர்கள் அலுவல் வீதிகளில் நடக்கும் போது தலை கவிழ்வதில்லையாம் ! சின்ன வயதில் அப்பா, அம்மா பிறகு நண்பர்கள், அதன் பின் கணவன் அவருடைய குடும்பம் என பிறர் சொல்லும் கருத்துக்களின் பிரதிபலிப்பாய் பெண்கள் தங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள்.

உண்மையில் பெண்கள் பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதன் பிம்பமல்ல. தான் யார், தன்னுடைய இயல்பு என்ன என்பதைப் பெண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் எந்தெந்த விமர்சனங்களை ஏற்றுக் கொள்கிறீர்களோ, அப்படியே ஆகிவிடுகிறீர்கள். "உங்களுக்கு எஜமானர் நீங்களே" எனும் சிந்தனை இருந்தால் மட்டுமே உங்களால் வெற்றியடைய முடியும்.

ஏஞ்சலினா ஜூலி ஹாலிவுட்டைக் கலக்கும் ஹீரோயின். ஒருகாலத்தில் தாழ்வு மனப்பான்மையினால் உழன்றவர். அதிலிருந்து வெளியேறி தன்னம்பிக்கை யைத் துணையாக்கியபின்பு அவருடைய வாழ்க்கை வெற்றிகரமாய் மாறியது ! அவரைப் பார்த்து வியப்பவர்கள் அவருடைய தன்னம்பிக்கைப் பாடத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

உங்கள் ஒவ்வோர் செயலிலும் தன்னம்பிக்கை புலப்பட வேண்டியது அவசியம். உங்கள் நடையில், உங்கள் கைகுலுக்கலில், உங்கள் பேச்சில் ஏன் நீங்கள் அமர்வதில் கூட உங்களுடைய தன்னம்பிக்கை வெளிப்படட்டும். எந்தக் காரணம் கொண்டும் அலுவலக விஷயங்களைச் செய்யும் போது எமோஷனாகாமல், கண்ணீர் விடாமல், தழு தழுக்காமல் இருங்கள். இவையெல்லாம் குடும்ப வாழ்வில் நல்லதாக இருக்கலாம். ஆனால் அலுவலகத்தில் உங்களுக்கு எதிராய் ஒரு முத்திரை குத்தப்பட இவையெல்லாம் காரணமாகிவிடும். உங்கள் முன் மாதிரிகளை நிஜ வாழ்க்கையிலிருந்து கண்டெடுங்கள். தொலைக்காட்சியோ, சினிமாவோ உங்களுக்கு நிஜமான ஒரு




முன்மாதிரிகையைத் தராது. அவர்களைப் போல தோற்றமளிக்க வேண்டும் என நினைப்பது உங்களுடைய மன அழுத்தத்தைத் தான் அதிகரிக்குமே தவிர தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்யாது. உங்களை எதெல்லாம் ஊக்கமூட்டுமோ அதையெல்லாம் விரும்பிச் செய்யுங்கள். அது அலுவலக வேலையாய் இருக்கலாம், சமூக சேவையாய் இருக்கலாம் அல்லது கவிதை எழுதுவதாய் கூட இருக்கலாம். அதே போல யாரெல்லாம் உங்களுடைய தன்னம்பிக்கையை அதிகரிக்கிறார்களோ அவர்களோடு மட்டுமே அதிக நேரம் செலவிடுங்கள். உங்கள் மனம் ஒரு அழுத்தமற்ற பூந்தோட்டமாக இருக்கவேண்டும். அதில் சுதந்திரக் காற்று சுற்றி வரவேண்டும். அலுவலகத்தில் உங்களுடைய தன்னம்பிக்கை உங்களை உயர்த்தும் போது, உங்கள் வீட்டிலும் அந்த மகிழ்ச்சி பரவும். வீட்டில் ஆனந்தம் அதிகரிக்கும் போது அந்த மகிழ்ச்சி அலுவலகத்தில் உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.தன்னம்பிக்கைப் பயணத்தில் உயர்வுகளும் தாழ்வுகளும் வந்து கொண்டே இருக்கும். தாழ்வுகளைக் குனிந்து பார்த்து மருகுவதை விட, உயர்வுகளை உதாரணமாய்க் கொண்டு மேலும் உயர்வுகளை நோக்கிப் பயணிப்பதே சிறந்த அணுகு முறையாகும். இயலாதென முடங்கியது கற்காலம் வெற்றியென முழங்குவதே தற்காலம் !

## 16 வது ஆண்டு நினைவுப் பூக்கள்!

மலர்வு:
12.05.1988



பிரிவு:
16.03.2001

**செல்வி கஜனி தேவராஜா**
(பிறேமன், ஜெர்மனி)

அன்பின் திருவுருவே! அருமைக்
கஜனியம்மா!
சொல்லாமல் நீ பிரிந்த துயஉ இன்னும்
நீங்கவில்லை.
ஆண்டுகள் பதினாறு ஆனதம்மா இப்போது!
அருமைக் கஜனி! உந்தன் அன்புமுகம்
எங்களுக்குள்
நிலையாகி உந்தன் நினைவுகளை
வளஉக்கிறது!
காலங்கள் கரைந்தாலும் கலையாத
உறவாக
வாழ்ந்திருப்பாய் எங்களுடன்!
அன்பே நீ அமைதி பெறு ஆதிசக்தி
நிழலினிலே!
என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா அப்பா அக்கா அத்தான்

S.Thevarajah (U.K.)

RKL IMMO .de IMMOBILIEN & BAUFINANZIERUNG
Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan | Tel. 05723-914519 | www.rklimmo.de | info@rklimmo.de



Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை
**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com



ஸ்ரீ மகா காளி ஜோதிட நிலையம்



Sri Maha Kali Jothida Nilayam
யோ்மனி வாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி

Astro Palmist
Pandit Thulasidasan

அகில உலகப் பிரசித்திபெற்ற ஜோதிடர்
பண்டிற் துளசிதாஸ் அவர்களின் வருகை

ஆன்மீக அன்பர்களின் வாழ்வு மேலும் வளம் பெறவும், திருமணங்கள், காதல்விவகாரங்கள்,வியாபார வெற்றியை தரக்கூடிய பலனையும் மற்றும் குடும்ப முரன்பாடுகளை நீக்கியும்.குழந்தைச் செல்வங்கள் தடைப்பெறும் சர்ப்பதோஷம் ராகு கேது நிவர்த்திப் பரிகாரங்கள் வழங்கியும் நோய் நொடிகள் கடன் தொல்லைகள் மற்றும் பணம் பொருள் வீடு வாசல் பெற்று பயன்பெற உங்களிடம் யாதகக்குறிப்பு இல்லாவிடினும் கணித்து பலன் சொல்லப்படும். இல்லையேல் கைரேகைமூலம் பலன் சொல்லப்படும்..





Heiderstr.86. 45476 Mülheim
(Bushaltestelle:Steinmetzstr)

காலை 9.00 மணியில் இருந்து
இரவு 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு:
0152 181 33 859
0177 277 6982



ADCHAYA INTERNATIONAL 20th ANNIVERSARY
ADCHAYA INTERNATIONAL
PRESENTS
அதிரடி அட்டகாச விற்பனை..!
20 -வதுஆண்டு பூர்த்தியை முன்னிட்டு...
எமது புதிய வெளியீடுகள்...! நம்ப முடியாத விலையில்...!
ஐரோப்பிய தரச்சான்றிதழ் ( CE ) பெற்ற தரம் வாய்ந்த பொருட்கள்...!
Adchaya International
AYVIN THE PERFECT CHOICE
"AYVIN" RICE COOKERகள்.
உங்களின் வேண்டுகோளிற்க இணங்க் எங்கள் ஸ்தாபனத்தின் இருபதாவது ஆண்டு கொண்டாட்ட தருணத்தில் அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறோம்.
3.6 LTR RICE COOKER (3Kg அரிசி அவியக்கூடியது)
5.6 LTR RICE COOKER (4.7Kg அரிசி அவியக்கூடியது)
8 LTR RICE COOKER (6.7Kg அரிசி அவியக்கூடியது)
12 LTR RICE COOKER (10Kg அரிசி அவியக்கூடியது)
வர்த்தக தேவைகளுக்கான பலதரப்பட்ட அளவுகளில்...!
AYVIN THE PERFECT CHOICE
Vidiem you inspire we innovate
5 YEAR WARRANTY ON MOTOR
750 Watts
ARIA Cool Tec Motor
Versa Pro
Hands Free Grinding
Self Locking Jars
Self Lubricating Bushes
Dynamically Balanced Blades
Tri-Mate Couplers
Sturdy Handles
எல்லாமே புதுசு...!
600 Watts
Preethi மிக்ஸிகளின் முன்னோடிகள்!
இப்பொழுது Vidiem BRAND வாயிலாக உங்கள் சமையலறைகளில் எங்கள் தயாரிப்புகள்...
Vidiem you inspire we innovate
AIR PRIDE
Light as Air, Strong as Steel
GAS COOK TOPS
Bring Colour to your kitchen
உலகின் முதலாவது உயர்தரமான FRAMELESS கண்ணாடியினால் ஆனது
பெரியளவுபானை, பாத்திரங்கள் வைத்து சமைக்கும் தாராளமான இடவசதி
தொடர்ச்சியான சமையலுக்கு ஏற்ப வெப்பத்தை சீராகபரப்பும் தலைசிறந்த பித்தளை பர்னர்கள்
நீடித்து உழைக்கும் கடினமான கேஸ்டியூப் எரிசக்தியை வீணாக்காமல் காக்கிறது
சக்தி வாய்ந்த மேல் பூச்சினால் மேலும் நீடித்த உழைப்பு...தலை சிறந்த வடிவமைப்பு
கூடுதல் கவர்ச்சியாக வண்ணங்களில்
ஒரு வருட வாரண்டி
எமது பாரம்பரியத்தின் நறுமணம்
MOKSH AGARBATTI அகர்பத்திகள்
இப்பொழுது ஐரோப்பா எங்கும் பலதரப்பட்ட வடிவங்களில் பல்வேறு நறுமணங்களில்...!
"இனி நீங்கள் கொள்வனவு செய்யும் அகர்பத்தி 'MOKSH'தானா என்பதை உறுதி செய்து வாங்குங்கள் !"
(HEMA MALINI)
NATURAL, ROSE, SANDAL, JASMIN, LAVENDER, VANILLA, LOTUS, CHINNAMON, VANILA ORANGE, STRAWBERRY, CHOCOLATE, COFFEE, COCOVANILA, CHINNAMON ORANGE
மேலும் பல நறுமணங்களில்...
2 min இரண்டு நிமிடத்தில் ஆரோக்யமான புட்டு ரெடி
MICRO PRESSURE PUTTU MAKER
MICRO PRESSURE PUTTU COOKER 2 IN ONE
MICRO PRESSURE PUTTU COOKER 3 IN ONE
இனி நீங்கள் சமையலறையில் அதிக நேரம் செலவிடத் தேவையில்லை... உங்கள் சமையலறை வேலைகளை இலகுபடுத்த அரியதோர் தீர்வு இரண்டு நிமிடத்தில் ஆரோக்யமான புட்டு ரெடி...!
ULTRA wet grinder PERFECT + WITH ATTA KNEADER & COCONUT SCRAPER
ATTA KNEADER
COCONUT SCRAPER
10 வருட உத்தரவாதம்
எலெக்ட்ரானிக் டைமர் பொருத்தியது
அரைத்து முடிந்ததும் பஸ்ஸர் ஒலி
150 வாட் மோட்டார் சிறந்த அரவைக்கு
PRESSURE COOKER - ENDURA+
ULTRA
சமைத்த பின்பும் உணவு 2 மணி நேரம் சூடாகவே இருக்கும்
10 வருட உத்தரவாதம்
துரித சமையலுக்கு ஏற்றது
அதிக அழுத்தம் தாங்கக்கூடிய கீழ்ப்பகுதி
இண்டக்ஷன் ஸ்டவ்விலும் சமைக்கலாம்
கவர்ச்சியான மிடுக்கான தோற்றம்
100% QUALITY
SPECIAL OFFER FREE DELIVERY..!
எங்கள் ஸ்தாபனத்தின் இருபதாவது ஆண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு
இம்மாதம் "பிப்ரவரி 20 முதல் மார்ச் 30 வரை" ஜெர்மனிக்கு மட்டும் FREE DELIVERY ..!
SPECIAL OFFER FREE DELIVERY..!
உங்கள் ஆர்டர்களுக்கும் வர்த்தக தொடர்புகட்கும் :
ஜெர்மனி ADCHAYA INTERNATIONAL 0231-13091030
லண்டன் ANJAARA UK LTD., 07703214389
சுவிஸ் (சூரிச்) IMPORTAS : 0433 430355 MOHANATHAS : 0763315559
பிரான்ஸ் (பாரிஸ்) RAVI : 0952 854664




ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இலவ்வையம் தழைக்குமாம்”

என மாதர் தம் சுதந்திரத்திற்கும், உயர்விற்கும் ஆதார சுருதி சேர்த்தவர் நம் மீசைக்கார நாயகன் பாரதி. பெண்களின் உள்ளத்தில் கூடு பாய்ந்து, அவர்தம் எண்ணங்களை மொழி பெயர்த்து தமிழ் உளி கொண்டு கவி செதுக்கி முழங்கிய 1904 - 1908 காலப்பகுதியில் பெண் விடுதலைக்குத் தீவிரமாகத் தன் சக்தி கொடுத்து மஹா சக்தியைப் பணிந்து நின்றார்.

மாதர் தம்மை மாதவம் என்று எண்ணிய பாங்கினைப் பல பாடல்களில் பதித்துச் சென்றுள்ளார். சம மரியாதையோடு நடாத்தப்பட வேண்டும். பின் ஈடுபாடற்ற பால்ய விவாகங்கள் தகர்க்க வேண்டும். தேசம் சிறக்க சம கல்வியுடமை வழங்கப்பட வேண்டும். கற்பு என்பது இரு சாரார்க்கும் பொருந்தும். மாதர் அறங்கள் மாட்சி பெற்றதாய் அமைய வேண்டும் என்று ஒவ்வொரு படியாய் உயர்த்திச் சென்றவர். காதல் என்னும் ஆச்சர்ய மாயைக்குள் கண்ணம்மா எனக்கூறி விண்ணகம் எட்டச் செய்யும் சொற்களைத் தாங்கிச் செல்கிறார் ஈற்றில் பெண்களை மகா சக்தி தெய்வதற்கு நிகராக்கி நின்றார்.

“கொடியர் நம்மை அடிமைகள் என்றே
கொண்டு, தாம் முதல் என்றனரன்றே
அடியோ டந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவு யாவும், பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர்.”

எனப் பெண் விடுதலையில் வீரக்காரிகைகளைத் துணிந்திடச் செய்தார். ஸ்திரிகளை மிருகங்களாக வைத்து நாம் மாத்திரம் மகரிஷிகளாக முயலுதல் மூடத்தனம். பெண் உயராவிடில் ஆணுக்கெங்கே உயர்ச்சி என்றெண்ணியவர் பெண் விடுதலை கிடைத்து விட்டதாய் என்றே எண்ணி கும்மியடி! நன்மை கண்டோம் என்று கும்மியடி என உற்சாக உத்வேகம் தந்தார்.

“மாட்டையடித்து வசக்கித் தொழவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார் - அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி”

பெண் விடுதலை சம்பந்தமான தனது கட்டுரைகளிலும், பாடல்களிலும் அறியா வயதில் விரும்பாது புனைந்திடும் திருமண பந்தங்களுக்கு ஆதரவின்றியே இருந்தார். ஒரு பெண் உடன்படாது கட்டாயக்கல்யாணம் பண்ண வைப்போர் மீது கடிந்துரைத்தார்.

“வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்”

## கற்பு என்பது இரு சாரார்க்கும் பொருந்தும்.

சிவனும் சக்தியும் போல், மஹா விஷ்ணு ஸ்ரீ லக்ஷ்மியும் போல் புருஷனும் ஸ்தீரியும் உயிர்துணையாய் வாழ்வின் ஊன்றுகோலாய் அமைய வேண்டும் என்பதே அவரது அவா. கணவன் - மனைவி பரஸ்பர உறவிற்குள் அடங்கும் அற்புதத் தத்துவங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழி சமைக்கும் அகிலத்து உய்விற்கும் உறுதியளிக்கும்.

“காதலொருவனைக் கைபிடித்தே, அவன்
காரியம் யாவினும் கை கொடுத்து,
மாதறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி”

வீடு செழித்தால் நாடும் சிறப்படையும் குடும்பம் தளைக்க நல்லறிவுடை மாந்தர் வேண்டும். பெண்ணிற்கு வழங்கப்படும் கல்வி இந்த வையம் உயர்திடும் வழி, பேதமையற்று இன்புற்றிருக்க பெண்களுக்கும் சம கல்வி கிடைக்க வேண்டும் என்று “முரசு” கவியில் எடுத்துரைத்தார்.

“கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமையற்றிடும் காணீர்”

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் அறிய வேண்டும். பற்பல நூற்களைக் கற்க வேண்டும். நாற்றிசையும் வேறு பல நாடுகளுக்கும் பயணித்து புதுமைகளைத் தேடி அறிய வேண்டும். இவற்றை விட்டு விலகி வீட்டில் ஓர் பொந்தில் வாழ்வதை வீரப் பெண்கள் விரும்பிட மாட்டார். விரைவில் ஒழிப்பார் என்று புதுமைப் பெண் இலக்கணம் தந்தார்.
பெண்களின் ஒவ்வொரு பருவத்திலும் தக்க மரியாதையொடு தமிழால் அன்பு செய்தவர் நம் தலைவன் பாரதி. பெண்ணிலைக்குப் பேரிடம் கொடுத்து உச்ச ஸ்தான மாட்சிப் புகழைக் காதலால் தந்தான். மாணுடைய பேரரசே” எனக் கண்ணம்மாவை வாழ்த்தி வேதனையின்றி இருந்தேன் என்றார்.

“இந்த வையத்தில் யானுள்ள மட்டிலும்
எனை வேற்று நினைவின்றித் தேற்றியே
இங்கோர் விண்ணகனாகப் புரியுமே”

கண்ணுக்குள் மணியெனக்குக் காதல் ரதியானவள் என்றும் பற்பல தருணங்களில் காதலியால் மேன்மையுற்றிருப்பதாய் காதலின் உன்னதத்தை உள்நின்றாடும் இன்பக்களியை கவியாக்கிய வள்ளல்.

பெண்மையின் தன்மையறிந்து புனிதப் பண்பு மாசுறாது. இதயச் சுரங்கத்தை கட்டவிழ்த்து அவர்கள் எண்ணக்கனவினை வழிந்தோடவிடில் அப் பெண்ணின் சக்தி என்பது இப்புவியில் நிலைத்து நிற்கவல்ல மகாசக்தியாய் மாறிடும். அந்த வகையில் தையலைத் தாய் பராசக்திக்கு ஈடொன்று கோபுரத்து உச்சத்திற்கு கொண்டு சேர்க்கிறார் தெய்வப்புலவர்.

“ஞான ஒளி வீசுதடி நங்கை நின்றன் சோதிமுகம்”

“ மங்களக் கைகள் மகாசக்தி வாசம்”

மஹா சக்தி துணை நிற்பாள், ஆதலால் சகோதரிகளே! பெண் விடு தலைக்காக தர்ம யுத்தம் தொடங்குங்கள் என்று சாத்வீக எதிர்ப்பு முறையைத் தன் கட்டுரைக்களில் மொழிந்தவர். எத்தனை இடர் வரும் தருணங்களையும் நெற்றியில் உமிழ்ந்து விட்டு நிமிர்ந்து துணிவதற்கும், உடைந்து போகும் ஒவ்வொரு எண்ணக் குமிழ்களுக்குள்ளும் புத்துயிர் தந்து விண்ணில் பறக்க சிறகு தருவதற்கும் புரட்சிக் கோமகன் பாரதி தந்த பொக்கிஷத் தமிழே பெண்களின் கூர்வேல் ஆயுதம்.

ஏன் ஒவ்வொரு பரிமாணமாகப் பெண்ணிலைக்காய்ப் பேரோலமிட்டு பேராழியாய்ப் பல கவி படைத்தவர்க்கு இம்மாதம் மட்டுமல்ல, எற்றைக்கும் சரணடைந்தேன்.

S.J. ASIAN - AFRO STORE







உங்கள் இலத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
பசுமையான மரக்கறிகள்
மற்றும் தரம்மிக்க
கடல் உணவுப் பொருட்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுப்
பயனடையுங்கள்.

Mannheim
S1 – 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

Ludwigshafen
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de



Indo Afro Travels
68161 Mannheim

உங்கள் பயணங்களை மகிழ்வூட்ட
சிறந்த விமானச் சீட்டுக்களுக்கு
எம்மை நாடுங்கள்.


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
45க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
INCLUDED
TENT KOTTA
1000க்கும் அதிகமான
Tamil Super hit
திரைப்படங்கள்
INCLUDED
EROS NOW
6000க்கும் அதிகமான
Hindi &Tamil
திரைப்படங்கள்
விசேட சலுகை ஒருவருட
இணைப்புச் சந்தா
LYCATV SET TOP BOX உடன்
£/€ 99
மட்டுமே
Roku
chromecast
amazon fireTV
Samsung SMART TV
Panasonic
LG Smart TV
SONY
kindle fire
SUBSCRIBE NOW!
GERMANY
069 1200 7102
UNITED KINGDOM
0207 132 2727
www.lycatv.tv




# மீண்டும் ஒரு பிறப்பிருந்தால் ஆணாகவோ பெண்ணாகவோ பிறக்க ஆசை?

**றஜினா தருமராஜா**

பிறப்பு என்பது இறைவன் தந்ததல்லவா?
ஆணாகப் பிறந்தால் தான் என்ன அல்லது பெண்ணாகப் பிறந்தால் தான் என்ன? யாராக இந்த உலகிற்கு வந்தாலும் நன்றாக வாழ்வதில் தான் அமைந்துள்ளது நமது அனைவரினதின் வாழ்க்கை.
பதினெட்டிலிருந்து நாற்பைத்தைந்து வயதிலுள்ள ஆண்களையும் பெண் களையும் கேட்டு பதில்களைப் பெற்றுக்கொண்டேன்.

பெண்கள் கூறியவை: மீண்டும் ஒரு பிறப்பிருந்தால் ஆண்களாகப் பிறக்க ஆசைப்படுகிறார்களாம். ஏன் இந்த ஆசை என்று கேட்ட பொழுது ஆண்களின் உலகம் எப்படி இருக்கும் என்பதை தெரிந்து கொள்வதற்காக அப் பிறவியை எடுக்க நினைக்கிறார்கள் என்றார். தற்பொழுது ஆண்களை புரிந்து கொள்ளமுடியவில்லை என்கிறார். சில சந்தர்ப்பத்தில் எப்படி முடிவுகள் எடுப்பார்கள் என்பதை அறிவதற்காகவும் என்றார்.
மற்றும் பெண்களை ஏமாற்றும் ஆண்களை ஆணாகப் பிறந்து கண்டிக்கப் போகிறார் என்றும் ஆவேசத்துடன் உரத்திச்சொன்னார். ஆனால் பெண்ணாகப் பிறந்ததைப் பெருமையாக நினைக்கிறேன் என்றும் அடுத்த பிறப்பில் மறுபடியும் இவ்வற்புதமான பெண் இனத்தில் பிறந்தால், இப்பிறப்பில் செய்த தவறுகளை நிவர்த்தி செய்ய முயல்வார் என்று உறுதியாகக் கூறினார். பெண் என்பவர் ஆணைவிட உடல் வலிமை குறைந்தவளாகக் காணப்படுகிறாள். ஆனால் தற்சமயம் ஆண்களோடு போட்டிபோடும் அளவிற்கு தயாராக இருக்கின்றனர். கல்வி, விளையாட்டுத்துறை, வேலை எல்லா இடங்களிலும் பெண்கள் குறைந்தவர்கள் அல்ல என்று நிருபித்திருக் கிறார்கள். ஆகையால் பெண்ணாகப் பிறப்பது மகிழ்ச்சி என்றார்.ஆனால் அம்மாவாக இருப்பவர் பல துன்பங்களை அனுபவிக்கிறார். ஆண்களை விட மனதளவில் வலிமை குறைந்தவர்களாகக் காணப் படுகிறார்கள்.அந்த ஒரு கவலை தான்.

ஆண் ஒருவர் கூறுகிறார், வாழ்க்கையில் நாம் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதும் இல்லாததும் ஒவ்வொருவரின் வாழ்க்கைமுறையில் தான் அடங்கியுள்ளது. மறு பிறப்பில் யாராகப் பிறந்தாலும் சரி நல்லதொரு மனிதனாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.
பெண்களைத் தாழ்த்தி பார்ப்பதே சிலரின் சுபாவம். அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறைவாக இருக்கும். வாழ்க்கையில் ஆண்களுக்கு அடிபணிந்து இருத்தல் வேண்டும். அதனால் தான் நான் ஆணாகவே மறுபடியும் பிறக்க ஆசைப்படுகிறேன்.
பெண்களை ஆண்களை விட உயர்ந்தவர்களாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். திருமணம் நடந்த பின் அவர்களுக்குக் குழந்தைகள் இல்லையென்றால் என்ன சொல்வார்கள்? பெண்களிடம் தான் குறை என்பார்கள். அதனால் தான் நான் ஆணாகவே பிறக்க ஆசைப்படுகிறேன்.
ஓர் ஆசிரியரைக் கேட்டேன். அவர் கூறியவை: அடுத்த பிறவியில் பெண்ணாக பிறக்க ஆசை.

**உள்ளம்** :புரியாத அப்புதிரை புரிய வேண்டியும்,அறியாத அந்த ஆழத்தை அறியவும். **உடல்:** வந்த அந்த மூன்று நாட்கள், வராத அந்த முன்னூறு நாட்கள், அந்தப் பிரசவம், அதன்பின் பாலூட்டும் இன்பம் இவற்றை அனுபவிக்க அடுத்த பிறவியில் பெண்ணாக பிறக்க ஆசை என்றார்.

ஓர் ஆண் குடும்ப சுமைகளைத் தாங்கும் தலைவன். கடினமாக உழைப்பவர். பிள்ளைகளுக்கு வேண்டிய அனைத்தையும் வாங்கி தருபவர். எல்லா ஆண்மகனாலும் அன்பை வெளிப்படையாகக் காட்டமுடியாது. ஆனால் பாசத்தை மறைத்து வைத்திருப்பவர்கள் தான் இவர்கள்.

பெண் என்பவர் வீட்டுசுமைகளை தாங்குபவர். ஓர் உயிரை தன் உயிரைக் கொடுத்து உலகிற்கு கொண்டு வருபவர். ஓர் அம்மாவாக ஒரு மனைவியாக பல சுமைகளைத் தாங்கிச் செல்பவர். இதிலிருந்து என்ன தெரிகிறது? ஆணாகப் பிறந்தாலும் பெண்ணாகப் பிறந்தாலும் நன்று தான். நேர்மை யாகவும், பொய்களின்றியும், ஏமாற்றம் செய்யாமலும் நல்லொழுக்கத்துடன் பெற்றோரைக் கவலைப்படாமல் வைத்துப் பார்ப்பதிலும் தான் நமது வாழ்க்கை அடங்கியிருக்கிறது.ஆணாகப் பிறந்தவர் பெண்ணையும், பெண்ணாகப் பிறந்தவர் ஆணையும் மதிக்க வேண்டும். இப்படி இருந்தால் வாழ்க்கை சொர்க்கம்...




13 வது ஆண்டில்
ஐரோப்பிய தமிழ் வானொலி

நீங்கள் ஆயிரக்கணக்கான யூரோக்கள் நிதி நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்களா?
01522 7565934
0231 58695276
rajeevan.mahalingam@swisslife-select.de
நீங்கள் வீடு வேண்டப் போறீர்களா?
வீட்டுக்கடன்: 1,13 % லிருந்து
வங்கிக் கடன்: 1000 € = 1,65 € மாத வட்டி

# யேர்மனிய வீராங்கனை ஸ்ரெவ்வி கிராப் பெற்றிருந்த 22 வெற்றிகள் முறியடிப்பு!





வ.சிவராஜா

## அக்காவும் தங்கையும் 4 மில்லியன் பரிசை அள்ளிச் சென்றனர்!

ஒரு நாள் வருமானம் 4 மில்லியன் (40 லட்சம் US டொலர்) பரிசுப்பணம். என்ன இது 40 லட்சம் டொலர் கணக்கு என்று யோசிக்காதீர்கள். ஆம் அக்காவும் தங்கையும் ஒரு நாள் சேர்த்த பரிசுப் பணமாகும். ஒரு நாளில் 40 லட்சம் அமெரிக்க டொலர்களை அள்ளிச் சென்றுள்ளனர். களவெடுக்க வில்லை, தட்டிப்பறிக்கவில்லை, கொள்ளையடிக்கவில்லை. தமது மன உறுதியாலும், உடல் வலிமையாலும், பயிற்சியாலும் முயற்சியாலுமே அக்காவும் தங்கையும் ஒன்று சேர்ந்து ரெனிஸ் விளையாட்டின்மூலம் ஒரே நாளில் 40 லட்சம் அமெரிக்க டொலர்களைப் பரிசாகப்பெற்றதால் ஒரே குடும்பத்தில் இந்தப் பெருந்தொகைப் பணம் சென்றிருப்பது வரலாற்றுச் சாதனையாகும்.

ஆம்...கடந்த 16.1.2017 தொடக்கம் 29.01.2017வரை மிகவும் பிரபலமான அவுஸ்திரேலிய ரெனிஸ் போட்டி Australian Open Grandslam ரெனிஸ் தொடரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அக்கா (Venus) வீனஸ் வில்லியமும் தங்கை (Serena) செரீனா வில்லியமும் மோதிக்கொண்டனர். இத்தொடரில் சகோதரிகள் இருவரும் வெவ்வேறு அணிகளாக உலகப்புகழ் பெற்ற ஒவ்வொருவரும் 7 வீராங்கனைகளைத் தொற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினர். கடந்த 28.01.2017 அன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் சகோதரிகள் இருவரும் சந்தித்தனர். மிகவும் விறு விறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் தங்கை செரீனா 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றிவாகை சூடினார்.

உலகில் நடைபெறும் ரெனிஸ்போட்டிகளில் மிகவும் பிரபலமானதும் புகழ் வாய்ந்ததும் பெரும்தொகைப் பரிசுப்பணம் வழங்கப்படுவதுமான Grandslam என்று அழைக்கப்படும் ரெனிஸ்போட்டிகளான.. Australian open, Franch open, Wimbledon, US open என நான்கு போட்டிகள் வருடாவருடம் நடைபெறுவது வழக்கமாகும். அந்த வகையில் இந்தவருடத்தின் முதல் போட்டி அவுஸ்திரேலியாவில் கடந்த 16.01.2017 தொடக்கம் 29.01.2017 வரை பல்லாயிரம் பார்வையாளர்கள் மத்தியில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்தது.

சுமார் நூறு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த ரெனிஸ் விளையாட்டாகும். முன்னர் இது பணக்காரர்களின் விளையாட்டாகவே இருந்து வந்தது. பல வருடங்களின் பின்னரே சாதாரண வீரர்களும் கலந்துகொள்ளும் விளையாட்டாக மாறியது எனலாம். வெள்ளைக்காரர்களுக்கும் பணக்காரர்களுக்கும் உரியதாக இருந்த விளையாட்டை அமெரிக்க கறுப்பின வீராங்கனையான செரீனா வில்லியம் அவர்களே 1999ல் உலக ரெனிஸ் கிண்ணத்தை வென்று கறுப்பு இனத்தவர்களாலும் இந்தவிளையாட்டில் ஜெயிக்க முடியும் என்பதை நிரூபித்ததால் வரலாற்றில் இது ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

26.09.1981ல் அமெரிக்காவில் பிறந்த கறுப்பினத்தவரான செரீனாவுக்குத் தற்போது 35 வயதாகும். 70 கிலோ நிறையுடைய இவர் 175 சென்றிமீட்டர் உயரமுடையவராவர். தன்னாலும் ரெனிஸ் விளையாட்டில் பிரகாசிக்க முடியும் என உலகிற்குக் காட்டியவர்தான் இந்த இளமங்கை செரீனா. சுமார் 22 வருடங்களாக விளையாடிவருகின்றார்.

உலக ரெனிஸ் விளையாட்டில் Grandslam என்று அழைக்கப்படும் பெரும் புகழ் வாய்ந்ததும் பெரும் பரிசுத்தொகைகொண்டதுமான நான்கு போட்டிகள் வருடாவருடம் நடைபெறுவது வழக்கமாகும் இந்த நான்கு போட்டிகளிலும் இவர் பல தடவைகள் வெற்றிபெற்றதுடன் வெற்றிக்கிண்ணங்களையும் பரிசுத்தொகைகளையும் அள்ளிக் குவித்திருக்கிறார். அதுவும் இந்தப் புகழ்வாய்ந்த வெற்றிக்கிண்ணங்களை ஒரு தடவையல்ல உலகிலே ஆகக்கூடியதடவைகள் பெற்றது என்ற சாதனையையும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.



செல்வி செரீனா கடந்த 28.1.2017ல் அவுஸ்திரேலியாவில் வெற்றிபெற்றதன் பின்பு இந்த Grandslam என்ற உலகப் புகழ்பெற்ற ரெனிஸ் போட்டியில் 23 தடவைகள் வெற்றிபெற்று புதிய உலக சாதனையைப் படைத்திருக்கிறார். இதுவரை ஜேர்மனிய வீராங்கனை ஸ்ரெவ்வி கிராப் பெற்றிருந்த 22 வெற்றிகளை முறியடித் திருக்கிறார்.

இவை மட்டுமல்லாமல் ஒரே ஆண்டில் 3 Grandslam வெற்றிக்கிண்ணங்களை வென்று இன்னுமொரு சாதனையையும் பெற்றிருக்கிறார்.

அவுஸ்திரேலியா ரெனிஸ் திறந்த சுற்று- 2017

கடந்த 16.01.2017 தொடக்கம் 28.01.2017 வரை நடைபெற்ற இப்போட்டியில் உலக வீராங்கனைகள் பலர் பங்குகொண்டனர். இதில் பல சுற்றுக்களில் 7 பேரைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்குத் தெரிவானார். இவரைப்போலவே இவரின் சகோதரியான வீனஸ் வில்லியமும் பல சுற்றுக்களில் 7 பேரைத் தோற்கடித்து அவரும் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி இருவரும் கடுமையாக மோதிக்கொண்டனர். இறுதியில் தங்கை செரீனா 6-4, 6-4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிவாகை சூடிக்கொண்டதுடன் 23வது Grandslam Cup ஐயும் பெற்று உலக சாதனை படைத்தார்.

2003ம் ஆண்டுக்குப்பின் அதாவது 14 வருடங்களின் பின் அக்காவும் தங்கையும் இறுதிப்போட்டியில் மோதிக்கொண்டது 2017 அவுஸ்திரேலியா ரெனிஸ் போட்டிதான். இது உலக சாதனையாகவும் பதியப்பட்டுள்ளது. இந்த அவுஸ்திரேலியா திறந்த சுற்றுப் போட்டியில் தங்கை செரீனா 2.67 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அக்கா வீனஸ் 1.34 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் பரிசாகப்பெற்று சுமார் 4 மில்லியன் டொலர்களை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் ஒரே நாளில் அள்ளிச் சென்றிருப்பது ஆச்சரியமான விடையம்தான்.

## 90 வது பிறந்த நாள் வாழ்த்து

**திருமதி ஐயாத்துரை பொன்னம்மா** 18.03.2017

எங்கள் பொன் அம்மா



90 வது பிறந்த நாள் வாழ்த்து
மீசாலை கிழக்கை சேர்ந்த திருமதி ஐயாத்துரை பொன்னம்மா அவர்கள் 18.03.2017 அன்று 90 வது அகவை காண்கிறார்.
பதினொரு பிள்ளைகளை அன்புடன் சுமந்த தாயின் 90 வது அகவை. அட்டலட்சுமிகளாக (8) பெண்கள் பத்மாதேவி, விமலாதேவி, (இலங்கை) கமலாதேவி (யேர்மனி) நகுலாதேவி (இலங்கை) சகுந்தலாதேவி (கனடா) புனிதவதி (டென்மார்க்) திலகவதி, பகவதி (திலகவதி) பத்மநாதன் பாரீஸ் பாலகிருஸ்ணன்(யேர்மனி) யோகநாதன் (சுவிஸ்)
41 பேரப்பிள்ளைகள்,63 பூட்டப்பிள்ளைகள்,3 கொள்ளுப்பூட்டன் மார்கள்.
பிறந்த நாளில் பிள்ளைகள் யாவரும் குடியிருந்த கோவிலை தரிசித்து ஆசீர்வாதம் பெறுகின்றனர்.எங்கள் அம்மா பூரண நலத்துடன் வாழவேண்டும் என்று அயராது ஆண்டவனை வேண்டுகின்றோம்.
மகள் கமலாதேவி

**Tel:0178 3747 710 Hamm/ Germany**




April, May,july, Aug ,
மாதங்களில்

லூர்ட்ஸ் மாதா
புனிதப்பயணம்

எம்மக்களின்
வேண்டுகோளுக்கிணங்க
லூர்ட்ஸ் மாதா கோவில்
பஸ்மூலம் செல்ல
ஒழுங்கு செய்துள்ளோம்.

லூர்ட்ஸ் மாதா கோவில்
உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

K.முருகா : 02972 7754
Handy: 0175 850 14 89

# பெண் எனும் பேராச்சரியம்!

**அமரர்.பொ.கனகசபாபதி (கனக்ஸ்)**



நீங்கள் எப்படியோ தெரியவில்லை ஆனால் என்னால், இந்த வயதில் தான் சிந்திக்கத் தொடங்கியுள்ளதால் போலும், பெண்ணினைப் பற்றிப் பிறப்புரிமை யியல் (Genetics) ரீதியாகச் சிந்திக்க ஆச்சரியம் ஆச்சரியமாய் வருகிறது.

ஒரு மனிதனிலே உள்ள இயல்புகள் யாவற்றையும், உயரமோ, குள்ளமோ, கறுப்போ, சிவப்போ,கூர்மூக்கோ ,சப்பை மூக்கோ, சுருட்டை மயிரோ, வணங்கா முடியோ என ஒவ்வொன்றையும் 23 சோடி நிறமூர்த்தங்களில் (Chromosomes) அமைந்த பரம்பரை (Genes) அலகுகள் தான் தீர்மானிக்கின்றன என்பது நீங்கள் அறிந்ததே. ஒருவரிலே உள்ள பரம்பரை அலகுகளின் எண்ணிக்கை கிட்டத் தட்ட 100,000 ஆகும். இருபத்தி நான்கு சோடி நிறமூர்த்தங்கள் என்று சொன்னாலும் கூட அவற்றிலே 23 சோடிகள் மாத்திரமே உடல் இயல்புகளுக்குக் (somatic characters) காரணமானவை. எனவே அவற்றினை தன்மூர்த்தங்கள் (autosomes- குறியீடு-n) என அழைப்பர்.

மற்றைய ஒரு சோடி மட்டும் சற்று வித்தியாசமான தன்மை காட்டுபவையாக உள்ளன. அவற்றிலும் உடல் இயல்புகளுடன் சம்பந்தமான பரம்பரை அலகுகள் காணப் பட்டாலும் கூட அவற்றின் பிரதான தொழில் இலிங்கத் தீர்வையே ( Sex determination) அதாவது பிறக்கப் போகும் பிள்ளை ஆணா? பெண்ணா? என தீர்மானிப்பது இவ்நிறமூர்த்தங்களே. எனவே அவை இரண்டும் அயன்மூர்த்தங்கள் அல்லது இலிங்க நிறமூர்த்தங்கள் ( allosomess- குறியீடு- X) எனப் படுகின்றன. இங்கேதான் நான் சொன்ன பேராச்சரியம் காத்திருக்கிறது. நிறமூர்த்தங்கள் எப்பொழுதும் சோடியாக அமைவதாலே இலிங்க நிறமூர்த்தங்களை XX எனும் குறியீட்டினால் குறிப்பிடலாம். மனித இனத்தின் கூர்ப்பின் ஆரம்பக் காலங்களிலே இவை இரண்டும் அச்சொட்டாக ஒத்திருந்தாலும் பின்னர் அவற்றில் ஒன்று சற்றே போக்கிரித் தன்மை காட்டி அதன் விளைவாக தன்னகத்தே கொண்ட பரம்பரை அலகுகள் பலவற்றை இழந்து சிதைந்து பரிதாபத்துக்குரியதாய் நின்றது. கௌரவம் இழந்த இந்தப் போக்கிரி நிறமூர்த்தத்தை மற்றைய ஓஇ ஒப்புக்குச் சோடியாகக் கொண்டிருந்த போதிலும் இதனுடன் எந்த விதமான இணைதலோ அதன் விளைவாக ஏற்படக் கூடிய பகுதிப் பரிமாற்றமோ செய்ய முன்வராமையால் இந்நிறமூர்த்தம் கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரியாகவே வாழ வேண்டிய கொடுமை. இதன் கையாலாகாத தன்மையைப் பிட்டுக் காட்டும் முகமாக இதனை Y எனும் குறியீட்டினால் பரம்பரையியலறிஞர்கள் குறித்தனர்.



அடுத்ததாக ஒரு பெரும் பிரச்சனை! இந்த அவைக்குதவாத Y நிறமூர்த்தத்தை எங்கே கொண்டு போய் குப்பை கொட்டுவது.? " செல்லும் செல்லாததற்குச் செட்டியார் வீடு" என்பார்கள். எனவே, ஆண்வர்க்கத்துக்கு முதல் அடி விழுந்தது. Y நிறமூர்த்தம் ஆணின் ஏகபோக உரிமையாயிற்று. பெண்ணியம் பேசுபவர்கள் கவனியுங்கள், அன்றே பெண்ணுக்கு கௌரவமான அந்தஸ்து கொடுக்கப் பட்டுள்ளது என்பதை.

அன்று தொட்டு கருக்கட்டப்படுகையில் XX நிறமூர்த்தம் வருமானால் குழந்தை பெண்ணாகவும், XY வந்தால் குழந்தை ஆணாகவும் விருத்தியுறுகிற நியதி ஏற்பட்டது. நிறக்குருடு, குருதி உறையாமை, மாலைக்கண், வழுக்கை போன்ற இயல்புகள் X நிறமூர்த்தத்தில் அமைந்த பரம்பரை அலகுகளால் தீர்மானிக்கப் படுபவை. எனவே, அவை இலிங்கம் இணைந்த இயல்புகள் எனப் படுகின்றன. Y நிறமூர்த்தத்தில் பரம்பரை அலகுகள்? அண்மைக் காலம் வரை குடும்பங்கள் சிலவற்றில் பிரச்சனை ஏற்படக் காரணமான செய்தி ஒன்றைப் பிறப்புரிமையியலாளர் கூறி வந்தனர். சில ஆண்களிலே காதுச் சோணையில் மயிர் காணப் படுகின்றதை கண்டிருப்பீர்கள்.

இந்த இயல்புக்குரிய பரம்பரை அலகு Y நிறமூர்த்தத்திலேயே அமைந்துள்ளது என்றனர். அப்படியாயின் இவ்வியல்பு தந்தையில் இருந்தால் மகனில் கட்டாயமாக இருக்க வேண்டும். அப்படிக் காணப்படாவிட்டால் தாயின் கற்பு நெறியிலே சந்தேகம் ஏற்படக் கூடிய நிலை ஏற்பட, அது பல பிரச்சனைகளுக்கு வித்திடலாம். இது பிழையான தகவல் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

ஒரு முக்கிய தகவல், (ஆண்களுக்கு மாத்திரம்) Y நிறமூர்த்தம் சிதைவடைந்ததால் அது தற்பொழுது X நிமூர்த்தத்தின் மூன்றில் ஒரு அளவு பரிமாணத்திலேயே உள்ளதாம். போகிற போக்கைப் பார்த்தால் அது ஒரு காலத்திலே முற்றாகவே இல்லாமல் போகிற சாத்தியம் நிறையவே உண்டு. அப்போ ஆண்களின் கதி? கவலைப் படாதீர்கள். அது ஏற்பட இன்னும் பல தலைமுறைகள் செல்லும்.

நாம் அப்போ உயிர் வாழ்ந்தால்தானே அந்தக் கவலை!

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பிறப்புரிமை அமைப்பிலே உள்ள வேறுபாடு வெறும் ஒரு ஓ நிறமூர்த்தம் மட்டுமே. இந்த ஒரு சிறு வேறுபாடு எத்தகைய பாரிய வித்தியாசங்களுக்குக் காரணமாக அமைகிறது என எண்ணும் போது ஆச்சரியமா யில்லை? வெறும் பாலியல் சம்பந்தமான வேறு பாட்டுடன் நின்று விட்டால் பரவாயில்லையே! வேறு எத்தனை வேறுபாடுகள்!

பாலியல் வேறுபாடுகள் இருவகைப் படும். அவை முதல் இலிங்க இயல்புகள் ( primary sex characters) துணை இலிங்க இயல்புகள் ( secondary sex characters) பெண்ணிலே பிறக்கும் பொழுதே காணப் படும் சூலகம், கருப்பை, யோனி போன்றவை முதல் இலிங்க இயல்புகள். மார்பகம் போன்ற துணை இலிங்க இயல்புகள் பின்னர் விருத்தியுறுபவை. இவற்றுக்குக் காரண மாக அமைபவை சூலகம் சுரக்கின்ற புறோஜெஸ்ரறோன் ( Progesterone) ஈஸ்றோஜென் ( estrogen) போன்ற ஓமோன்கள் (hormones) ஆகும்.

ஒரு நிஜமான கதை சொல்கிறேன். கேட்கிறீர்களா? 1967ஆம் ஆண்டிலே வினிப்பெக் நகரிலே (கனடா) றெயிமர் தம்பதிகளுக்கு ஒத்த இணைகளாக இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர். குழந்தைகளுடைய ஆண் உறுப்புக்களில் முன்தோல் மூடியபடி காணப் பட்டமையால் முன்தோலை அகற்றும் பொருட்டு வைத்தியர் ஜீன் மேரி என்பவரிடம் சென்றனர். வைத்தியர் வெறுமனே அறுவைக் கத்தியைப் பாவித்து அகற்றுதற்குப் பதிலாக மின்காந்தமுறையால் எரிக்க முற்பட்டார். விளைவு?

ஒரு பிள்ளையினுடைய ஆண் உறுப்பு பஸ்மமாகிவிட்டது. பரிதாபம். கொடுமை இனிமேல்த் தான்.

தொடர்ச்சி 24ம் பக்கம்


ஆயுள்வேத வைத்திய நிலையம்

சுகம்! அது நிரந்தரம்!!

டாக்டர்.ஆனந்தி B.S.M.S, A.M.P, S.M.P., R.M.P (Ind) Dipl.Ayurveda(Germany)




எமது வைத்தியத்தில் சிறப்பு பக்கவிளைவுகள் ஏதும் கிடையாது.

கடந்த 18 வருட காலமாக ஆயுள்வேத சித்தவைத்தியத்தில் அனுபவமும் நிபுணத்துவமும் பெற்ற வைத்தியக்கலாநிதி Dr.ஆனந்தி அவர்கள் தமது குழுமத்துடன் நடத்திவரும் அரச அங்கிகாரம் பெற்ற வைத்திய நிலையம்.

நீரிழிவு நோய் (Diabetes)
இரத்த அழுத்தம் (Blood pressure)
அஸ்மா சளித்தொல்லை,இருமல்
மூட்டுவலி, கை, கால், உழைவு, செமிபாட்டுப்பிரச்சினை,
தோல்வியாதி, சிறுநீரகக்கோளாறு.
உடற்பருமன் பிரச்சினை
மற்றும் சலரோகத்தால் ஏற்படும்
ஆண்மைக்குறைபாடுகள்
அனைத்தும் பக்கவிளைவுகள்
அற்றமுறையில்
குணப்படுத்தப்படும்.

Tel:02751 427 9575


Ayurveda Praxis-Am Baumrain 06 / 57319 Bad Berleburg

Möbile: 0175 75 85 952

## பெண் எனும் பேராச்சரியம்

23ம் பக்கத் தொடர்ச்சி






அமெரிக்காவில் ஒரு அரைக்கிறுக்கனான வைத்தியர் ஜோன் மனி என்பவர் இயற்கைக்கும் ( Nature) ஊட்டத்துக்கும் ( Nurture) இடையே ஏற்படும் இடைத்தாக்கம் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருக்கும் பாலியலாய்வாளர் (sexologist). அவர் தனது ஆய்வுக்காக ஒத்த இணைகளான இரு ஆண்களைத் தேடிக் கொண்டிருந்தார். ஒரு பிள்ளையை ஆணாகவும் மற்றையதைப் பெண்ணாகவும் வளர்க்க திட்டமிட்டிருந்தார். றெயிமர் தம்பதிகள் அவரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர். அவருக்கோ கொள்ளை ஆனந்தம். இப்படியான ஒரு அற்புதமான இணைகள் கிடைத்து விட்டதே. றெயிமர் தம்பதிகளுக்கோ தம் துன்பத்துக்கு ஒரு முடிவு வரவுள்ளதே என்ற நிம்மதி. உடனடியாக ஆண்குறியிழந்த குழந்தையின் விதைகள் அறுவைச் சிகிசை மூலம் அகற்றப் பட்டன. புறூஸ் என்ற அவன் பெயர் பிறெண்டா என மாற்றப் பட்டு பெண்ணாக வளர்க்கப் படுகிறான். பிறெண்டாவுக்கு எத்தனையோ சித்திர வதைகள், அறுவைகள், பெண்ணுக்குரிய ஓமோன் ஊட்டல்கள் ஆனால் என்ன பிரயோசனம். அவள் பெயரில் மாத்திரமே பெண். காரணம்? பெண்ணின் துணை இலிங்க இயல்புகளை அவளுக்கு ஊட்டப் பட்ட ஓமோன்கள் உருவாக்கியிருக்கலாம். ஆனால் அவளின் முதல் இலிங்க இயல்புக்குக் காரணமாகவிருந்த Y நிறமூர்த்தம் அவளின் ஒவ்வொரு உடற்கலத்திலேயும் உள்ளதே. அதனை எப்படி மாற்ற முடியும்? அதனை மாற்றாத வகைக்கும் ஆண் ஆண்தானே! இறுதியில் வைத்தியர் மனி, மனிதனாகி தன் தோல்வியை ஒப்புக் கொள்கிறார்.

பிறெண்டா மீண்டும் ஆண் ஆகிறார். தன் பெயரை டேவிட் என மாற்றி 1990ஆம் ஆண்டிலே ஜேன் எனும் பெண்ணை மணந்து தாம்பத்திய வாழ்க்கை மேற் கொள்கிறார். துர்ரதிட்டம் ஆண்குறியோ, விதையோ இல்லாமலேயே வாழ்கிறார்.

X நிறமூர்த்தத்திலே ஏறக்குறைய இரண்டாயிரம் பரம்பரை அலகுகள் வரை உள்ளதாகக் கணிக்கப் பட்டுள்ளது. Y இல் ஒரு 20 வரையிலேதான் உள்ளனவாம். X நிறமூர்த்தம் இலிங்கத் தீர்வையுடன் சம்பந்தப் பட்டது என்றும் அதில் உள்ள பரம்பரை அலகுகள் இலிங்கம் இணைந்த இயல்புகளுக்குக் காரணமாய் உள்ளன என்று கூறுகிறார்கள். ஆனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பாருங்கள். இவை எவ்விதம் வந்தன. விந்தை!

1. ஆயுட்காலம்: அலுவலக வேலைப் பழு, வீட்டில் இல்லத் தலைவியாய் ஆற்றும் தொடர் பணி எவ்வளவு தான் பெண்ணின் உழைப்பை சக்கை வாங்கினாலும் கூட ஆண்களிலும் பார்க்கப் பெண்களின் சராசரி ஆயுட்காலம் ஐந்து வருடங்கள் வரை கூடுதலாகவே உள்ளது.

இறப்பு இருவகையினால் ஏற்படலாம். முதுமை ஏற்பட்டு இயற்கையாக இறப்பது ஒரு வகை. நோயினாலோ, விபத்தினாலோ இறக்கின்ற அசாதாரண இறப்பு மற்றைய வகை. இரண்டிலுமே பெண்கள் ஆண்களிலும் பார்க்க சிறப்புத் தேர்வு பெறுகிறார்கள். பெண்ணிலும் பார்க்க நாளாந்தம் அடிப்படை அநுசேப இயக்கங்களுக்காக ஆண் செலவழிக்கின்ற சக்தி அதிகமே. இதனால் முதுமை விரைவில் ஏற்பட வாய்ப்புண்டு.

2.நோயியல் : மாலைக்கண், நிறக்குருடு போன்ற இலிங்கம் இணைந்த வியாதிகள் பெரும்பாலும் ஆண்களிலேயை காணப்பட்டாலும், பெண்களிலும் வரக் கூடிய சாத்தியம் குறைந்த அளவிலே உள்ளதே. இவை இலிங்க நிறமூர்த்தங்களில் அமைந்த இயல்புகள் எனவே ஆண்களில் வருவதைப் பெரிது படுத்த முடியாது. ஆனால் இதயக் கோளாறு, பெண்களிலும் பார்க்க ஆண்களில் அதிகமாயிருப்பதற்கு என்ன காரணம்? பெண்களிலே சுரக்கப் படுகின்ற ஈஸ்றோஜென் காரணமோ எனச் சந்தேகம் எழுகிறது. இதயச் சுவருக்கு குருதி வழங்கும் முடியுரு நாடி (coronary artery) அடைபடுமாயின் மாரடைப்பு (Heart attack) ஏற்படும்.

## தாடிக்கார ஆசாமி.

(50 வார்த்தைகளுக்குள் ஒரு குறும் கதை)

**கே.எஸ்.சுதாகர்**



தனது வீட்டுக் கராஜை அழகு நிலையமாக மாற்றி தொழில் செய்து கொண்டிருந்தாள் பிரவீனா.
ஒருநாள் தாடிக்காரர் ஒருவர் தன்னை அழகுபடுத்த அங்கே வந்தார்.

தலைமுடி வெட்டியாயிற்று. தாடியை அழகுபடுத்திக் கொண்டிருக்கும் போது பிரவீனா மயங்கிக் கீழே விழுந்தாள்.

தாடிக்காரர் எழுந்து ஓட்டம் எடுத்தார்.
மயக்கம் தெளிந்ததும்,
“அவர் எனது முன்னாள் காதலன்” என்றாள் பிரவீனா.

இந்நாடி பாதிக்கப் பட்ட ஆண்களுக்கு ஈஸ்றோஜென் கொடுக்கப் பட்டபோது இதயச் சுவருக்கு குருதி விநியோகம் சீரடைந்ததை ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். ஆண்களுக்கு உயிர் கொடுக்கும் வல்லமை கூட பெண்ணினத்திடம் தான் உள்ளதோ?

உளச்சோர்வு (Depression) ஆண்களிலும் பார்க்கப் பெண்களிலே கூடுதலாக உள்ளது என்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். ஆண்களிலும் மும்மடங்கு அதிகமான பெண்கள் உளச் சோர்வினுக்கு ஆளாகின்றனர். எல்லா ஆதங்கங் களையும் உள்ளத்திலே அடக்கிப் பெறுமை பேணுதலால்த் தான் இந்நிலை என எண்ண வேண்டியுள்ளது. பெண்களிலும் பார்க்கப் பன்மடங்கு அதிகமா செறற்ரோனின்
(Serotonin) எனும் இரசாயனப்பதார்த்தத்தை ஆண்களின் மூளை சுரக்கிறதாம். இது உறக்கம், வன்முறை நடத்தை (Aggressive behaviour) போன்றவற்றுக்குக் காரணமாய் அமையும். ஆண்கள் தம் ஆதங்கங்களை தமது வன்முறை நடத்தையால் போக்கிக் கொள்கின்றமையால் உளச் சோர்வு அதிகம் பீடிப்பதில்லை என எண்ண இடமுண்டு.

3.நிர்ப்பீடனம்: ஆறு வயதளவிலேயே ஆண்களிலும் பாரக்கப் பெண்களுக்கு பற்றீரியா, வைறஸ் மற்றும் ஒட்டுண்ணிகளை எதிர்க்க வல்ல பிறபொருள் எதிரிகள் (Antibodies) கூடுதலாக உள்ளன என அண்மைக்கால ஆய்வுகள் ஊர்ஜிதம் செய்துள்ளன. ஆச்சரியம்தான்! ஆனால் இது இயற்கை பெண்களுக்கு ஈந்த நற்பேறு. பெண் என்பவள் கற்பம் தரித்தல், மகப்பேறு, பாலூட்டல், குழந்தை பராமரித்தல் எனும் பணிகளை மேற்கொள்ளும் போது ஏற்படக்கூடிய அழுத்தங்களை எதிர்கொள்வதற்குரிய உடல் நலம் பெறும் பொருட்டே அவளில் பிறபொருள் எதிரிகள் அதிகம் இருக்குமாறு இயற்கை உதவிற்று என்கிறார்கள் ஆய்வாளர்கள்.ஒரு பெண் கற்பமுற்றிருக்கின்ற பொழுது அவளின் உடலுள்ளே வேறொரு அந்நிய உடல் உள்ளது. அவளது நிர்ப்பீடனத்தொகுதி அதனை அழித்துவிடவேண்டும். அதுதான் நியதி. இதனால் கருச்சிதைவு ஏற்படமுடியும். கருக்கட்டப்பட்டதும், ஆச்சரியகரமாக அவளது நிர்ப்பீடனத் தன்மை குறைகிறது. சிசு காப்பாற்றப் படுகிறது ஆனால் தாயின் நிர்ப்பீடனம் குறைக்கப் பட்டமையால் அவர் நோய்க் கிருமிகளினால் தாக்கப்படும் அபாயம் உள்ளது என்பது உண்மையே. பிள்ளை பிறக்கின்றபோது தாயின் நிர்ப்பீடனம் பழைய நிலையினை அடைவதோடு மாத்திரமல்லாது தாயினூடாகச் சிசுவிற்கும் சென்று அதற்கும் நோயினைத் தாங்கும் சக்தியைத் தருகிறது.” சேய்க்கு வரும் நோய்க்கு தாய்மருந்து உண்பது போல்” என்ற ஒரு பழைய பாடல் ஞாபகம் வருகிறதா? பெண் ஆச்சரியத்துக்குரியவள் தானே!

AMMA's food
Sri Lankan & South Indian Specialities

அம்மா'ஸ் உணவகம்

அமைதியாகவும், ஆனந்தமாகவும், பிரியாணி,
கொத்துறொட்டி, இடியப்கொத்து.
தோசை, இட்டலி, மசாலத்தோசை, பாலப்பம்.
இன்னும் ...நீங்கள் விரும்பியவகை
உணவுகளை உண்டு மகிழ்ந்திட

Amma's Food

சுடச் சுட சுவையுடன்
அம்மாவின் சமையலுக்கு
ஈடானது எங்கள்
உணவுகள்!



Rheinische str.80 A - 44137 Dortmund Tel:0231 33 89 86 91

# பெண்களை மையப்படுத்தும் திரைப்படங்கள் எங்கே?

கோ. தனஞ்ஜெயன்


சூரியகாந்தி

பெண்களை முதன்மைப்படுத்தும் திரைப்படம் அரிதினும் அரிதாக வெளிவருகிறது. அப்படியிருக்க அதுபற்றிய சொல்லாடலும் தமிழ்ச் சூழலில் அரிதாகவே இருக்கிறது.

ஆனால் இந்திப் பட உலகில் பேஷன், நோ ஒன் கில்ட் ஜெஸ்ஸிகா, த டர்ட்டி பிக்சர், ஹீரோயின், காஹானி, இங்க்லிஷ் விங்கிலிஷ், இஷ்கியா, குலாப் கேங், ஹைவே, குயீன் என பல படங்கள் வெற்றி பெறுகின்றன. கான்சி, பாபீ ஜாஸூஸ், மேரீ கோம் என பல படங்கள் தயாராகி வருகின்றன. தமிழில் மட்டும் ஏன் இது நடப்பதில்லை? இந்தக் கேள்விக்கான பதிலைப் பார்க்கும் முன், தமிழில் வெற்றி கண்ட, பெண்களை மையப்படுத்திய படங்களைப் பற்றி பார்ப்போம்.

### ஒரு சாதனைப் பட்டியல்





அன்னக்கிளி

1938-ல் கே.சுப்ரமணியத்தின் சேவாசதனம் என்ற படம் தொடங்கி, சகுந்தலா, கண்ணகி, மீரா, மணமகள், அவ்வையார், அடுத்த வீட்டு பெண், கொஞ்சும் சலங்கை, அன்னை, நானும் ஒரு பெண், வெண்ணிற ஆடை, இதய கமலம், சித்தி, எங்கிருந்தோ வந்தாள், வெகுளி பெண், அரங்கேற்றம், சூரியகாந்தி, அவள் ஒரு தொடர்கதை, அவளும் பெண் தானே, அன்னக்கிளி, பத்ரகாளி, அவர்கள், அவள் அப்படிதான் என்று கருப்பு வெள்ளை காலத்தில் ஒரு சாதனைப் பட்டியலே போடலாம். சினிமா வண்ணம் பூசிக்கொண்ட பிறகு, நீயா, தண்ணீர் தண்ணீர், அச்சமில்லை அச்சமில்லை, அக்னி சாட்சி, விதி, புதுமைப் பெண், சம்சாரம் அது மின்சாரம், பூவே பூச்சூடவா, சிந்து பைரவி, ஒரே ஒரு கிராமத்திலே என பல படங்கள் 1990 வரை பெண்களை மையப்படுத்தி வந்தன. இந்த நிலை 1991 முதல் மாறத் தொடங்கி, உன்னிடத்தில் என்னை கொடுத்தேன், மிருகம், பூ, ஆரோஹணம் என வெகுசில படங்களே அவ்வாறு பெண்களை மையப்படுத்தின.

கடந்த 20 வருடங்களில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன?

### தொலைக்காட்சியின் ஆட்சி

தனியார் தொலைக்காட்சிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டவுடன் பெண்களின் அனேக நேரங்களை தொலைக்காட்சித் தொடர்கள் எடுத்துக்கொண்டன. இதனால் பெண்கள் திரையரங்குகளுக்கு வருவது குறைந்துவிட்டது. மாலையில் பெண்கள் தொலைக்காட்சித் தொடர்களிலும், மற்றும் உள்ள வீட்டு, அலுவலக வேலைகளிலும் பிஸியாக இருப்பதால், சினிமா அவர்களுக்கு இரண்டாம் பட்சமாகிறது. பெரிய நடிகர்கள் நடித்த, அல்லது எதிர்பார்ப்பை உருவாக்கும் படங்களை வார இறுதியில் மட்டுமே பார்க்க வருகிறார்கள்.








மேலும் கடந்த 5 வருடங்களில், புதிய படங்களைத் தொலைக்காட்சிகளில் வெளியான 100 நாட்களுக்குள்ளாகவே ஒளிபரப்ப ஆரம்பித்தவுடன் முக்கியமான,பேசப்படும் படமாக இருந்தால் மட்டுமே திரையரங்குக்கு வருவது என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். எஞ்சிய படங்களைத் தொலைக் காட்சியில் பார்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் அநேகம் பேருக்கு வந்துவிட்டது.








This Offer Valid Untill 31st March 2017
Lebara play
KERVEN GMBH
Lebara Play ல் மட்டுமே பார்த்து மகிழுங்கள்
தமிழ்
IBC தமிழ்
IBC இசை
சக்தி TV
Exclusive Online Offers:
Kerven GmbH இன் 5 ஆண்டு நிறைவை முன்னிட்டு எமது நிறுவனம் வழங்கும் சிறப்பு சலுகைகள்!
1) Lebara play வாங்கும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் 20€ விசேட விலைக் கழிவு அல்லது மிக்சி இலவசம்.
2) உங்களிடம் தற்போதுள்ள எந்தவொரு Set top box யும் எங்களிடம் கொடுத்து 50€ விசேட விலைக் கழிவோடு எங்களின் Lebara play box ஐ பெற்றுக் கொள்ளலாம்.
Free
முதல் முந்தும் 100 வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே இச் சலுகை
எமது இணையத்தளத்தின் மூலம் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
www.kerven-gmbh.com
Buy Lebara Play today
Tamil TV and movie pack
EUROPA OFFER
Germany
KERVEN GMBH
Rheinische Str. 64
44137 Dortmund
Tel: 023117721820
Mob, : 01738048459
E-Mail:info@kerven-gmbh.com
France
KERVEN GMBH
191 Rue du Faubourg
75010 Paris
Tel : 09 77 19 59 11
Mob : 06 26 06 05 22
+33 754 11 20 20
E-Mail:info@kerven-gmbh.com
Download on the App Store
ANDROID APP ON Google play
Watch on your TV using Apple Airplay or Google Chromcast
Furthermore Queries Please Visit www.kerven-gmbh.com
Bank Details: Postbank Dortmund A/C Name: Kerven GmbH IBAN: DE 3544 0100 4601 8551 1460 BIC: PBNKDEFF



# திருமந்திரமும் வாழ்வியலும் 16

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருமந்திரம் கூறும் பிறர் மனை நாடாமை

பிறர் மனைவியை நாடாமல் இருக்க வேண்டும் என்னும் நல் ஒழுக்கத்தைக் கூறும் பாடல் எண் 201

"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்திற்கு இடர்உற்ற வாரே"

அன்புடைய மனைவி வீட்டில் இருக்க மற்றொருவருக்கு உரிமையான பிறன் மனைவியை விரும்பும் இளைஞர் செயல் வீட்டில் காய்த்துத் தொங்கும் பலாப்பழத்தைத் தின்ன முடியாமல் எங்கோ பழுத்துக் கிடக்கின்ற ஈச்சம் பழத்திற்கு ஆசைப்பட்டு அவதிப்படுவது போலாகும்.
மனைவி இருக்க மற்றவளை விரும்பலாமா எனக் கூறும் பாடல் எண் 202

"திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தம் என்றெண்ணி அறையில் புதைத்துப்
பொருத்தம் இலாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் கால்அற்ற வாறே"

நன்றாக உரமிட்டு, நீர் பாய்ச்சிப் பாதுகாத்து வளர்த்த சுவைமிக்க மாமரத்தின் பழத்தைப் பொன்போல் எண்ணி அறைக்குள் போட்டுப் பூட்டி வைத்துவிட்டு, உண்ணத்தகாத புளிய மரத்தில் ஏறி அதைப் பறித்து உண்ணத்துடிக்கும் அறிவற்றவர்கள், மரத்தில் ஏறி கீழே விழுந்து காலை முறித்துக் கொண்டதைப் போன்ற அறிவீனம், அழகிய மனைவி வீட்டில் இருக்க அவளை ஒதுக்கிவிட்டு அடுத்தவன் மனைவி மேல் ஆசைப்பட்டு, அவளை அடையப் போய் அவமானப்பட்டுக் காயப்படுவது, கவலைப்படுவது.
ஆசை யாரை விட்டது என கூறும் பாடல் எண் 203

"பொருள் கொண்ட கண்டனும் போதத்தை ஆளும்
இருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் றோரும்
மருள்கொண்ட மாதர் மயல் உறுவார்கள்
மருள் கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே"

பொருள் ஆசையால் குடிகளைத் துன்புறுத்தி வரி கொள்ளும், விடாக் கண்டனாகிய கொடுங்கோல் அரசனானாலும், மெய்ஞ்ஞான அறிவை மறைக்கும் ஆணவத்தை வென்று, இருளில் தோன்றிய மின் ஒளியைப் போன்ற இறையருள் துணையால், ஞான மார்க்கத்தில் செல்லும் ஞானிகளானாலும், மருண்ட விழிப் பார்வை உடைய பெண்களிடம் மயங்குவார்கள். இப்படிப் பெண்களிடம் மயங்கும் மனத்தைத் திருத்த முடியாதவராய் இருப்பர்." அதாவது அரசனானாலும், ஆண்டியானாலும் பெண்ணாசையை விடுவது பெரியகாரியம்தான் எனக் கூறப்பட்டுள்ளது.

மகளிர் இழிவு பற்றிக் கூறும் பாடல் எண் 204
"இலைநல ஆயினும் எட்டி பழுத்தால்
குலைநல வாம்கனி கொண்டுஉ ணல் ஆகா
முலைநலம் கொண்டு முறுவல்செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் வீரே"
நச்சுக் காய் பழுக்கும் எட்டி மரம். அதில் இலை தழைகள் பசுமையாகப் பார்க்க அழகாயிருக்கின்றன. அதில் குலை குலையாகக் காய்த்திருக்கும் காய்கள் கூடக் கண்ணிற்கு விருந்தளிக்கின்றன. எனவே எட்டி மரத்தின் காய் பழுத்துக் கனியானால் அதைக் கைக்கொண்டு தின்னலாமா? கூடாது. தின்றால் உயிர் போய்விடும். இதைப்போலத்தான் மார்பழகையும், முல்லை பல் சிரிப்பழகையும் காட்டி மயக்கும் பெண்கள் மேல் செல்லும் ஆசையை விலக்கிக் கொள்ளுங்கள். அவர்களை நாடிச் செல்லும் மனதைக் கோபித்து அவர்களை மறக்கச் செய்யுங்கள்.
கனவின்பம் களவின்பம் எனக் கூறும் பாடல் எண் 205



"மனை புகுவார்கள் மனைவியை நாடில்
சுனை புகுநீர்போல் சுழித்துடன் வாங்கும்
கனவது போலக் கசிந்துஎழும் இன்பம்
நனவது போலவும் நாடஒண் ணாதே"

மற்றவர்கள் வீடுகளுக்குச் செல்பவர்கள் அங்கிருக்கும் மற்றவர் மனைவியை அடைய ஆசைப்பட்டால் அந்த ஆசை ஆழம் காணமுடியாத மலைச் சுனையில் அல்லது சுழித்துப் புரண்டோடும் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கித் தவிப்பதைப் போன்ற துன்பத்திற்கு ஆளாக்கும்.

கனவு காண்பது போலச் சிறிதளவாக அவர்களிடம் பெறும் இன்பம் நனவைப் போல உண்மையானதல்ல. எனவே அதை அடைய ஆசைப்படக் கூடாது.
பொருள் இருக்கும் வரையே போற்றுவர் எனக் கூறும் பாடல் எண் 206

"இயல்உறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
புயல்உறும் புல்லின் புணர்ந்தவர் ஏயினும்
மயல்உறும் வானவர் சாரஇரும் என்பார்
அயல்உறப் பேசி அகன்றுஒளிந் தாரே"

அழகுடைய வாழ்க்கைக்கு ஆதாரமான இளம் பெண் யானை போன்ற பெண்கள், மழை பெய்யத் துளிர்க்கின்ற புல் போல ஆடவருடன் கூடி இன்புற்றிருந்தாலும் அவர்கள் மனம் பொருள் மீதே ஆசை கொண்டலையும். பொருள் உள்ளவர்கள், பெரும் செல்வந்தர்கள் என்றால் அவர்களை "வானுலகத் தேவர்கள் நீங்கள்! வாருங்கள்!" என்றழைப்பர்.

பொருளற்றவர் என்றால் "போ வெளியே" என்று விரட்டியடிக்கவும் செய்வார்கள். பெண்களா இவர்கள்? இல்லை பொருள் கொள்ளும் விலைமாதர்.
உதட்டில் இனிப்பு உள்ளத்தில் கசப்பு எனக் கூறும் பாடல் எண் 207

"வையகத்தே மட வாரொடும் கூடிஎன்
மெய்யகத் தோர்உளம் வைத்த விதியது
கைஅகத்தே கரும் பாலையின் சாறுகொள்
மெய்அகத்தே பெறு வேம்பது வாமே"

உலகில் பெண்களுடன் கூடிப் பெறுவது ஒன்றுமில்லை என மெய்ப்பொருளை உய்த்துணர்ந்த ஞானிகள் கூறும் உண்மையாகும். கையில் பொருள் உள்ளவரை ஆலையில் பிழியப்பட்ட கரும்புச் சாறு போல் பெண்கள் வெளியில் உறவாடுவார்கள். ஆனால் இவர்களின் கள்ள உள்ளம் கசக்கும் வேப்பங்காய் போன்றது.





சிவ பார்வதி ஜோதிட நிலயம்
SHIVA PARVATI ASTROLOGY CENTRE
சோதிட துறையில் 9 வது சந்ததியினரும்
உலகப் புகழ் பெற்ற சோதிட, கைரேகை நிபுணர்
பண்டித் காளிதாஸ்
Pandith Kallidas




உங்கள் பிரச்சினைகளுக்கு
உடனடி ஆலோசனையும் தீர்வும்
நீங்கள் நீண்டகால நோய்யால்
அவதியுறுகின்றீர்களா?
கல்வி, வேலை, வாய்ப்பு பிரச்சினைகள்,
காதல் விவகாரங்கள்,திருமணம்,கணவன்
மனைவி உறவு, பணம் செலவு, காணி

வழக்குகள், உடல் நோய்கள், பிள்ளைப்பேறு,
எந்த விதமான பிரச்சினைகளாக இருந்தாலும்
தீர்வு காணப்படும்.100 வீதம் தீர்வு
உத்தரவாதம் இன்றே எம்மைக்காண
நேரத்தைப் பதிவு செய்யுங்கள்

தொடர்பு மொழி:
தமிழ் கிந்தி ஆங்கிலம் கன்டம் தெலுங்கு
வாரத்தில் 7 நாட்களும்
காலை 9:00 மணி முதல் மாலை 6:00 வரை

Pandith Kallidas
Wilhelm Str.27
59067 Hamm
+49(0) 151 44 921 486
+49(0) 152 15 670 175


வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்களின்
ஆங்கிலம் பிறந்த கதை, இனிக்காதா இலக்கணம், தமிழ்மூலம் ஆங்கிலம்
என 3 நூல்களின் அறிமுக நிகழ்வு எசன் நகர் – யேர்மனி 22.01.2017



எசன் மக்கள் எடுத்த பொங்கல் விழாவில். 22.01.2017


யேர்மனி ஹம் வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலய
கும்பாபிஷேகத்தின் போது 09.2.2017






# பயன் அறிந்து உண்க



## கறிவேப்பிலை

**கலாநிதி பால.சிவகடாட்சம் (கனடா)**

கருவேம்பின் இலை பூ நெய்யில் கதித்த பொன்னிறமதாக
விரைவதாய் வறுத்துப் பின்னர் மிளகு சீரகமோடு உப்பும்
உரைசெயும் கடுகு நல்ல வெந்தயம் உறைப்புமிக்க
வர மிளகாய் மற்றெல்லாம் வரிசையாய்ச் சேர்த்துக் கூட்டே
கூட்டியே சம்பீரத்தின் கொழுங்கனிச் சாறேயாதல்
நாட்டிய எகினில் உற்ற நற் பழப்புளியே யாதல்
ஆட்டிவிட்டு அரைத்துப் பாக்கின் அளவதாய் அந்தி சந்தி
ஊட்டியே பசுமோர் உண்ண ஒழிந்திடும் வாதம் வாயு
நற்சுவையாகும் உண்ண நன்மணம் கொள்ளும் கொண்டால்
பின் சமித்திடவும் செய்யும் பின்னிய மந்தம் போக்கும்
சொற்றிடு தேகத்திற்குச் சுகமதாம் நாளும் உண்பாய்
அற்றம் இல்லாத வீதே அறைந்தனர் பெரியோர்தாமே
பதார்த்த சூடாமணி

இதன் பொருள்: கறிவேம்பின் இலை மற்றும் பூ என்பவற்றை எண்ணெய்விட்டு சற்று வறுத்து எடுத்து அதனுடன் மிள்கு சீரகம் உப்பு கடுகு வெந்தயம் உறைப்புக்கூடிய செத்தல் மிளகாய் என்பவற்றை ஒவ்வொன்றாக அளவுடன் சேர்த்துக்கூட்டி அரைத்துப் பின்னர் எலுமிச்சம் பழச்சாறு அல்லது பழப்புளிச்சாறு விட்டு அரைத்து எடுத்து இந்தப் பச்சடியில் ஒருபாக்களவு காலையும் மாலையும் சாப்பிட்டு பசுமோரும் குடித்துவர வாதம் வாய்வு என்பன ஒழிந்துவிடும்.

நல்ல மணமும் சுவையும் கொண்ட இந்த உணவு சமிபாட்டை ஊக்குவிக்கும். மந்தம் போக்கும். உடலுக்குச் சுகம்தரும். ஒவ்வொரு நாளும் சாப்பிடலாம். ஒரு கெடுதியும் இல்லாதது இது என்று பெரியோர்கள் கூறிவைத்துள்ளனர்.

Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன்– தமிழ்
Tamil- Deutsch
Deutsch- Tamil
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும் புத்தம் புது
டிசைன்களில் தங்க நகைகள்
ஒரே இடத்தில் தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும் குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள் மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
சித்திரம் Tv
எம்மிடம் கிடைக்கும்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main



Gopara Gnanam
Textiles & Jewellery Shop
திருமண பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள், பஞ்சாபிகள்
அனைத்தும் தரமும் மலிவும் ஒரே இடத்தில்
கண்டு அதிசயிக்க ஒரு புடவை மாளிகை
Gopara Gnanam
Tel: 0231/5450028
Mob:01713306542
Rheinische Str. 81
44137 Dortmund



# பெண்கள் தாமதமாக பூப்பெய்துவது நல்லதா?




பூப்பெய்தல் பெண்களுக்கு ஏற்படும் ஒரு இயற்கையான நிகழ்வாகும், ஒரு சிலர் மிக சீக்கிரமாகவும், தாமதமாகவும் பூப்பெய்துகின்றனர். பெண்கள் தாமதமாக பருவம் அடைவது அவர்களின் ஆரோக்கியத்திற்கு நல்லதா அல்லது ஆபத்தா என்பதை பற்றி பார்ப்போம்.

பெண்கள் தாமதமாக பூப்பெய்துவது நல்லதா என்பது குறித்து ஆராய்ச்சிகள் செய்த போது, பெண்கள் அவர்களின் 12 வயதிற்கு மேல் பூப்பெய்து, 50 வயதிற்கு மேல் மெனோபஸ் நிலையை அடைந்தால் அவர்கள் 90 வயது வரை ஆரோக்கியமாக வாழலாம் என்று ஆராய்ச்சியில் கூறுகிறது.

மேலும் தாமதமாக பூப்பெய்தும் பெண்களுக்கு இதய நோய்கள் வரும் வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ளதாகவும், தாமதமாக மெனோபஸ் அடையும் பெண்களுக்கு உடல்நிலை மிகவும் ஆரோக்கியமாக இருக்கும் என்று கூறுகின்றார்கள்.

தாமதமாக மெனோபஸ் நிலையை அடையும் பெண்களுக்கு இதயம் வலுவாக இருக்க அவர்களின் உடம்பில் ஹார்மோன்கள் சீராக தூண்டப்படுகின்றது.

இதனால் அவர்களின் உடல்நிலை எப்போதும் ஆரோக்கியமாக இருக்கும். ஆனால் விரைவில் பூப்பெய்தும் பெண்கள் புகைப்பிடித்தால், அவர்களின் இதயம் மற்றும் கருப்பையில் பாதிப்புகள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

## பெண்களிடம் இருக்கும் உலக அதிசயங்கள்!



ஒரு சூழல்நிலை, ஒரு சந்தர்பத்தை ஆண்கள் கையாள்வதற்கும், பெண்கள் கையாள்வதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. இதுபோல ஆண்களிடம் ஒப்பிடுகையில், பெண்கள் மத்தியில் இருக்கும் அதிசய குணங்கள் என்னென்ன என்று பார்க்கலாம்...

**அதிசய குணம் 1**
நீங்கள் அந்த பெண்ணுடன் பேசுவது, அவரது அழகான தோழியை கரெக்ட் செய்ய என்பது அவருக்கு தெரிந்துவிட்டால் பத்திரகாளியாக மாறிவிடுவார்கள். பெண்களால், ஒரு ஆண், தன் முன்னிலையில் வேறு பெண்ணுக்கு முக்கியத்துவம் அளிப்பதை ஏற்றுக் கொள்ளவோ, பொறுத்துக்கொள்ளவோ முடியாது.

**அதிசய குணம் 2**
சராசரியாக பெண்கள் ஓர் ரகசியத்தை பாதுகாக்கும் நேரம் 47 மணிநேரம் 16 நிமிடங்கள்.

**அதிசய குணம் 3**
ஓர் ஆய்வில் சராசரியாக பெண்கள் வருடத்திற்கு 120 மணிநேரத்தை கண்ணாடி பார்பதற்கு பயன்படுத்துகிறார்கள் என அறியப்பட்டுள்ளது. இந்த கணக்கை வைத்துப் பார்த்தல் அவர்களது ஒட்டுமொத்த வாழ்க்கையில் ஐந்து வருடத்தை கண்ணாடி முன்பே கழிக்கிறார்கள் பெண்கள்.







TA-SERVER
KLÖNNESTR. 73, 44143 DORTMUND
TEL.: 0231-3387 2624 - HANDY: 0176 860 42401
Seit 9 Jahren
TA-Server
binary solution
TA-Kasse
Umsatz
Artikelbestand
Live Monitoring
Verkaufsprokoll
Registrierkasse, PC-Kasse,
PC-Kasse für Pizzeria mit Anrufserkennung
Alarmanlage
Video-Überwachung
Onlinebestellungsseite für Pizzeria
தொடர்புகளுக்கு: அ. உதயன்


Tel: 02349020540
fax: 0234 2878873
TITANIC
Bochum நகரில்...
International Restaurant
சிறு கொண்டாட்டம் ஆனாலும்
சுவையான பெருவிருந்து அளித்து மகிழ்விப்போம்!
ஆசிய நாட்டு உணவுகள், மேக்சிக்கான்,இத்தாலிய நாட்டு உணவுகள் ஏதுவானாலும், சுவைக்கு பெயர் பெற்ற உணவகம்.
100 இருக்கைகளுடன் அழகான இனிய வரவேற்புடன் அமைந்த உணவகம். ஆசிய உணவுகள் குறிப்பாக இந்திய இலங்கை உணவுகள் 20 விருந்தினர்களுக்கு மேல் வருகைதரும் போது சிறப்பான Buffet சுடச்சுட வழங்கப்படும் (Ab14.99€)
தினமும் எமது உணவகத்தில் மேக்சிக்கான்,இத்தாலிய நாட்டு உணவுகளே தயாரிக்கப்படினும் நம்மவர்களின் சிறப்பு விருந்துகளின் போது, இலங்கை, இந்திய உணவுகள் தரமாக சுவையாக செய்து தரப்படும்.
எனவே உங்கள் பிறந்தநாள்,திருமணநாள் மற்றும் ஒன்று கூடல்கள் எதுவானாலும் எம்மை நாடுங்கள்! எமது சுவைமிக்க உணவுடன் கூடி மகிழுங்கள்
E-Mail: info@lieferando.de
INTERNATIONAL FOOD SERVICE
TITANIC
100 இருக்கைகளுடன் அழகான உணவகம்
Öffnungszeiten
Montag, Mittwoch - Freitag
11:00 - 14:30, 17:00 - 22:45
Samstag, Sonntag 11:00 - 22:45
Inhaber: Kasippillai Sooriyakumar
TITANIC Internationales Restaurant / Unter Str 91 / 44892 Bochum

# இன்றைய பெண்களின் சமாந்தர வாழ்வு

புவனம் தருமரட்டணம்



சில சத்தங்கள் எமது அன்றாட வாழ்கையில் பழக்கப்பட்டவையாக இருந்தன. அவைகளைக் கேட்டு தான் நாமே கண்விழிப்போம்! கொக்கரக் கோ என்ற கூவலும், ம்மா ..ம்மா என்ற சத்தமும், இது மட்டுமல்லாமல் அம்மா அம்மியில் காலையில் தேங்காய் சொட்டுகள், வெங்காயம் மிளகாய் என்று சேர்த்து அரைக்கும் போது டொக்கு டொக்கு என்ற சத்தமும் அதன் வாசனையும் சூரியன் வந்து எம்மை எழுப்பும் முன் எழுப்பிவிடுகின்றன!.
இப்போ அப்படியா? நவீன இயந்திரங்கள் அதிகரித்து, இயற்கை சற்று மறைந்து மாறி விட்டது!. இவையெல்லாம் மாறும் போது நாம் மனிதர்கள் மாறுவதில் என்ன ஆச்சர்யம் இருக்கப்போகிறது.

எமது தேவைக்கேற்ப புதுப் புது விசயங்களை தேடிக் கண்டுபிடித்து செய்கிறார்கள். முன்பு இருந்த சமுதாயம் இப்போ நன்கு மாறிவிட்டது என்று சொன்னால் அதுமிகையாகாது! சைக்கிள் போன ரோட்டில் கார்கள் ஓடுகின்றன! ஏன், பறக்கும் காரே வரப்போகின்றது என்று ஒரு கேள்வி!
காலத்துக் கேற்ப பெண்கள் தங்களை மாற்றிக் கொள்வது இயல்பு தானே! இதை நாம் யார் பிழை என்று சொல்ல முடியும்?
முன்பெல்லாம் ஒரு பெண் திருமணமாகும் வரை தான் வேலைக்குப் போவாள், அல்லது பிள்ளைப் பேறுமட்டும் போவாள். திருமணத்திற்குப் பின் அதிகம் கூட்டுக்குடும்பமாக இருப்பதால் அவளுக்கு மாமா, மாமி, பாட்டி, நாத்தனார் என்று கவனிக்கவே நேரம் சரியாகவிருக்கும்.

முன்பு இப்படியிருந்த பெண்கள் இப்போது சமுதாயமாற்றத்தால் அவர்களும் மாற வேண்டிய கட்டாயம்! சில வீடுகளில் வேலைக்குப்



போனால் தான் கட்டுபடியாகிறது! பிள்ளைகளுக்கு ரியூஷன், அந்த வகுப்பு இந்த வகுப்பு என்று காலில் சக்கரம் போட்டுக் கொண்டு பிள்ளைகளையும் இழுத்துச் செல்லவண்டிய ஒரு கட்டாயம்! ஒரு ஆண் மட்டும் வேலை செய்தால் போதாது! பெண்களும் தோழ்கொடுக்க வேண்டிய ஒரு நிலை.

ஆனால் பெரும்பாலும் பெண்கள் கட்டாயத்தின் மத்தியில் வேலைக்கு போவதில்லை, அவர்கள் விரும்பி போகின்றனர். தங்கள் சொந்தக் காலில் நிற்பதை அவசியம் என்று எண்ணுகிறார்கள்! இப்படி ஆணும் பெண்ணும் இணைந்து வீட்டுக்காக பாடுபட்டு வீட்டையும் நாட்டையும் முன்னேற்றுகிறார்கள்! சமுதாய மாற்றத்தால், சம உரிமை, பொறுப்பு, துணிச்சல், சாதித்துக் காட்ட வேண்டுமென உற்சாகத்துடனும் இருக்கிறார்கள். பெண்கள் பல்வேறு துறைகளில் பல சாதனைகளையும் புரிந்து வருகிறார்கள்! தற்போது யாழ்பானத்தில் படிப்பிலும் பெண்கள் மேலோங்கியிருக்கிறார்கள். இப்போது உலகமே உள்ளங்கைக்குள் அடங்கி இருக்கிறது என்றால் சமுதாய மாற்றம் தான். ஆனாலும் என்னவோ தெரியவில்லை, அன்றும் இன்றும் ஆண்களில் பெரிதளவு மாற்றம் இல்லை.
அன்றும் இன்று போல் வீட்டில் அடுப்பெரிய வேலைக்கு சென்றனர், இன்று அவர்களுடைய துணையுடன் சேர்ந்து போகின்றார்கள். இதில் மட்டும் மாறவில்லை இவர்கள்! அன்று நடிகர் சிவகுமார் என்ன கோட் சூட் போட்டாரோ, இன்று அவரது மகன் நடிகர் சூர்யா போடுகிறார். உடையில் கூட மாற்றம் இல்லை! அம்மா உடுப்பு வாங்கப் போனால் அப்பா கடையில் போடப்பட்டுள்ள கதிரையில் அவர்கள் கொடுக்கம் தேநீரைப் பருகிக்கொண்டு காத்திருப்பார். இப்ப மனைவி உடுப்பு வாங்கப் போனால் கணவன் அதேபோல் வாசலில் காத்து நிற்பார். என்ன ஒரு வித்தியாசம் அன்று தேநீர் இன்று கோலா அவ்வளவுதான்.
ஆண்களில் அதாவது இன்றைய கணவன்மார்களின் பெரிய மாற்றம் என்பது மனைவியையும் தன்போல் எண்ணும் மனம் சற்று வந்துள்ளது. அதனால்தான் Girls tours என்று ஒன்று இப்ப குடும்பங்களில் கொடிகட்டிப் பறக்கிறது. அன்று திருமணமான ஒரு பெண்ணோ திருமணமாகாத ஒரு பெண்ணோ தன் தோழியர்களுடன் தனியா உல்லாச விடுமுறைக்குச் செல்ல முடியுமா? இன்று பெண்கள் தாமும் வாழ்ந்து கொண்டு, குடும்பத்தையும் பார்த்துக்கொண்டு ஒரு வித சமாந்தர வாழ்வு வாழ்கின்றார்கள்.



இலியானா

# சமூக வலைத்தளங்களில் நான் பாலியல் தொல்லைகளை சந்தித்து இருக்கிறேன்





இலியானா

சமூக வலைத்தளங்களில் நான் பாலியல் தொல்லைகளை சந்தித்து இருக்கிறேன் என்று நடிகை இலியானா கூறியுள்ளார்.
கதாநாயகிகள் பலர் படப்பிடிப்புகளிலும், பொது இடங்களிலும் ரசிகர்களின் அத்து மீறல்களையும் ஈவ்டீசிங்கையும் சந்திப்பது வழக்கமாக இருக்கிறது. டுவிட்டர், பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களிலும் இந்த தொந்தரவுகளை எதிர்கொள்கிறார்கள்.

நடிகைகள் நயன்தாரா, ஸ்ரேயா, நமீதா, தமன்னா உள்ளிட்ட பல நடிகைகள் விமான நிலையங்கள், பொது நிகழ்ச்சிகள் போன்றவற்றில் ரசிகர்களின் தொல்லைகளில் சிக்கி இருக்கிறார்கள். இந்தி நடிகை தீபிகா படுகோனே ஒரு விழாவுக்கு வந்தபோது ரசிகர்கள் பிடியில் சிக்கி மீட்கப்பட்டார்.

கத்ரினா கயீப் கொல்கத்தா விழா நிகழ்ச்சியிலும் சோனம்கபூர் சினிமா தியேட்டரிலும் சோனாக்சி சின்ஹா கூட்டத்திலும் ரசிகர்களால் கசப்பான அனுபவங்களை சந்தித்துள்ளனர்.

இதற்காக பல நடிகைகள் தனியார் பாதுகாவலர்களை வேலைக்கு வைத்துள்ளனர். பொதுநிகழ்ச்சிகளுக்கு செல்லும்போது இவர்களையும் அழைத்து செல்கிறார்கள். அதையும் தாண்டி ரசிகர்கள் அத்துமீறல்கள் நடந்து கொண்டு தான் இருக்கிறது. பல நடிகைகள் அவற்றை வெளியே சொல்வது இல்லை. சிலர் பொலிஸில் புகார் அளித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கின்றனர்.
நடிகை இலியானாவும் செக்ஸ் தொல்லையை சந்தித்ததாக அதிர்ச்சி தகவலை வெளியிட்டு உள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது,

"பெண்களை பலர் பைத்தியக்காரத்தனமாகவும் கேவலமாகவும் பார்க்கிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். நான் சமூக வலைத்தளங்களில் ஈவ் டீசிங் உள்ளிட்ட செக்ஸ் தொல்லைகளை சந்தித்து நேரடியாகவே பாதிக்கப்பட்டேன்.
அடிக்கடி மோசமான பல தகவல்கள் எனது தொலைபேசில் வந்தன. ஆபாசமாக பேசி குரல் பதிவுகளையும் அனுப்பினார்கள். இது எனக்கு வேதனையை ஏற்படுத்தியது. அதிர்ச்சியாகவும் இருந்தது.

அந்த தகவல் மற்றும் குரல்பதிவுகளை அழித்து விட்டேன். ஒரு பெண்ணாக இதை வெளியில் சொல்வதற்கு சங்கடமாக இருக்கிறது.
இக்கட்டான நேரத்தில் எனது பெற்றோர்கள் ஆறுதலாக இருந்தார்கள். அவர்களால் இந்த செக்ஸ் தொல்லைகளில் இருந்து மீள மனதை உறுதியாக்கிக் கொண்டேன். பெண்களை யாரும் கேவலமாக பார்க்க கூடாது." இவ்வாறு இலியானா கூறினார்.



ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
Westendorf Str.41 - 44287 Dortmund
குறைந்த விலையில் நிறைந்த உணவுப் பொருட்கள்
எமது மலிவு விலைகளை அறிந்துகொள்ள
Web :www.milinimpex.de
Tel: 0231 45 96 17
எமது நிறுவனம்
Mo-Sa 10.00-இருந்து 18.00 வரை
உங்களுக்காகத் திறந்திருக்கும்
Dortmund நகரில்

info@milinimpex.de
பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

## சினிமா நடிகைகள் மட்டும்தான் அழகாக இருக்க முடியும் என்ற காலம் மாறிவிட்டது!


சினேகா



பெண்கள் இன்று வெளியே சென்று சாதிப்பது சவாலான விஷயமாகிவிட்டது என்று நடிகை சினேகா கூறினார். அழகுக் கலை நிறுவனமான வி கேர் நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் நடிகை சினேகாவும் கலந்துகொண்டார்.

அழகுக் கலை சம்பந்தப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்ற 100க்கும் மேற்பட்ட பெண்களுக்கு பட்டமளிக்கப்பட்டது. விழாவில் சினேகா பேசுகையில், இந்நிறுவனத்தின் 10 வது வருட பட்டமளிப்பு விழாவில் பங்குபெறுவதில் மிக்க மகிழ்ச்சி. எல்லாத் துறைகளும் பெண்களுக்கு சவாலான துறைதான். எந்த துறைக்குச் சென்றாலும், பெண்கள் சவால்களை சமாளித்துதான் முன்னேற முடியும்.
அழகுக் கலை நிபுணர்கள் மருத்துவர்களுக்கு நிகரானவர்கள். அழகுக் கலை நிபுணர்கள் கையில் அதிக திறமை உள்ளது.


அவர்கள் நினைத்தால் இந்த உலகத்தையே அழகாக மாற்ற முடியும். இங்கே கற்றுக்கொடுத்த அனைத்து விஷயங்களையும் நீங்கள் சரியான வழியில் பயன்படுத்த வேண்டும். சினிமா நடிகைகள் மட்டும்தான் அழகாக இருக்க முடியும் என்ற காலம் மாறிவிட்டது.
இப்போது நீங்கள் நினைத்தால் உலகத்தில் உள்ள அனைவரும் அழகாகலாம். நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களை சரியான வழியில் பயன்படுத்தி உதவிட வேண்டும்," என்றார்.



## தனுஷிடம் இருந்து அந்த ஒரேயொரு விஷயத்தை மட்டும் கற்றுக்கொள்ள ஆசை: அமிரா

தனுஷின் அனேகன் படம் மூலம் கோலிவுட் வந்தவர் அமிரா தஸ்தூர். அதன் பிறகு ஆளையே காணவில்லை. இந்நிலையில் சந்தானம் ஜோடியாக ஓடி ஓடி உழைக்கணும் படத்தில் நடித்து வருகிறார். என்ன அமிரா ஆளையே காணோம் என்று கேட்டதற்கு அவர் கூறுகையில், குங்ஃபூ யோகா மான்டரின், இந்தி, ஆங்கிலத்தில் வெளியான குங்ஃபூ யோகா படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த படத்தில் நடித்து முடிக்க கால அவகாசம் ஆனதால் பிற படங்களை ஒப்புக் கொள்ள முடியவில்லை. அதனால் பிரேக் விழுந்துவிட்டது.

சந்தானம் சந்தானம் ஜோடியாக நடிப்பதில் பிரச்சனை இல்லை. அவர் மிகவும் ஜாலியான மனிதர். சந்தானத்தின் முந்தைய படம் சூப்பர் ஹிட்டாகியுள்ளது. அவர் மக்களை சிரிக்க வைக்கிறார். நன்றாக வேலை பார்க்கும் யாருடனும் நான் நடிப்பேன்.
தனுஷ் தனுஷ் கேமராவுக்கு முன்பு வந்தால் கண் இமைக்கும் நேரத்தில் கதாபாத்திரமாக மாறிவிடுவார். அதை தான் அவரிடம் இருந்து கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.
புத்தகம் தனுஷ் நிறைய புத்தகம் படிப்பார். அனேகன் படப்பிடிப்பின்போது வாரம் ஒரு புத்தகத்துடன் அவரை பார்த்துள்ளேன். அவர் பார்க்கத் தான் அமைதியாக இருப்பார் ஆனால் அவருக்கு அனைத்து கிசுகிசுவும் தெரியும் என்கிறார் அமிரா




ஏதோ ஒரு பரபரப்புத்தேவை போலும்! ஜல்லிக்கட்டு! பின் சசிகலா!! இப்போ பவனா!!!

கொச்சி: நடிகை பாவனாவுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துள்ளதாக செய்திகள் வெளி யாகியுள்ளன. நடிகை பாவனாவை கடந்த வெள்ளிக்கிழமை இரவு 3 பேர் சேர்ந்து காரில் கடத்தி நடிகை பாவனாவை அசிங்கப்படுத்தி அதை வீடியோ எடுத்த விஷமிகள்

2 மணிநேரமாக பாலியல் தொல்லை கொடுத்துள்ளனர். அதை அவர்கள் தங்களின் செல்போன்களில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துள்ளது தெரிய வந்துள்ளது.

பாவனாவை மிரட்டவே புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. சமூகத்தில் பிரபலமாக உள்ளதால் தனது பெயர் கெட்டுவிடும் என பயந்து பாவனா தனக்கு நேர்ந்ததை வெளியே சொல்ல மாட்டார் என்று அந்த கும்பல் நினைத்துள்ளது. பாவனா துணிந்து போலீசில் புகார் அளித்து அந்த 3 பேரையும் அடையாளம் காட்டியுள்ளார். இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் பாவனாவின் முன்னாள் கார் டிரைவர் உள்பட 3 பேரை கைது செய்துள்ளனர். இந்த சம்பவத்தால் மலையாள திரையுலகினர் அதிர்ச்சியும், கோபமும் அடைந்துள்ளனர்.




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
VALUTRANS MONEY TRANSFER
துரித பண மாற்றுச் சேவை!
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
கோடை கால விடுமுறை 2017
பதிவுக்கு முந்துங்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
காதலர்தின வாழ்த்துக்கள் Feb.14
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com


Jasmine Silk House
என்றும் மலிவாக தரமாக திருமணப்
பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள்;
பஞ்சாபிகள்,அனைத்தும் புத்தம்,
புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்
HP:0173 1937 325
Tel:02102 844744
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...
VALUTRANS MONEY TRANSFER
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


வீட்டுக்கடன்
1,0%
வட்டிவீதத்திலிருந்து
நீங்கள் புதிய மனை
அமைக்கவோ, கடன் பெறவோ,
எதுவானாலும் உடனடி உதவி
எங்களிடம் உண்டு
தற்போதைய வீட்டுக்கடனை
அல்லது (தனிநபர்)கடனை
குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"
தொடர்புகளுக்கு:
gothab Finance 0231/53375365 0152/53961138
Rheinische Str. 72, 44137 Dortmund 0231/10876361
Th. Gobinath


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India
Singapore
Malaysia
Thailand
Hong Kong
U.A.E.
K.S.A.
Oman
Qatar
Bahrain
Kuwait
U.K.
France
Germany
Australia
South Africa
Canada
U.S.A.


யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
StaR - Impex
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Kipper Str.3 44147 Dortmund Germany